Vol.6, Issue 9 | Annual Subscription ₹480
Rotary News, February 2024, Chennai

@NewsRotary
/RotaryNewsIndia

பிப்ரவரி 2024

# ரோட்டரி நியூஸ்

இந்தியா
www.rotarynewsonline.org



Rotary

ADVT.

# ROTARY CLUB OF VIRUDHUNAGAR




Rotary
India Literacy Mission
T-E-A-C-H

Successfully Completed...
111 Sessions in
9 Years for
1500+ Teacher Participants from
30+ Schools in Virudhunagar
and counting...

AN UNIQUE INITIATIVE OF RC VIRUDHUNAGAR IN RID 3212... SUSTAINING FOR 09+ YEARS...

ENABLING LIFE LONG LEARNING FOR TEACHERS

Rtn AKS V.R. MUTHU



Rtn Prof R. PANCHANADHAN
Trainer




Rtn V.V.S.K. SHANMUGAM



PG JAYARAMAN UMASHANKAR
Trainer

ROTARY CLUB OF VIRUDHUNAGAR PRESIDENTS

2015 - 16 : Rtn Nirmala Rangasamy
2016 - 17 : Rtn S Janakarajan
2017 - 18 : Rtn R Mariappan
2018 - 19 : Rtn K C Gurusamy
2019 - 20 : Rtn D Vijayakumari
2020 - 21 : Rtn N R Vadivel
2021 - 22 : Rtn K Gayathri
2022 - 23 : Rtn D Pathinettam Padiyan
2023 - 24 : Rtn V V S K Shanmugam

Rotary Club of VIRUDHUNAGAR
RID 3212 | CLUB No. : 015962 | 03.10.1979

IDHAYAM
SAY IDHAYAM • SPELL HEALTH

Teacher Support ~ E Learning ~ Adult Literacy ~ Child Development ~ Happy School

ROTARY CLUB VIRUDHUNAGAR TEACH SESSIONS - Every 1st SATURDAY, Since 2015

# உள்ளே


**12**
போலி சங்கங்கள், உறுப்பினர்கள், எண்கள் வேண்டாம்: RIPN

**16**
தென் தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ரோட்டேரியன்கள் உதவி

**20**
90%க்கும் அதிகமான ரோட்டேரியர்கள் GGகளில் மகிழ்ச்சியாக இருப்பதாக கணக்கெடுப்பு காட்டுகிறது

**28**
RI தலைவர் சண்டிகர் விஜயம்

**32**
33 கிராமங்களுக்கு தண்ணீர் வசதி! தானா ரோட்டேரியன்களின் மகத்தான பணி

**39**
ரோட்டரி தலைமைக்கு துணைவியர்களின் ஆதரவு

**40**
ராணுவ வீரர்களுக்கு தீபாவளி இனிப்புகள்

**46**
தி மேஜிக் ஆஃப் ரோட்டரி 2024–25க்கான தீம்

**48**
முதியோர், மாற்றுத்திறனாளிகளிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்திய RC பாரூச்

**52**
ரே கிளிங்கின்ஸ்மித், உயர்ந்த திறமை கொண்ட ரோட்டரி தலைவர்

**54**
சிர்சியில் ரோட்டரி மருத்துவமனை

**56**
சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய RC தில்லி சௌத்

**60**
10 நாள் காஷ்மீர் முகாமில் 1,200க்கும் அதிகமான அறுவை சிகிச்சைகள்

**62**
மகளிர் தொழில் முனைவோரின் கனவுகள் நனவாகின்றன




## கலகலப்பான புகைப்படங்கள், சுவாரஸ்யமான இன்ஸ்டிட்யூட் கட்டுரைகள்

*ஜனவரி இதழின் அட்டைப் படமாக வெளியிடப்பட்ட பெங்களூரு ஜோன் இன்ஸ்டிட்யூட்டின் நடன நிகழ்ச்சி சிறப்பாக இருந்தது. RI தலைவர் கார்டன் மெக்கினலி தனது செய்தியில், போரிடும் நாடுகளுக்கு இடையே அமைதியைக் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தையும், உலகில் நீடித்த அமைதியைக் கட்டியெழுப்புவதில் ரோட்டரி அமைதி மையங்களின் பங்கையும் நன்கு விவரிக்கிறார்.*

*எடிட்டரின் குறிப்பிலிருந்து பெங்களூரு ஜோன் இன்ஸ்டிட்யூட் சிறப்பாக இருந்தது என்பது தெளிவாக தெரிகிறது. TRF மற்றும் போலியோ நிதிக்காக ஒரு நல்ல தொகை சேகரிக்கப்பட்டதைப் படித்ததில் நான் மகிழ்ச்சியடைந்தேன். TRF அறங்காவலர் பேரி ராசின் இந்த ஆண்டு TRF சேகரிப்புக்காக $500 மில்லியன் இலக்கை நிர்ணயித்துள்ளார், உலக முன்னேற்றத்திற்காக அவரது*




*லட்சியம் நிறைவேற வேண்டும் என்று நாங்கள் வாழ்த்துகிறோம். EAM ஜெய்சங்கரின் பேச்சு, காசாவில் ரோட்டரியின் உதவி இல்லாதது விளக்கப்பட்டது.*

*பிலிப் முலப்போன் M T, RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211*

*ஜனவரி இதழின் உள்ளடக்கத்தைப் கண்டதும் மகிழ்ச்சியாக இருந்தது. ஜோன் இன்ஸ்டிட்யூட் திறம்பட நடத்தப்பட்டது மற்றும் பல்வேறு கலந்துரையாடல்களின் அறிக்கைகளுடன் சுவாரஸ்யமான உள்ளடக்கத்தை வழங்கியது என்பதையும் குறிப்பிடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இன்ஸ்டிட்யூட்டின் புகைப்படங்கள், நாங்கள் ஒவ்வொருவரும் கலந்து கொண்டது போன்ற உணர்வை எங்களுக்கு அளித்தது. நாட்டின் விரைவான முன்னேற்றத்தைப் பற்றி பேசிய EAM S ஜெய்சங்கர் உரையின் கவரேஜ் பற்றி குறிப்பாக சொல்லப்பட வேண்டும்.*

*R சீனிவாசன், RC பெங்களூர் J P நகர் — D 3191*

*கன்வீனர் RID ராஜு சுப்பிரமணியம் மற்றும் தலைவர் PDG K P நாகேஷ் ஆகியோரின் அர்ப்பணிப்பு, திட்டமிடல் மற்றும் செயல்பாட்டின் காரணமாக, ஜோன் இன்ஸ்டிட்யூட் எதிர்பார்ப்புகளை*

### நீண்ட ஆயுளுக்கான மந்திரங்கள்

பாரத் மற்றும் ஷாலன் சவூரின் ‘ஆரோக்கியமான நீண்ட ஆயுளுக்கான மந்திரங்கள்’ என்ற கட்டுரை நல்ல ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுளை அனுபவிக்க எங்களுக்கு நிறைய தடயங்களை அளித்தது. எழுத்தாளர் டான் ப்யூட்னரின் லிவ் டு 100 ஆவணப் படத்திலிருந்து மேற்கோள் காட்டப் பட்ட அனைத்துப் புள்ளிகளும் சக்தி வாய்ந்தவை. அனைத்து புள்ளி களையும் பின்பற்றினால் ரோட்டரி மற்றும் அதன் உறுப்பினர்கள் இருவருக்கும் வெற்றி கிடைக்கும். பல ரோட்டரியர்கள் பல்வேறு ரோட்டரி திட்டங்களைச் செயல் படுத்தும் போது, இதுவரை தங்களுக்குள் அறியப்படாத, உள் திறனைக் கண்டறிந்திருக்கலாம். நெட்வொர்க்கிங் ஆயுட்காலத்தை அதிகரிக்கிறது என்பது ரோட்டேரியர்கள் அறிந்துக்கொள்ள வேண்டிய ஒரு செய்தி.

M பழனியப்பன், RC மதுரை வெஸ்ட் — D 3000

### UK ரோட்டேரியரின் இதழுக்கான பாராட்டு

நான் இங்கிலாந்தில் வசிக்கும் இந்தியர் மற்றும் கிரிக்கெட் பிரியர். RID 3131லிருந்து எனது சக ரோட்டரிய நண்பர் கோவிந்த் பஹிரத் என்னிடம் கொடுத்த ரோட்டரி இந்தியா செய்திகளைப் படித்து மகிழ்ந்தேன்.

உலகக் கோப்பை இறுதிப் போட்டியை பற்றிய ஆசிரியரின் உணர்வுகளுடன் நான் உடன்படுகிறேன். இந்திய அணியின் தோல்வியால் நானும் ஏமாற்றமடைந்தேன் ஆனால் உலகக் கோப்பையை சாமர்த்தி யமாக வென்ற எதிரணியினரை வாழ்த்துவதில் தாராள மனப்பான்மை இல்லாததை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நான் முதல்முறையாக படித்த உங்கள் ரோட்டரி செய்தியின் ஒவ்வொரு பக்கத்தையும் ரசித்தேன். இதை தொடந்து கடைபிடியுங்கள்.

ஆனந்த் N, RC நார்தாலர்டன் மௌப்ரி — D 1040

RI தலைவர் கார்டன் மெக்கினலி நவம்பர் இதழில் “இருளிலிருந்து பாதையை ஒளிரச் செய்யுங்கள்” என்ற தலைப்பில் ஒரு நல்ல செய்தியை எழுதியுள்ளார். குறிப்பாக மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவில் ரோட்டரியின் அமைதியை கட்டியெழுப்பும் முயற்சி களுக்கு ஆதரவளிக்குமாறு அவர் நம்மிடம் கேட்டுக்கொண்டுள்ளார். உலகம் முழுவதும் அமைதி நிலவுவதை உறுதிசெய்ய ரோட்டேரியர்களாகிய நாம்

*விட நன்றாக நடந்தது. RIPN டி கமார்கோ கூறியபடி, உயிரோட்டமான டிஜிட்டல் விளக்கக்காட்சி உலகத் தரம் வாய்ந்ததாகவும், RI மாநாடுகளுக்கு இணையானதாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. RI தலைவர் மெக்கினலி, துணைவியார் ஹீதர், டி கமார்கோ, RI அதிகாரிகள் மற்றும் 800 பிரதிநிதிகள் கலந்து கொண்டது நிகழ்வுக்கு கவர்ச்சியை சேர்த்தது மற்றும் நிலவிய தோழமை அற்புதமாக இருந்தது என்பதை சொல்ல தேவையில்லை. செல்ஃபி எடுக்கவும், உள்ளூர் கோல்ஃப் போட்டியை நடத்தவும், நள்ளிரவு மாரத்தானைக் கொடியசைத்து தொடங்கவும் அவரது வருகையால் போலியோ நிதிக்கு $100,000 மற்றும் TRFக்கு $300,000 கிடைத்தது பாராட்டுக்குரிய விஷயம்.*

V R T *துரைராஜா*
RC *திருச்சிராப்பள்ளி* — D 3000

கைகோர்க்க வேண்டும்.

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

ஜனவரி இதழில் TCA ஸ்ரீனிவாஸ ராகவன் எழுதிய LBW பத்தியைப் படிக்கும்போது, கற்பழிப்புக்கு மரண தண்டனையை எதிர்த்து வடஇந்திய அரசியல்வாதி ஒருவர் கூறியது என் நினைவுக்கு வந்தது - லட்கே, லட்கே ஹைன்... கல்டி ஹோ ஜாதி ஹை (ஆண்கள் ஆண்களாக தான் இருப்பார்கள்... அவர்கள் தவறுகள் செய்வார்கள்). பெற்றோர்கள் பெரும்பாலும் தங்கள் குழந்தைகளின் கடுமையான தவறுகளை புறக்கணிக்கிறார்கள், அவர்களை அதிகமாக செல்லம் கொடுத்து கெடுக்கிறார்கள், குறிப்பாக தனி குடும்பங்களில்.

V முத்துக்குமரனின் “BPO-விற்காக இளைஞர்களுக்கு திறமையளித்தல்” என்ற கட்டுரையில் பள்ளி அல்லது பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களைக் குறிப்பிடும் போது இரண்டாவது பத்தியில் ‘பாஸிங் அவுட்’ என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுவது பொதுவான தவறு. அந்தச் சொற்றொடருக்கு “சிறிது நேரம் சுயநினைவு இல்லாமல் இருப்பது” என்று பொருள். சரியான பயன்பாடு முடித்தனர் அல்லது பட்டம் பெற்றனர் ஆகும்.

N அன்த்ரி வேதி, RC ஹைதராபாத் மெகா சிட்டி — D 3150

*அந்த பயன்பாடு தவறில்லை. ஆங்கிலத்தில் உள்ள பல சொற்றொடர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தங்களைக் கொண்டுள்ளன. கேம்பிரிட்ஜ் அகராதி, “பாஸிங் அவுட் ஃஃப் அ மிலிட்டரி காலேஜ்” என்பதற்கு, “பாடத்தை வெற்றிகரமாக முடித்த பிறகு ராணுவக் கல்லூரியை விட்டு வெளியேறும் செயல்” என்று பொருள் தருகிறது. அதில் மற்றொரு உதாரணம் வழங்கப்பட்டுள்ளது - நான் என் மகனின் “பாஸிங் அவுட் பாரேட்” டுக்கு சென்றேன்.*

**— ஆசிரியர்**

## தகவல் தரும் விளம்பரத் தலையங்கம்

டிசம்பர் இதழில் Rtn A ரங்கராஜனின் “மாவட்ட மற்றும் மண்டலத் தேர்தல்களில் ரோட்டரி சங்கங்கள் மற்றும் அதன் உறுப்பினர்களின் முக்கிய பங்கு என்ன” என்ற விளம்பர தலையங்கத்தை ரோட்டரி நியூஸ் வெளியிட்டதற்காக நான் வாழ்த்துகிறேன். இது நம் அமைப்பின் நேர்மையைப் பிரதிபலிக்கும் முக்கிய தலைப்பு.

அடிப்படையில், நம் RI மாவட்டங்களில் தேர்தல் செயல்முறை இரண்டு விதிமுறைகளில் ஒன்றைப் பின்பற்றுகிறது — சங்கம் மூலம் நேரடி மின்-வாக்களிப்பு அல்லது நியமனக் குழு மூலம் தேர்தல். இரண்டுமே பயனுள்ளவையாகவும் நேர்மையாக இருந்தாலும், சில சமயங்களில் வதந்திகளால் கறைபடுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

பல கேள்விக்குரிய நடைமுறைகள் நிலவும் நிலையில், NC உறுப்பினர்களை கவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக ரோட்டரி வட்டாரங்களில் வதந்திகள் பரவுகின்றன. ஆனால் இந்த விஷயங்களை ஒருபோதும் நிரூபிக்க முடியாது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க குறுக்குவழி எதுவும் இல்லை. நான்கு வழி சோதனையை எத்தனை முறை மேற்கோள் காட்டப்பட்டாலும், நிகர முடிவு பூஜ்ஜியமாகவே இருக்கிறது.

வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையை உறுதி செய்வதற்கான ஒரு வழி, ரோட்டரியர்களிடையே ரோட்டரி பற்றிய அதிக அறிவைப் புகுத்துவது, எனவே வெளியிடப்பட்ட அத்தகைய தகவல்கள் மதிப்புமிக்கது. இதுபோன்ற விஷயங்களைச் சரிசெய்ய வேண்டிய பொறுப்பு சங்கம் மற்றும் மாவட்டத் தலைமைக்கு உள்ளது.

சயந்தன் குப்தா, RC மால்டா சென்ட்ரல் — D 3240

**அட்டையில்:**
*வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென் தமிழகத்தில் ரோட்டேரியன்கள் வழங்கிய நிவாரணப் பொருட்களை மக்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்கின்றனர்.*

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

# RI தலைவரிடமிருந்து...



## ஓர் உயர்வான சூழல்

ரோட்டரி உலகம் முழுவதும் மன நல முன்னெடுப்புகளை நீங்கள் நடத்திவருவது எனக்கு மகிழ்ச்சியும் ஊக்கமும் அளிக்கிறது. மன நல முன்னெடுப்புகளுக்கான ரோட்டரி செயல் குழு நடத்திவரும் கணக்கெடுப்புக்கு உங்களில் 1,000க்கும் மேற்பட்டோர் இதுவரை பதிலளித்துள்ளீர்கள், உறுப்பினர்களுடைய தனிப்பட்ட நலனை மேம்படுத்த ரோட்டரி என்ன செய்யலாம் என்று உங்களுடைய கருத்தைத் தெரிவித்துள்ளீர்கள்.

ரோட்டரி உறுப்பினர்கள் மேலும் தோழமையை, நட்பை, உரையாடலை, ஒருங்கிணைப்பை, இணைந்திருத்தலைக் கேட்கிறார்கள். அவர்கள் மேலும் சேவை வாய்ப்புகளை நாடுகிறார்கள், மன நலச் சொற்பொழிவுகள், விழிப்புணர்வு முயற்சிகள், கல்வி உள்ளிட்ட நலச் செயல்பாடுகள் மேலும் வேண்டும் என விரும்புகிறார்கள்.

மன நலனில் கூடுதல் கவனம் செலுத்தப்படுவதை நம் உறுப்பினர்கள் பாராட்டுகிறார்கள். ரோட்டரி இந்தப் பலன்களைப் பெற்று, இங்கு இணைய விரும்புவோருக்கு மேலும் ஆர்வமூட்டும் அமைப்பாக மாறுவதற்கு நாம் எப்படியெல்லாம் உதவலாம்? அதற்கான சில வழிகள், இதோ.

முதலில், நாம் நம்முடைய சங்கங்களில் சேர்ந்திருத்தலைக் கூட்டுவதன் முதன்மைத்துவத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். உலகெங்கும் உள்ள பொது நல வல்லுனர்கள் தனிமை நிலைகள் அதிகரித்துவருவதுபற்றிக் கவலைப்படுகிறார்கள். அமெரிக்க அறுவைச் சிகிச்சை வல்லுநர் தலைவர் அதை ஒரு தொற்றாகக்கூட அறிவித்திருக்கிறார். பொதுவான பொழுதுபோக்குகள், ஆர்வங்கள் அடிப்படையிலான குழுக்கள், சங்கங்களைக் கண்டறிவது இணைந்திருத்தலை மேலும் மேம்படுத்துவதற்கு ஒரு வலுவான வழி என்று மன நல வல்லுனர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். இதைத்தான் ரோட்டரி செய்கிறது. நம்முடைய உறுப்பினர்கள் எல்லாரும் ரோட்டரியில் முழுமையாக ஈடுபடுவதையும், இந்த உள்ளார்ந்த வலிமையை நம் சமூகங்கள் இன்னும் நன்றாக அறிந்திருப்பதையும் நாம் உறுதிப்படுத்தவேண்டும்.

இரண்டாவதாக, உங்கள் சங்கம் இணைப்பைக் கட்டமைக்கும் புதிய வழிகளைக் கண்டறிந்திருந்தால், *mindhealth@rotary.org* என்ற மின்னஞ்சல் முகவரியில் அந்தத் தகவலைப் பகிர்ந்துகொள்ளுங்கள். நாங்கள் அதை ரோட்டரி உலகுக்கு இன்னும் பரவலாகக் கொண்டு செல்வோம்.

நிறைவாக, இதுபோன்ற கணக்கெடுப்புகளிலிருந்து வரும் பின்னூட்டங்களை உங்கள் சங்கத்துடன் பகிர்ந்துகொள்ளவேண்டும், நாம் தொடங்கியுள்ள இந்தப் பயணம் வெறுமனே மன நலத்தைப்பற்றியது இல்லை. நம்முடைய சிறப்பான அமைப்பின் முழு வலிமையை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ரோட்டரியில் ஒருவர் மற்றவருடன், நாம் சேவை புரிகிற மக்களுடன் கொண்டுள்ள இணைப்புகளை வலுவாக்குவதற்கு நீங்கள் செய்கிற அனைத்தும் மன நலனையும் மேம்படுத்துகின்றன. இந்த உயர்வான சூழலை நாம் தொடர்வோம்.

**கோர்டன் மெக்கினலி**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.



# மனச்சோர்வு அடைந்தவர்களுக்கு உதவுவோம்

கடந்த சில மாதங்களாக மனதுக்கு வேதனை அளிக்கும் செய்திகள் தலைப்புச் செய்திகளாக இடம் பிடித்துள்ளன. தாய்மார்கள், தங்கள் குழந்தைகள் சில நேரங்களில் சிசுக்களுடன் சேர்ந்து உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். சமீபத்தில், அதாவது ஜனவரி 11-ம் தேதி 33 வயதான பெண் ஒருவர் கிரேட்டர் நொய்டாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் 16 வது மாடியிலிருந்து 6 மாத குழந்தையுடன் கீழே குதித்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். அவர் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

அதற்கு 2 நாட்கள் முன்னதாக, 39 வயதான, பெங்களூரைச் சேர்ந்த ஒரு ஐ.டி. நிறுவனத்தின் பெண் தலைமைச் செயல் அதிகாரி (CEO), கோவாவில் ஒரு தங்கும் விடுதியில் தமது நான்கு வயது மகனை, தலையணையை முகத்தில் அழுத்தி கொலை செய்துள்ளார். பின்னர் கையை அறுத்துக் கொண்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார். ஆனால், இறக்கவில்லை. மகனின் உடலை ஒரு பெட்டியில் வைத்து கோவா விலிருந்து டாக்ஸியில் பெங்களூர் வரும் வழியில் சித்ரதுர்காவில் அவர் கைது செய்யப்பட்டார். இந்த கொடூரச் செயலுக்கு அவருக்கு ஏற்பட்ட மன உளைச்சல் தான் காரணம் என்று சொல்லப்படுகிறது. விவாகரத்து கோரிய அவர் கணவரைப் பிரிந்து வாழ்ந்து வந்தார். குழந்தை தாயிடம் வளர்ந்து வந்த நிலையில், வாரம் ஒரு முறை கணவர் சென்று பார்க்க நீதிமன்றம் அனுமதியளித் திருந்தது. இதனால் அவருக்கு மன உளைச்சல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்துக்கும் முன்னதாக மனதை பாதிக்கும் மற்றொரு சம்பவம் குருகிராமில் நடந்துள்ளது. 32 வயது தாய், தனது 3 வயது குழந்தையை கொன்றுவிட்டு, கையை அறுத்துக் கொண்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார். ஆனால், இறக்கவில்லை. மருத்துவமனை யிலிருந்து வீடு திரும்பிய அவர் கைது செய்யப்பட்டார். குழந்தை மீது ஏற்பட்ட வெறுப்பால் அவளை கொன்றதாக போலீஸில் அந்த பெண் தெரிவித்துள்ளார். கணவருடன் ஏற்பட்ட சண்டை-சச்சரவு காரணமாக மனம் உடைந்து பலமுறை குழந்தை வீட்டில் இல்லாத சமயத்தில் தற்கொலைக்கு முயன்றுள்ளார். ஆனால், அந்த முயற்சி வெற்றிபெறவில்லை. இதையடுத்து கணவர் மீது இருந்த ஆத்திரத்தில் குழந்தையைக் கொன்றுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் மக்களிடம் மன அழுத்தம், மனச்சோர்வு அதிகரித்து வருவதையே காட்டுகிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக, மனநல மருத்துவரிடம் ஆலோசனை கேட்பதை சமூகத்தில் இழிவாகவே கருதுகின்றனர். பாலிவுட் நடிகை தீபிகா படுகோனே போன்ற பிரபலங்கள் நிழலிலிருந்து விலகி, மனச் சோர்வுள்ளவர்கள் தொழில் முறையில் எப்படி ஆலோசனை அல்லது உதவி பெறலாம் என்பது குறித்து வெளிப்படையாகவே பேசிவருகின்றனர். ஆனால், இன்னும் பலர் அவ்வாறு செய்ய முன்வந்தால், நிச்சயமாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

உலகெங்கிலும் உள்ள முன்னணி மருத்துவ கழகங்கள் நடத்திய ஆய்வில், ஆண்களைவிட இரண்டு மடங்கு பெண்கள் மனச்சோர்வினால் மன அழுத்தத் தால் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றன. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையுடன் ஒப்பிட்டால் இன்று ஆண்களைவிட மூன்று மடங்கு பெண்கள் மனநல பாதிப்புக்கு ஆளாவதாக சொல்லப்படுகிறது. இந்த ஆண்டு மனநலம் மற்றும் ஆரோக்கியத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு கவனம் செலுத்தப்படும் என்று RI தலைவர் கோர்டன் மெக்கினலி கூறியுள்ளார். உலகம் முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்கள், மனநல பிரச்னையை கண்டறிந்து அவற்றை கையாள்வதற்கான சேவைத் திட்டங்களில் கவனம் செலுத்த தொடங்கியுள்ளன.

ஒவ்வொரு உயிரும் விலைமதிப்பற்றது. எந்த ஒரு மனிதருக்கும் அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி உயிரை மாய்த்துக் கொள்ள உரிமை இல்லை. தன்னை தற்காத்துக் கொள்ளவோ அல்லது பாதுகாத்துக் கொள்ளவோ முடியாத ஒரு குழந்தையின் வாழ்வை முடிவுக்கு கொண்டு வருவது கொடூர செயலாகும்.

மனச்சோர்வு அல்லது மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவரை கண்டறிய நாம் கண்களையும், முக்கியமாக இதயத்தையும் திறந்து வைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்தால் நமது குடும்பத்திலும், நட்பு வட்டத்திலும், பணிபுரியும் இடங்களிலும், மிகப்பெரிய சமூகத்திலும் அவர்களை அடையாளம் காணமுடியும். நிச்சயமாக நட்பு, புரிதல், ஆதரவு, பொறுப்புணர்வுடன் செயல்பட்டால் மனநலம் அல்லது மன உளைச்சலால் பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடைவது ஒன்றும் கடினமான காரியம் அல்ல.

ரஷீதா பகத்

# ஒவ்வொரு மூலையிலும் ஊக்கம்




இந்தக் கதை, ரோட்டரி மாநாட்டைப்போல் பழைமையானது: வெவ்வேறு சங்கங்களைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் திடீரென்று சந்திக்கிறார்கள், பேசுகிறார்கள், ஒரு திட்டத்துக்கான யோசனை பிறக்கிறது.

அதனால், மே 25 முதல் 29 வரை சிங்கப்பூரில் மாநாட்டுக்கு வரும் நீங்கள் உங்களுக்கு அருகில் நிற்கிற அல்லது சாப்பிட்டுக்கொண்டிருக்கிற புதியவர் ஒருவருடன் உரையாடலைத் தொடங்கத் தயங்காதீர்கள். ஏனெனில், 2016-ல் சியோல் மாநாட்டின்போது ஒரு பேருந்து நிறுத்தத்தில் பேசிய இருவர் ஆப்பிரிக்காவில் ஒரு திட்டத் திருவிழாவை நடத்தினார்கள்.

மாநாட்டில் எதேச்சையாக நடந்த சந்திப்புகள் பொருளுள்ள திட்டங்களுக்கு வழிவகுத்தது பற்றி நம் உறுப்பினர்கள் அவ்வப் போது பல கதைகளைச் சொல்லி வருகிறார்கள். இந்த ஆண்டின் மாநாட்டுக் கருப்பொருளான உலகுடன் நம்பிக்கையைப் பகிர்ந்துகொள்ளுதலை நிறைவேற்றும் கதைகள் இவை.

2012-ல் பாங்காக்கில் நடைபெற்ற மாநாட்டின்போது ஒரு பின்னணிக்கு வண்ணம் பூசுகையில் அவர்கள் சந்தித்துள்ளார்கள், இடைநிலை அமர்வுகளுக்குப்பின் பேசியுள்ளார்கள், நட்பு இல்ல அரங்குகளுக்கு வரும் போதும் உரையாடியுள்ளார்கள். நம் உறுப்பினர்கள் பன்னாட்டு நல்கைத் திட்ட யோசனைகளைக் கண்டறிவதற்கென, பிற நாடு களிலிருந்து வரும் புதிய நண்பர் களைச் சந்திக்கும் வாய்ப்புகளை விரும்புகிறார்கள். ஆனால், அவர்கள் தங்களுடைய சொந்த மாநிலம், பகுதி அல்லது மாவட்டத்தைச் சேர்ந்த வருங்காலத் திட்டக் கூட்டாளர்களையும் இங்கு சந்திக்கிறார்கள்.

உலகின் பல நாடுகளைச் சேர்ந்த ரோட்டரி உறுப்பினர்கள் மாநாட்டில் ஓர் இணைப்பை உருவாக்கிக்கொண்டபிறகு, பல முன்னெடுப்புகளில் புதிய கூட்டாளர்களுடன் பணியாற்றி யுள்ளார்கள். எடுத்துக்காட்டாக, தஞ்சமடைந்தோருக்குப் பாதுகாப்புப் பெட்டிகள் வழங்குதல், ரோட்டராக்ட் பல மாவட்டத் தகவல் அமைப்பு ஒன்றைத் தொடங்குதல், பல மில்லியன் பிளாஸ்டிக் பாட்டில் மூடிகளை மறுசு ழற்சி செய்து, இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைப்பதற்குப் பணம் திரட்டுதல்.

ஜார்ஜியாவைச் சேர்ந்த ஒரு சங்கமும், இந்தியாவைச் சேர்ந்த ஒரு சங்கமும் கழிப்பறை வசதியை அமைப்பதற்கெனப் பன்னாட்டு நல்கை ஒன்றில் கை கோத்தன. அவர்களுடைய கட்டுரை மாநாட்டுத் தாக்கத்தைக் கச்சி தமாகப் படம் பிடிக்கிறது: “இவை அனைத்தும் 2017 அட்லான்டா RI மாநாட்டில் தொடங்கியது.” இந்த வசந்தத்தின்போது, சிங்கப்பூரில் நீங்கள் கண்டறியப்போகும் யோசனை விதை எதுவாக இருக்கும்?

**மேலும் தெரிந்துகொள்ள பதிவு செய்ய:**
convention.rotary.org

## ஆளுநர் குழு

2981 செங்குட்டுவன் G
2982 ராகவன் S
3000 ஆனந்த ஜோதி R
3011 ஜீதேந்தர் குப்தா
3012 ப்ரியதோஷ் குப்தா
3020 சுப்பாராவ் ராவுரி
3030 ஆஷா வேணுகோபால்
3040 ரீத்து க்ரோவர்
3053 பவன் கண்டேல்வால்
3055 மேஹுல் ரத்தோட்
3056 நிர்மல் ஜெயின் குனாவத்
3060 நிஹிர் தாவே
3070 விப்பன் பாசின்
3080 அருண் குமார் மோங்கியா
3090 கன்ஷியாம் கன்சல்
3100 அஷோக்குமார் குப்தா
3120 சுனில் பன்சல்
3131 மஞ்சு ஃபாட்கே
3132 ஸ்வாதி ஹெர்கல்
3141 அருண் பார்கவா
3142 மிலின்த் குல்கர்னி
3150 சங்கர் ரெட்டி
3160 மணிக் பவார்
3170 நாசிர் போசத்வாலா
3181 கேஷவ் H R
3182 கீதா B C
3191 உதயகுமார் பார்கவா
3192 ஶ்ரீனிவாச மூர்த்தி V
3201 விஜய்குமார் T R
3203 Dr S சுந்தர்ராஜன்
3204 Dr சேது ஷிவ்ஷங்கர்
3211 Dr G சுமித்ரன்
3212 முத்தையா பிள்ளை R
3231 பரணிதரன் P
3232 ரவி ராமன்
3240 நிலேஷ் குமார் அகர்வால்
3250 பகாரியா S P
3261 மஞ்சித் சிங் அரோரா
3262 ஜெயஶ்ரீ மோஹன்டி
3291 ஹுராலால் யாதவ்

---

அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

---

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| அனிருதா ராய்சௌத்ரி<br>RI இயக்குனர் மற்றும்<br>RNT தலைவர் | RID 3291 |
| T N சுப்ரமணியன்<br>RI இயக்குனர் | RID 3141 |
| Dr பரத் பாண்ட்யா<br>TRF அறங்காவலர்<br>துணை தலைவர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2023–24)

| | |
|---|---|
| ஸ்வாதி ஹெர்கல்<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3132 |
| ஹீராலால் யாதவ்<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3291 |
| முத்தையா பிள்ளை R<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3212 |
| மிலின்த் குல்கர்னி<br>ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3142 |


**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.





# நம் சங்கங்களை சுவாரஸ்யமாக்குவோம்

ரோட்டரி தீம் – தி மேஜிக் ஆஃப் ரோட்டரியின் மயக்கத்தை நாம் தழுவும் தருவாயில் தங்களுக்கு வாழ்த்துக்கள்.

இந்த ரோட்டரி ஆண்டின் ஏழாவது மாதத்தில் நாம் பயணிக்கும்போது, நமது மாவட்டங்கள் வளர்ச்சியடைவது மட்டுமல்லாமல், நம் திட்டங்களைச் செயல்படுத்துவதில் குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்து வருகின்றன என்பதை பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். பல மாவட்ட மாநாடுகளில் கலந்து கொண்ட நான், ரோட்டரியர்கள் மேற்கொண்ட அபாரமான பணிகளை நேரில் பார்த்திருக்கிறேன்.

பிப்ரவரி மாதம் அமைதி மற்றும் மோதல் தீர்வு மாதமாகும். பிப்ரவரி 23, 1905 அன்று நடந்த ரோட்டரியின் தொடக்கக் கூட்டத்தின் ஆண்டு நிறைவையும் இந்த மாதம் குறிக்கிறது, இப்போது உலக புரிதல் மற்றும் அமைதி தினமாக அந்நாள் கொண்டாடப்படுகிறது. சுகாதார மேம்பாடு, கல்விக்கான ஆதரவு மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் முயற்சிகள் மூலம் நம் நிறுவனம் இந்த மதிப்புகளை மேம்படுத்துகிறது. ரோட்டரியில், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் ஆகியவை நிறம் மற்றும் பாலினத்தை மீறி ஆட்சி செய்கின்றன. “போருக்குச் செல்லும் பாதை நன்கு அமைக்கப்பட்ட நெடுஞ்சாலை, அமைதிக்கான பாதை இன்னும் வனாந்திரமே” என்ற பால் ஹாரிஸின் வார்த்தைகளை எதிரொலிக்கும் வகையில், எல்லாத் தொழில்களையும் கண்ணியப்படுத்தி, சமாதானத்தை வளர்ப்பதற்கு ஒன்றிணைந்து செயல்பட்டு இந்தக் கொள்கைகளை நிலைநாட்டுவோம்.

பெங்களூரில் நடைபெற்ற ரோட்டரி ஜோன் இன்ஸ்டிடியூட் குழுப்பணி மற்றும் அர்ப்பணிப்புக்கு சான்றாக இருந்தது. பதினாறு மாத அயராத திட்டமிடல் மற்றும் முயற்சி ஒரு பெரிய நிகழ்வில் உச்சத்தை எட்டியது. உலகம் முழுவதிலுமிருந்து உங்களின் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் அணிக்கு உற்சாகம் அளித்தாலும், பிரதிநிதிகள் மத்தியில் இருந்த விதிவிலக்கான ஒத்துழைப்புதான் உண்மையிலேயே தனித்து நின்றது.

உறுப்பினர் தக்கவைப்பு மற்றும் வளர்ச்சியில் நமது கவனத்தில் உறுதியாக இருப்போம். ரோட்டரி சங்கங்களை அதிக ஈடுபாட்டுடன் உருவாக்குவதன் முக்கியத்துவத்தை சர்வதேச சபை வலியுறுத்தியது, ஏனெனில் உறுப்பினர்கள் ரோட்டரியை விட்டு வெளியேற விரும்பவில்லை; அவர்கள் ஆர்வமற்ற சங்கங்களை விட்டு தான் வெளியேறுகிறார்கள். 2.025 பில்லியன் டாலர் அறக்கட்டளையாக மாறுவதற்கான நம் இலக்கு பாதையில் செல்ல நிதி தேவை அதிகரித்து வருகிறது. போலியோவை ஒழிப்பது ஒரு வலிமையான சவாலாக உள்ளது; அறக்கட்டளையை ஊக்குவிப்போம் மற்றும் போலியோவிற்காக தீவிரமாக நிதி திரட்டுவோம்.

விரும்பத்தகாத பிரச்சாரங்களை நாடாமல், உள்ளூர் மட்டத்தில் உள்ள சவால்களை திறம்பட எதிர்கொள்ளும் மாவட்டங்களைக் காண்பதில் நான் உண்மையிலேயே ஊக்குவிக்கப்படுகிறேன். நாம் மேற் கொள்ளும் அற்புதமான பணியை ஒப்புக்கொள்ளும் அதே வேளையில், நமது நேர்மறையான தாக்கத்தை உள் விவகாரங்கள் மற்றும் மோதல் களால் நீர்த்துப்போகச் செய்வதைத் தவிர்க்க வேண்டும். நமது ரோட்டரி சமூகத்தின் ஒருமைப்பாடு மற்றும் நற்பெயரை நிலைநிறுத்துவோம். புரிந்துணர்வும், நல்லெண்ணமும், அமைதியும் நிறைந்த உலகை நம்மால் ஒன்றாக உருவாக்க முடியும்.

**ராஜு சுப்ரமணியன்**
RI இயக்குனர் 2023–25

# அமைதிக்கான களப்பணி



இப்போதெல்லாம் செய்திகளைப் பின்தொடர்வது பெரிய சவாலாக உள்ளது. போர் மற்றும் வன்முறைச் செய்திகள் மிகவும் சோர்வைத் தருகின்றன. அப்பாவி மக்கள், குறிப்பாகப் பெண்களும் குழந்தைகளும் இதுபோன்ற முரண்களில் சிக்கிக்கொள்வது பற்றிக் கேள்விப்படும்போது நான் துடித்துப்போகிறேன். இதுபோன்ற நேரங்களில், நாம் நம்மால் எதை மாற்ற இயலாது என்பதில் கவனம் செலுத்தாமல், நம்மால் என்ன செய்ய இயலும் என்பதில் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் நினைக்கிறேன். எது வேலை செய்யும் என்று நமக்குத் தெரிந்தால், நாம் அதை ஆதரிக்கலாம்.

பிப்ரவரி மாதம், ரோட்டரியின் அமைதி உருவாக்கம் மற்றும் முரணைத் தடுத்தல் மாதமாகும். நம்மில் பெரும்பாலானோர் பேச்சுவார்த்தை மேசைகளில் அலுவலர்களாகவோ முரண்களைத் தீர்க்கும் அமைதிக் கட்டமைப்பாளர்களாகவோ இருக்கப்போவதில்லை. எனினும், ரோட்டரியின் தனித்துவமான வழியில், ஒவ்வொரு நாளும் நம்முடைய பணிகள் எங்கோ அமைதியை முன்னிறுத்தவும் முரணைத் தடுக்கவும் உதவுகின்றன.

நீங்கள் ரோட்டரி அறக்கட்டளையின் கவனப் பகுதிகளில் ஏதேனும் ஒன்றை ஆதரிக்கும்போது, நீங்கள் அமைதிக்குப் பங்களிக்கிறீர்கள். அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்கும் அறக்கட்டளை நல்கைகள் (எடுத்துக்காட்டாக, ஒரு சமூகத்தில் அடிப்படை எழுத்தறிவை மேம்படுத்தும் ஒரு பன்னாட்டு நல்கை) உலகைப்பற்றிய புரிந்துகொள்ளலை மேம்படுத்தும், இன்னும் சிறந்த பொருளாதார நிலைத்தன்மைக்கு வழிவகுக்கும், அதன்மூலம் அமைதிக்கு அடித்தளம் அமைக்கும்.

அத்துடன், அமைதி என்பது நம்முடைய திட்டங்களைக் கடந்து ரோட்டரியின் கருத்தாக்கத்தில் எப்போதும் வேரூன்றியுள்ளது. 1999ல் நாம் நம்முடைய அறக்கட்டளையின் தொலைநோக்கு முன்னெடுப்பு ஒன்றின் வழியாக ரோட்டரி அமைதி மையங்களை அமைத்தபோது, நாம் இந்த உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினோம். இந்த மாதம், இஸ்தான்புல்லில் உள்ள பஹ்செஸெஹிர் பல்கலைக்கழகத்தில் நம்முடைய மிகப் புதிய ரோட்டரி அமைதி மையத்தை அமைப்பதன்மூலம் நாம் அந்தத் தொலைநோக்குப் பார்வையை மீண்டும் புதுப்பிக்கிறோம். இந்த மையம் 2025ன் தொடக்கத்தில் இங்கு வரப்போகும் முதல் தொகுப்பு மாணவர்களுக்குத் தயாராக முதல் அடியை எடுத்துவைக்கிறது.

கடந்த பல ஆண்டுகளாக, ரோட்டரி நன்மைக்கான ஒரு பன்னாட்டு ஆற்றலாக வளர்ந்துள்ளது, பல வழிகளில் அமைதியை, புரிந்துகொள்ளலை முன்னிறுத்தியுள்ளது. இந்தத் தொலைநோக்குப் பார்வைக்குப் பின்னால் உள்ள மிகச் சிறந்த தூண்டும் ஆற்றலாக நம் அறக்கட்டளை உள்ளது. இது ரோட்டரியின் நிரந்தர மரபின் ஒரு பகுதியாக இருக்கும்.

நம்முடைய பணியை ஆதரிப்பதன்மூலம், அந்த மரபின் ஒரு பகுதியாக நீங்கள் மாறலாம். நீங்கள் இதை நேரடியாக ஆதரிப்பதற்கு, *rotary.org/donate* என்ற இணையத் தளத்துக்கு வாருங்கள், அமைதி உருவாக்கம் மற்றும் முரணைத் தடுத்தல் என்பதைக் கவனப் பகுதியாகத் தேர்ந்தெடுங்கள்.

**பேரி ரஸ்ஸின்**
TRF அறங்காவலர் தலைவர்

---

## ROTARY NEWS PLUS

படித்தீர்களா?

அல்லது உங்கள் e-mailல் உள்ள Junk folder-க்கு செல்கிறதா?






ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை ஒவ்வொரு Rotary News சந்தாதாரர்க்கும் e-mail மூலம் அனுப்புகிறோம்.

உங்கள் பெயர், ரோட்டரி சங்கம், மாவட்டம் மற்றும் ஈமெயில் முகவரி ஆகியவற்றை எங்களுக்கு rotarynews@rosaonline.org என்ற முகவரிக்கு பகிரவும்.

**Rotary News Plus** இதழை எங்கள் வளைத்தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.

# Rotarians!

Visiting Chennai
for business?

Looking for a
compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 36,769 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 10,784 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 15,138 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 13,258 |
| ரோட்டரியினர் | : | 1,166,174 |
| ரோட்டராக்டர்கள் | : | 161,551 |
| இன்டராக்டர்கள் | : | 348,174 |

*As on January 17, 2024*

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on January 1, 2024

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 140 | 6,007 | 6.13 | 73 | 503 | 34 | 254 |
| 2982 | 84 | 3,768 | 6.13 | 35 | 804 | 95 | 175 |
| 3000 | 139 | 5,939 | 11.97 | 120 | 1,816 | 247 | 216 |
| 3011 | 132 | 5,015 | 29.33 | 85 | 2,311 | 151 | 37 |
| 3012 | 162 | 4,056 | 23.77 | 77 | 1,147 | 99 | 61 |
| 3020 | 80 | 4,693 | 7.48 | 46 | 843 | 121 | 351 |
| 3030 | 99 | 5,624 | 16.66 | 129 | 2,088 | 521 | 384 |
| 3040 | 112 | 2,416 | 14.36 | 52 | 902 | 79 | 213 |
| 3053 | 72 | 2,875 | 16.73 | 25 | 404 | 42 | 131 |
| 3055 | 77 | 2,979 | 12.25 | 68 | 1,084 | 74 | 376 |
| 3056 | 80 | 3,690 | 24.12 | 34 | 459 | 105 | 201 |
| 3060 | 103 | 5,123 | 15.81 | 68 | 2,296 | 63 | 143 |
| 3070 | 119 | 3,237 | 15.63 | 49 | 601 | 52 | 63 |
| 3080 | 108 | 4,230 | 12.43 | 63 | 1,885 | 171 | 122 |
| 3090 | 124 | 2,656 | 6.10 | 20 | 366 | 193 | 166 |
| 3100 | 109 | 2,135 | 10.82 | 15 | 138 | 36 | 151 |
| 3110 | 132 | 3,591 | 11.28 | 17 | 110 | 48 | 107 |
| 3120 | 90 | 3,626 | 15.66 | 49 | 616 | 28 | 55 |
| 3131 | 141 | 5,616 | 30.50 | 151 | 3,364 | 260 | 149 |
| 3132 | 91 | 3,689 | 13.64 | 43 | 620 | 123 | 204 |
| 3141 | 114 | 6,202 | 27.27 | 140 | 5,995 | 169 | 224 |
| 3142 | 106 | 3,740 | 21.60 | 63 | 2,165 | 116 | 94 |
| 3150 | 108 | 4,273 | 13.43 | 156 | 1,881 | 111 | 130 |
| 3160 | 79 | 2,600 | 9.04 | 32 | 258 | 95 | 82 |
| 3170 | 150 | 6,599 | 15.15 | 123 | 1,887 | 198 | 180 |
| 3181 | 87 | 3,626 | 10.70 | 44 | 520 | 94 | 121 |
| 3182 | 86 | 3,662 | 10.43 | 47 | 235 | 106 | 103 |
| 3191 | 91 | 3,483 | 18.40 | 96 | 3,110 | 143 | 35 |
| 3192 | 83 | 3,433 | 21.44 | 83 | 2,297 | 113 | 40 |
| 3201 | 173 | 6,681 | 9.91 | 139 | 2,555 | 100 | 93 |
| 3203 | 95 | 4,797 | 7.28 | 93 | 1,205 | 180 | 39 |
| 3204 | 74 | 2,380 | 6.89 | 24 | 226 | 17 | 13 |
| 3211 | 159 | 5,082 | 8.34 | 11 | 178 | 20 | 134 |
| 3212 | 122 | 4,563 | 11.40 | 95 | 3,703 | 167 | 153 |
| 3231 | 95 | 3,350 | 6.81 | 39 | 437 | 44 | 417 |
| 3232 | 186 | 6,137 | 19.57 | 130 | 5,432 | 155 | 100 |
| 3240 | 102 | 3,509 | 16.87 | 51 | 900 | 69 | 229 |
| 3250 | 106 | 4,067 | 22.20 | 71 | 1,011 | 65 | 191 |
| 3261 | 97 | 3,269 | 21.90 | 25 | 270 | 24 | 45 |
| 3262 | 115 | 3,769 | 15.71 | 78 | 766 | 645 | 286 |
| 3291 | 142 | 3,767 | 25.56 | | | 73 | 741 |
| **India Total** | **4,564** | **169,954** | | **2,759** | **57,388** | **5,246** | **7,009** |
| 3220 | 69 | 1,947 | 16.59 | 97 | 4,080 | 80 | 77 |
| 3271 | 180 | 2,939 | 19.09 | 194 | 2,190 | 333 | 28 |
| 3272 | 162 | 2,097 | 14.12 | 97 | 1,278 | 26 | 49 |
| 3281 | 333 | 7,539 | 17.62 | 249 | 1,959 | 144 | 215 |
| 3282 | 178 | 3,467 | 9.89 | 179 | 1,336 | 30 | 47 |
| 3292 | 154 | 5,433 | 18.74 | 185 | 5,468 | 122 | 134 |
| **S Asia Total** | **5,640** | **193,376** | **15.61** | **3,760** | **73,699** | **5,981** | **7,559** |

Source: RI South Asia Office




RIPN மரியோ டி
காமர்கோ மற்றும்
அவரது மனைவி டெனிஸ்.

# போலி சங்கங்கள், உறுப்பினர்கள், எண்கள் வேண்டாம்: RIPN

ரஷீதா பகத்

PRIP K R ரவீந்திரன் நடத்திய அமர்வு “வெளிப்படையாகப் பேசுங்கள்” என்ற தலைப்புக்குத் தகுதியானதென்றால் பெங்களூரு இன்ஸ்டிடியூட்டில் RIPN மரியோ டி கமார்கோ ஆற்றிய உரை “தெளிவான பேச்சு” என்ற தலைப்புக்குத் தகுதியானது.

ஒரு அமர்வில் உரையாற்றிய அவர், புள்ளி விவரங்களை உயர்த்துவதற்கும், தவறான புகழைப் பெறுவதற்கும் சந்தேகத் திற்குரிய செயல்களில் ஈடுபடும் நம் மண்டலங்களைச் சேர்ந்த ரோட்டேரியர்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்தார். அவரது பார்வையை விளக்கி, அவர் கூடியிருந்த பங்கேற்பாளர்களிடம், நமது நோக்கம் உறுப்பினர், உறுப்பினர், உறுப்பினர் மட்டுமே, அதில் எந்த சந்தேகமும் வேண்டாம். ஆனால் ஆரோக்கியமான, நிலையான உறுப்பினர்களை நாம் விரும்ப வேண்டும். போலி சங்கங்கள், போலி உறுப்பினர்கள் நமக்கு தேவையில்லை. ரோட்டரிக்கும் அது தேவையில்லை; இந்தியாவுக்கும் அது தேவையில்லை” என கூறினார்.

உறுப்பினர் வளர்ச்சிக்காக இந்திய ரோட்டேரியர்களைப் பாராட்டிய அவர், நீங்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டு, ரோட்டரியை எவ்வாறு வளர்ப்பது என்பதை உலகுக்குக் காட்டுகிறீர்கள், ஆனால் நீங்கள் அதை நிலையான, நேர்மையான மற்றும் நேர்த்தியான வழியில் செய்யவேண்டும். நாம் பொய் கணக்கு செய்ய விரும்பவில்லை... நாம் ஒரு முன்னோடியான அமைப்பு. ரோட்டரியில், நமக்கு பணம் தேவையில்லை. நாம் ரோட்டரியின் பணத்தை கவனித்துக்கொள்ள வேண்டும். அப்படியென்றால் உண்மையல்லாத உறுப்பினர்களைக் கொண்டிருப்பதில் என்ன அர்த்தம்? எந்த நோக்கத்திற்காக? அரசியலா? சக்தியா? என்ன வகையான சக்தி? நம்மிடம் உள்ள சக்தி, உத்வேகம் மற்றும் உந்துதலில் இருந்து பெறப்பட்டு திடமானதாகவும், உறுதியானதாகவும், உண்மையாகவும் இருக்க வேண்டும். இல்லையெனில் அது நான்கு வழி சோதனையின் முதல் கேள்வியை எதிர்கொள்ளும்: இது உண்மையா? அது உண்மை இல்லை என்றால் எனக்கு, (RI தலைவர்) கார்டன் அல்லது (RIPE) ஸ்டீபனி என யாருக்கும் அதில் ஆர்வமிருக்காது.

சமீபத்தில், இந்தியாவில் மாவட்டப் பிரிப்பு பற்றிய கூட்டத்தில் கலந்துகொண்டவர், “உலகின் இந்த பகுதியில் உள்ள ஒரு மாவட்டத்தில் நாங்கள் மிகவும் கடினமான முடிவை எடுக்க வேண்டியிருந்தது. மாவட்டம் பிரிக்கப்பட்டதில் இருந்து உறுப்பினர் எண்ணிக்கை 8,950ல் இருந்து 7,200 ஆக சரிந்தது, ஒரே ஆண்டில் 1,700 ரோட்டேரியர்களை இழந்தோம். நாங்கள் என்ன செய்தோம் தெரியுமா? பிரிவை ரத்து செய்தோம். அந்த மாவட்டம் இனி பிரிக்கப்படாது. முந்தைய ஆண்டின் முடிவை நாங்கள் திரும்பப் பெற்றோம். இது நிலையானதாக இல்லாவிட்டால், அது நடக்கப்போவதில்லை” என்று RIPN டி கமார்கோ கூறினார்.

அவரது நோக்கத்தை பற்றி பலர் அவரிடம் கேட்டுள்ளனர். “இது என் நோக்கம் என்று நான் சொல்லமாட்டேன், இது நம் நோக்கம். நம் நிறுவனங்களை பலப்படுத்துவதே நமது நோக்கம் மற்றும் வேறு எந்த நிறுவனத்திற்கும் இல்லாத ஒரு சிறந்த சொத்து எங்களிடம் உள்ளது - நீங்கள். ரோட்டரியின் மிகவும் மதிப்புமிக்க சொத்து TRF அல்லது அதன் பணம் அல்ல, அதன் உறுப்பினர்கள். நீங்கள் சங்கம் மற்றும் சமூக மட்டங்களில், சிறிய நகரங்களின் மட்டத்தில் மாயாஜாலத்தை உருவாக்குகிறீர்கள். அது இந்தியா அளவில் பெரிதாக இருக்கிறது!

ரோட்டரியின் முன் இருக்கும் மிகப்பெரிய சவாலானது, மாற்றத்தைத் தழுவி, அமைப்பு மற்றும் அதன் தாக்கத்தை வளர்ப்பது தான். “அப்படியானால் இதை எப்படி செய்யப் போகிறோம்? ஒரு சில வழிகளில்; முதலில், புதுமை... புதிய விஷயங்களைச் செய்வது. நாம் செயல்பாட்டாளர்கள், நாம் நினைப்பது மட்டுமல்லாமல், அதை செய்து முடிக்கிறோம். எனவே நாம் ஆக்கப்பூர்வமாக மட்டுமல்ல, புதுமையாகவும் இருக்கவேண்டும்.

டி கமார்கோ வழங்கிய ஒரு உதாரணம், புதிய ஃபார்மேட் சங்கங்களைத் தழுவுவதாகும். RIPN-ஆக அவரை தேர்ந்தெடுத்த நியமனக் குழுவின் தலைவரால் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளில் ஒன்று: ‘ரோட்டரியில் பன்முக த்தன்மையை அதிகரிக்க புதிய வடிவமைப்பு சங்கங்களை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துவீர்கள்?’. “நான் இதை பற்றி நிறைய சிந்தித்துள்ளேன். ரோட்டரியின் துணை சங்கங்களில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர் என்பது உங்களுக்கு தெரியுமா? 9,000 மட்டுமே; அதாவது 1.2 மில்லியன் உறுப்பினர்களில் 0.75 சதவீதம். நமக்கு ஒரு பெரிய வாய்ப்பு உள்ளது, நாம் மாறுப்பட்ட சிந்தனையுடன் இதை அணுகவேண்டும் என பதிலளித்தார்.

RI இயக்குநராக (2019–20) தான் இருந்த ஆண்டில், “மிகவும் பழமையான (75 ஆண்டுகள்) மற்றும் 105 உறுப்பினர்களைக் கொண்ட பாரம்பரிய சங்கத்தை துணைச் சங்கம் பெறுவதற்குத் துணிந்து சவால் விடுத்தேன். துணைச் சங்கங்கள் இரண்டாம் தர சங்கங்கள் என்று அவர்கள் நினைத்ததால் அவர்கள் யோசனையை எதிர்த்தனர். அவர்கள் அதை எதிர்த்ததால், நான் அதை சாசனம் செய்ய ஒரு வலுவான கருத்தை முன்வைத்தேன். அவர்கள் இறுதியாக 45 உறுப்பினர்களைக் கொண்ட எனது மனைவியின்

சங்கத்தை ஏற்றுக்கொண்டு பட்டயப்படுத்தினர். அதனால் எனது சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 105ல் இருந்து 150 ஆக உயர்ந்தது! என அவர் நினைவு கூர்ந்தார்.

“இது மனநிலை மாற்றம் மட்டுமே. மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது மாற்றம் நம்மை கொல்லும். நாம் என்ன நினைத்தாலும் சரி ரோட்டரியில் மாற்றம் ஏற்படும். நம்மை சுற்றியுள்ள சமூகங்கள், நாம் வாழும் நகரங்கள் அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கின்றன. 2007ல் இந்தியாவுக்கு அவர் மேற்கொண்ட முதல் வருகையிலிருந்து இப்போது ஐந்தாவது வருகை வரை இந்தியா வேகமாக வளர்ந்து வருவதை அவர் கண்டுள்ளார். “அந்த பரிணாமத்தை ரோட்டரி பின்பற்றுகிறதா இல்லையா? என கேள்வி எழுப்பினார்.

RI தலைவர் கார்டன் மெக்கினலி, ஒரு RIPN-ஆன தன்னை இன்ஸ்டிட்யூட்டில் கலந்துகொள்ள அனுமதித்ததற்காக நன்றி தெரிவித்த டி கமார்கோ, அவ்வாறு செய்வதன் மூலம், மெக்கினலி ரோட்டரியில் ‘தொடர்ச்சி’ மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து மிகவும் வலுவான செய்தியை அனுப்புவதாக கூறினார். “மேலும் அதை காட்டிலும், மிக முக்கியமான ரோட்டரி கமிட்டிகளில் நான் பங்கேற்கவும், அவற்றில் நெருக்கமாக ஈடுபடவும் என்னை அனுமதித்துள்ளனர். ஓரிரு வருடங்கள் கழித்து அல்லாமல், நான் இப்போதே அதைச் செய்யத் தூண்டப்பட்டேன்.

“இந்த ஆண்டு நான் ஐந்து இன்ஸ்டிட்யூட்களில் பங்கேற்றுள்ளேன், இது தலைவர் மெக்கினலியால் மட்டுமே சாத்திய மானது என்பதை நான் ஒப்புக் கொள்ள வேண்டும். தன்னைத் தாண்டிச் சிந்தித்து, “உங்களுக்கு எங்கேயும் எப்போதும் அழைப்பு விடுக்கப்பட்டால், தயவுசெய்து நீங்கள் வரவேண்டும், நாம் ஒருவருக்கொருவர் சேர்ந்து நடப்போம்” என அமைப்பின் நலனுக்காக கூறும் உன்னதமான தலைவர் அவர். இயக்குநர்கள், மாவட்ட ஆளுநர்கள், சங்கத் தலைவர்கள் ஆகியோருக்கு


RIPN டி *காமர்கோ மற்றும்* RI *இயக்குனர்* T N *சுப்ரமணியன்.*

முன்னுதாரணமாகத் திகழ்கிறார். இது தான் ரோட்டரியின் மெய்ப்பொருள்.”

மெக்கினலியின் உதாரணம் மிகவும் முக்கியமானது மற்றும் ரோட்டரி படிநிலைகளில் அவை பின்பற்றப்பட வேண்டும். இயக்குநர்கள், DGகள், DGEகள் மற்றும் DGNகளுக்கு இது ஒரு தெளிவான செய்தியாக இருந்தது. 2023–24, 2024–25 மற்றும் 2025–26 ஆளுநர்கள் இங்கு உள்ளனர். என்னைப் பொறுத்தவரை நீங்கள் ஒரு அணி, ஒரு ரோட்டரி அணி. 2025–26 ஆளுநர்கள் தங்கள் முன்னோடிகளிடமிருந்து வேறுபட்ட யோசனைகளைக் கொண்டிருப்பது நல்லது மற்றும் ஆரோக்கியமானது தான். ஆனால் நீங்கள் ஒன்றாக பணியாற்ற வேண்டும். உங்கள் பணியை மேம்படுத்துவதற்காக உங்கள் முன்னோடிகளின் வேலையை அழிக்காதீர்கள்! ரோட்டரி அதைப் பற்றியது அல்ல.

அவர் 1999–2000-ல் DG-ஆக இருந்த ஆண்டின் உதாரணத்தைக் கூறினார், “TRF நிதி திரட்டலுக்கான சாதனையை எனது மாவட்டம் முறியடித்தது.” இருப்பினும், அவர் அந்த ஆண்டு தனது சொந்தப் பணத்திலிருந்து ஒரு டாலரை கூட கொடுக்காமல், அதை தனக்கு பின் வருபவரின் ஆண்டிற்கு ஒரு பெரிய நன்கொடையாக கொடுக்க ஒதுக்கினார், ஆனால் ஒரு நிபந்தனையுடன் TRF நிதி திரட்டலுக்காக நான் செய்த சாதனையை அவர் முறியடிக்க வேண்டும். அது தான் ரோட்டரியின் மெய்பொருள் மற்றும் ரோட்டரி அத்தகைய மெய்பொருளை தான் அங்கீகரிக்கிறது. மக்கள் உங்களைப் பார்ப்பது நீங்கள் எதைச் சாதித் தீர்கள் என்பதால் அல்ல, ஆனால் மற்றவர்களுக்கு எதைச் சாதிக்க உதவுகிறீர்கள் என்பதால் என்று அவர் மேலும் கூறினார்.

அவர் RI தலைவராக இருக்கவிருக்கும் 2025–26 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, டி கமார்கோ, அது எனது ஆண்டு அல்ல. 2025–26-ஐ என்னால் சொந்தம் கொண்டாட முடியாது. கிரேக்கக் கடவுள் க்ரோனோஸ் தான் நேரத்தை தன் வசம் வைத்துள்ளார். நாம் அல்ல; நாம் காலத்தின் குடிமக்கள் மட்டுமே, அதை நாம் கட்டுப்படுத்த முடியாது. நம் பணி இப்போதே தொடங்குகிறது என்று நான் DGN-களிடம் சொன்னேன்; இது ஒரு விரைவான, மிகக் குறுகிய கால மகிமை மட்டுமே. கூட்டு முயற்சிக்கு அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. 2025–26 இல் முடிவுகளை வழங்க வேண்டுமானால், நாம் இப்போதே வேலையைத் தொடங்கவேண்டும்! என்றார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# பாலின சவால்களை உடைக்கும் நிகர் ஷாஜி

ரஷீதா பகத்



RI தலைவர் கோர்டன் மெக்கினலி RI இயக்குனர் ராஜு சுப்பிரமணியன், இஸ்ரோவின் ஆதித்யா-L1 திட்ட இயக்குனர் நிகர் ஷாஜி மற்றும் அவரது சகோதரர் PDG S ஷேக் சலீம் ஆகியொருடன் உரையாடுகிறார்.

"ISROல் நாங்கள் தொடங்கிய அனைத்துத் திட்டங்களும் நன்கு நடைபெற்று வெற்றியடையக் காரணங்கள், செய்கிற அனைத்திலும் பெருமை கொள்ளவேண்டும் என்கிற எங்களுடைய மந்திரமும், சேர்ந்து பணியாற்றும் உணர்வும்தான். ஆதித்யா திட்டத்துக்கும் அதுதான் கை கொடுத்தது" என்கிறார் ISRO-ன் ஆதித்யா-L1 என்கிற, தன்னுடைய இலக்கை எட்டியுள்ள, இந்தியாவின் முதல் சூரியக் கண்காணிப்புக் கருவித் திட்டத்தின் இயக்குநர் நிகர் ஷாஜி. சூரியனை நோக்கிச் செல்லும் ஆதித்யா-L1 திட்டத்திற்குத் தலைமை தாங்கிய இவர் பெங்களூரு சந்திப்பில் பெருமைப்படுத்தப்பட்ட போது இவ்வாறு பேசினார்.

ஆதித்யா-L1 திட்டத்தின் வெற்றியைப்பற்றிப் பேசிய நிகர் "இங்கு ரோட்டரி எனக்கு வழங்கும் பெருமையை நான் என் குழுவுக்கு அர்ப்பணிக்கிறேன். இன்றைய தேவையாக இருக்கிற சூரிய ஆராய்ச்சியிலும் இந்தியா ஈடுபடுவதைச் சாத்தியமாக்குகிற இந்தத் திட்டத்தின் தலைவராகச் செயல்பட்டது எனக்கு மிகுந்த பெருமையைத் தந்தது," என்றார். (இந்தச் சந்திப்பு டிசம்பரில் நிறைவடைந்தது. அதன்பிறகு, இந்த ஆய்வகம் விண்வெளியில் ஒரு சிறந்த இடத்தில் வெற்றிகரமாக நிறுத்தப்பட்டுவிட்டது. அங்கிருந்து அது சூரியனை இடைஞ்சலில்லாமல் கண்காணிக்கும்.) நிகர் RID 3212 PDG S ஷைக் சலீம் அவர்களுடைய சகோதரி ஆவார்.

ISRO அமைக்கப்பட்டதன் பின்னாலிருந்த நோக்கத்தை நினைவுகூர்ந்த இந்த வான்வெளிப் பொறியாளர் "நம் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த விண்வெளித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் இலக்குடன் தொலைநோக்காளர் விக்ரம் சாராபாய் ISRO-ஐத் தொடங்கினார். ரோட்டரியன்களான நீங்களும் இதுபோல் உள்ளூரிலும் பன்னாட்டளவிலும் மனித குலத்துக்குச் சேவை புரிகிறீர்கள்.



இடமிருந்து: Rtn ரவி சங்கர், RID 3232 PDG J ஸ்ரீதர், அவரது மனைவி புனிதா, நிகர் ஷாஜி, RID 3212 PDGs V R முத்து மற்றும் ஷேக் சலீம்.

இளம்பிள்ளைவாதத்தை அகற்றுதல் போன்ற நெடுநாள் திட்டங்களைப் பல பில்லியன் டாலர்கள் செலவழித்து நீங்கள் நடத்தியிருப்பதை அறிந்து நான் உண்மையில் வியந்தேன். இப்போது நீங்கள் ஆப்பிரிக்க நாடுகளில் மலேரியாவை அகற்றுதல் போன்ற திட்டங்களை நடத்திவருகிறீர்கள்" என்றார்.

"நாம் (சந்திராயன்-3 வழியாக) நிலாவில் இறங்கியதால், ஆதித்யா திட்டத்தால், நம்முடைய மற்ற சாதனைகளால், விண்வெளித் திட்டங்களை உருவாக்கியுள்ள அனைத்து நாடுகளும் இன்று நம்மை மதிக்கிறார்கள். இப்போது, இந்த நாடுகள் நம்முடன் இணைந்து செயல்பட முன்வருகிறார்கள். இது நமக்கு ஒரு மிகப் பெரிய சாதனை. வளரும் நாடாக மாறுவதை நோக்கி நகர்ந்துவரும் நம் நாட்டுக்கு இது இப்போதைய தேவை" என்று பலத்த கைதட்டலுக்கு நடுவில் அவர் தொடர்ந்து சொன்னார்.■

# தென் தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ரோட்டேரியன்கள் உதவி

ஜெய்ஸ்ரீ

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் மிசுவாங் புயல், மழை வெள்ள பாதிப்பிலிருந்து மீண்டு வருவதற்குள், பெருமழை, வெள்ளத்தின் தாக்குதலால் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டனர். பல நகரங்களும் கிராமங்களும் வெள்ளத்தால் சூழப் பட்டன. விவசாய நிலங்கள் நீரில் மூழ்கின. நான்கு மாவட்டங்களிலும் சிறிய நதிகள், நீரோடைகள் கரை புரண்டு ஓடி பாதிப்பை ஏற்படுத்தின.

வீடுகளில் தண்ணீர் புகுந்ததால் மக்கள் வீடுகளின் மேற்கூரைகளிலும், மரக்கிளைகளிலும் தஞ்சமடைந்தனர். பின்னர் அவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டு நிவார முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். இந்திய கடற்படையினரும், தேசிய பேரிடர் மீட்புப் படையினரும் துரிதமாக மீட்புப் பணியில் ஈடுபட்டனர். வெள்ளத்தில் சிக்கிக் கொண்ட மக்களை மீட்க படகுகளும், தீயணைப்பு வண்டிகளும் பயன் படுத்தப்பட்டன. மேலும் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கியிருந்த மக்களுக்கு ஹெலிகாப்டர் மூலம் உணவுப் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டன.

RID 3212 உடன் ஒருங்கிணைந்து ரோட்டேரியன்களும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர். மாவட்ட ஆளுநர் முத்தையா பிள்ளை கூறுகையில், தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் ஒரே நாளில் 110 செ.மீ. மழை பெய்துள்ளது. தாமிரபரணி கரையை ஒட்டியுள்ள பகுதியான, வர்த்தக நகரமான ஏரலில் மக்கள் உணவு மற்றும் மின்சாரம் இல்லாமல் மூன்று நாட்கள் தவிக்கும் நிலை ஏற்பட்டது. பல இடங்களில் சாலைகள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

மின்சாரம் இல்லாததால் பல இடங்களில் தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் மக்கள் சொல்லொணா துயரத்துக்கு ஆளாயினர். ரோட்டேரியன்கள் உடனடியாக களத்தில் இறங்கி 24 மணி நேரமும் செயல்பட்டு படகுகளில் மீட்புக் குழுவினருடன் மக்களைக் காப்பாற்ற உதவினார்கள் என்றார் பிள்ளை. தொலைதூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் 70 குடும்பங்கள் வெள்ளத்தில் சிக்கித் தவித்த காட்சியை அவர் நினைவு கூர்ந்தார். கிராமத்தில் இருந்த இரண்டு கான்கிரீட் வீடுகளில் பெண்களும் குழந்தைகளும் தஞ்சம் அடைந்தனர். ஆண்கள், வெள்ளத்தின் நீர்மட்டம் 11 அடிவரை உயர்ந்ததால் உயிரை காப்பாற்றிக்கொள்ள



மரக்கிளைகளில் தஞ்சமடைந்தனர். நாங்கள் படகில் சென்று அவர்களை மீட்டு வந்தோம்.

மழை சற்று குறைந்த நிலையில் மக்களுக்கு உணவு வழங்குவதில் கவனம் செலுத்தினோம். RID 3203-க்கு உட்பட்ட உடுமலைப்பேட்டை ரோட்டரி சங்க உறுப்பினரும் உடுமைலைப்பேட்டையில் பள்ளி நடத்தி வருபவருமான ராமமூர்த்தி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக மாணவர்கள், பெற்றோர்களால் சமைக்கப்பட்ட 20,000 சப்பாத்தி மற்றும் தக்காளி சட்னியுடன் முதலில் வந்தார். உடனடியாக இரண்டு சமுதாய சமையற்கூடங்கள்-பூமி அறக்கட்டளை சென்னை மற்றும் சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள ஆதரவுடன் தூத்துக்குடி புனித மேரி கல்லூரியில் நிறுவப்பட்டது. மற்றொன்று மாவட்ட ரோட்டேரியன்கள் பெருமுயற்சியில் சக்தி பீடத்தில் ஏற்படுத்தப்பட்டது. இவற்றின் மூலம் ஆயிரக்கணக்கான மக்களுக்கு 5 நாட்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன.



தூத்துக்குடியில் பரந்து விரிந்த நகரமான ஸ்பிக் நகரம், நீர் நிலை களில் ஏற்பட்ட உடைப்பால் 7 அடி நீரில் மூழ்கியிருந்தது. ஸ்பிக் நிறுவனத்துக்கு மழை, வெள்ளத்தால் கச்சாப் பொருள்கள், தயாரிக்கப் பட்ட பொருள்கள், கருவிகள் நீரில் மூழ்கியதால் ரூ.500 முதல் ரூ.600 கோடிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றார் ஸ்பிக் நகர் ரோட்டரி சங்கத்தின் தலைவர் V சுந்தரேசன். தொழிற்சாலை உறுப்பினர் களைக் கொண்ட கார்பொரேட் சங்கமாகும் இது. இந்த சங்கத்தின் சார்பில் உணவு, அடிப்படை மருந்து மாத்திரைகள் மற்றும் பிற அத்தியாவசிய பொருள்கள் தொழிலாளர் குடும்பத்துக்கு வழங்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் முழுநேர இயக்குநர்கூட ரோட்டரி சமூக சமையலறையின் பயனாளிகளில் ஒருவர். வீட்டில் புகுந்த வெள்ள நீர் உயர்ந்ததால் அவர், தனது குடும்பத்தினர் மற்றும் செல்ல நாயுடன் பாதுகாப்பான இடத்தில் இரண்டுநாள் தங்கவேண்டியிருந்தது. பிள்ளை அவர் கூறியதை நினைவு கூர்ந்தார். எங்களுடன் எதையும் எடுத்துச் செல்வது குறித்து யோசிக்கக்கூட நேரமில்லை. விரைவில் எனது மகள்களுக்கு பசியெடுத்தது. ரோட்டரி மூலம் ரொட்டிகள் விநியோகிக்கப்படுவதாக கேள்விபட்டேன். பசித்தவர்களுக்கு உணவு கொடுத்த உங்களை கடவுள் ஆசிர்வதிப்பாராக. என்னிடம் பணம் இருந்தும் உதவியற்றவனாக இருந்தேன் என்று அவர் கூறினாராம்.

குடிநீர் மற்றும் சானிடரி பேடுகளுக்கு அதிக தேவை ஏற்பட்டது. 50,000-த்தும் மேற்பட்ட நாப்கின்கள் விநியோகிக்கப்பட்டன. மாவட்ட ஆளுநர் 30,000 நாப்கின் களையும், ஈரோடைச் சேர்ந்த பெல்லா என்னும் சானிடரி பேட் தயாரிப்பாளர்கள் 25,000 சானிடரி பேடுகளும் கொடுத்து உதவினர்.

மழை முழுவதுமாக நின்றவுடன் மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள். அந்த சமயத்தில் நிவாரணப் பொருள்கள் அடங்கிய தொகுப்பு பை வழங்கப்பட்டது. RID 3000-க்கு உட்பட்ட திண்டுக்கல் ரோட்டரி சங்கம் முதல் கட்டமாக மளிகை பொருள்கள் அடங்கிய 500 பைகளை அனுப்பியது. காரைக்குடி



*RC திருநெல்வேலி ஸ்டார் உறுப்பினர்கள், தலைவர் T சதீஷ் நாராயணன் உடன், ஒரு பெண்ணுக்கு மளிகைப் பொருட்களைக் கொடுக்கிறார்கள்.*

ரோட்டரி சங்கம் (RID 3212) மளிகைப் பொருள்கள், துணிகள் அடங்கிய 300 பைகளை அனுப்பியிருந்தனர். RID 3201 DG விஜயகுமார், DGE செல்லா ராகவேந்திராவுடன் இணைந்து கோவையில் உள்ள 50 ரோட்டரி சங்கங்கள் மூலம் நிவாரணப் பொருள்கள் அடங்கிய 2,300 தொகுப்பு பைகளை நான்கு லாரிகளில் கொடியசைத்து அனுப்பிவைத்தார். ஒவ்வொரு நிவாரண தொகுப்பு பையும் ரூ.1,700 மதிப்பு கொண்டவை. அவற்றில் ஆடவர், மகளிர், குழந்தைகளுக்கான துணிமணிகள், போர்வைகள், மெழுகுவர்த்திகள், மளிகைப் பொருள்கள் சானிடரி உபகரணங்கள் என 37 பொருள்கள் இருந்தன.

இந்த மாவட்டங்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரோட்டேரியன்கள் அவர்களின் வீடுகளுக்கே நேரில் சென்று நிவாரணப் பொருள்களை வழங்கினர். பல இடங்களில் முழங்கால் அளவு தண்ணீர் இருந்த்தால் நிவாரணப் பொருள்களை தலையில் சுமந்து செல்ல வேண்டியிருந்தது என்று தூத்துக்குடி பேர்ள் சிட்டி ரோட்டரி சங்கத்தின் தலைவர் முகமது இப்ராகிம். மாவட்ட ஆளுநர் பிள்ளை மூன்று பகுதிகளுக்கும் நேரில் வந்து மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுவதை பார்வையிட்டார். பெரும்பாலான வீடுகள் சேத மடைந்திருந்தன. வீட்டில் இருந்த வீட்டு உபயோக கருவிகள் பழுது பார்க்க முடியாத நிலையில் இருந்தன. குழந்தைகள் பசியால் துடிப்பதையும் வயதானவர்களும் மாற்றுத்திறனாளி களும் தங்களை காப்பாற்றிக் கொள்ள போராடியதையும் பார்க்க வேதனையாக இருந்தது.

உடுமலைப்பேட்டை, உடுமலைப்பேட்டை தேஜாஸ், சேலம் தெற்கு, சத்யமங்கலம், பெங்களூர் அல்சூர், பெங்களூர் என்கேஜ் இந்தியா, வேலூர் மற்றும் 3231 மற்றும் 3232 மாவட்டங்களுக்கு உட்பட்ட ரோட்டரி சங்கங்கள் லாரிகளில் நிவாரணப் பொருள்களை அனுப்பிவைத்தனர். நிவாரணப் பொருள்களின் மொத்த மதிப்பு ரூ.2 கோடி இருக்கும். இப்போது எங்களிடம் கூடுதலாகவே நிவாரணப்



*RID 3201 கோயம்புத்தூர் ரோட்டரி சங்கங்கள் மூலம் RID 3212 மாவட்டத்திற்கு அனுப்பப்பட்ட வெள்ள நிவாரணப் பெட்டிகள் DG முத்தையா பிள்ளை மற்றும் PDG V R முத்து பெற்றுக்கொண்டனர். RID 3201 DGN செல்லா ராகவேந்திரா வலதுபுறம் காணப்படுகிறார்.*



*RC பேர்ல்சிட்டி தூத்துக்குடி தலைவர் முகமது இப்ராஹிம், முன்னாள் உதவி ஆளுனர்கள் சகாயராஜ் மற்றும் பாலமுருகன் திருநங்கைகளுக்கு நிவாரணப் பெட்டிகளை அளிக்கிறார்கள்.*





DG *முத்தையா பிள்ளை போலியோவால் பாதிக்கப்பட்ட ராமனிடம் நிவாரணப் பொருட்களை ஒப்படைக்கிறார். RC திருநெல்வேலி ஸ்டார் தலைவர் சதீஷ் நாராயணன் வலப்பக்கம் உள்ளார்.*

பொருள்கள் உள்ளன என்றார் மாவட்ட ஆளுநர். முன்னதாக பேரிடர் ஏற்பட்ட போது பிள்ளை அதுபற்றி RID அனிருதா ராய்சௌத்ரி தெரியப் படுத்தினார். அவர் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் சுற்றறிக்கை அனுப்பி மக்களுக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

பல ரோட்டரி சங்கங்கள் 3212 மாவட்ட ரோட்டரிக்கு நிதி அளித்தது. RID 3000 PDG P கோபாலகிருஷ்ணன் கரூரில் உள்ள ரோட்டரி சங்கங் களிடம் திரட்டிய ரூ.1.5 லட்சத்தை எங்களுக்கு அனுப்பி வைத்தார். சிவகாசி, விருதுநகர் மற்றும் சிவகாசி ஸ்பார்க்லர் ரோட்டரி சங்கங்கள் உணவு தயாரித்து விநியோகம் செய்ய நிதியுதவி அளித்தன. RID 3203 DG சுந்தர்ராஜன் ரூ.2 லட்சம் நன்கொடையாக வழங்கினார். அந்த பணம், பார்வையற்ற ஒருவரின் வெள்ளத்தால் சேதமடைந்த வீட்டை புனரைமைக்க உதவியது.

இப்போது நிலைமை அவ்வளவு மோசமாக இல்லாததால் எங்கள் கவனம் மறுவாழ்வின் மீது உள்ளது என்றார் பிள்ளை. கிறிஸ்துமஸ் காலத்தில் வர்த்தக நகரமான ஏரல் பரபரப்பாக இருக்கும். ஆனால், இப்போது வெறிச்சோடி சோகத்துடன் காட்சியளித்தது. கிறிஸ்துமஸுக்கு ஒருவாரம் முன்னதாக ஜவுளிகள், ஆடைகள், பட்டாசுகள், மளிகைப் பொருள்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன என்றார் சுந்தரேசன்.

தள்ளு வண்டியில் உணவகம் நடத்தி வந்த, போலியோவால் பாதிக்கப்பட்ட இளைஞரின் கதையை பிள்ளை விவரித்தார். வெள்ளத்துக்கு பிறகு அவரிடம் ஏதும் இல்லை. எனவே அவருக்கு நாங்கள் ஒரு ஸ்டவ் அடுப்பு, பாத்திரங்கள், டேபிள், நாற்காலிகள் வாங்கிக் கொடுத்தோம். அவரது தள்ளு வண்டியையும் சரி செய்து கொடுத்தோம். மேலும் ஒருவாரத்துக்கு தேவையான மளிகைப் பொருள்களையும் வாங்கிக் கொடுத்தோம். இவற்றின் மொத்த மதிப்பு ரூ.20,000. இதனால் மகிழ்ச்சி அடைந்த அந்த இளைஞர் அடுத்த நாளே இட்லி, தோசை, பூரி உள்ளிட்ட உணவுகளை தயாரித்து வழங்குவதில் ஆர்வமாக இருந்தார்.



RC *பேர்ல்சிட்டி தூத்துக்குடி பார்வையற்றவர்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்களை வழங்குகிறது.*

திசையன்விளை எலைட் ரோட்டரி சங்கத்தின் தலைவர் அஜீஸ், 6 மாத கைக்குழந்தையுடன் தவித்த ஒரு விதவைக்கு பெட்டிக் கடையை சீரமைக்க ரூ.10,000 நிதி உதவியதையும் மேலும் நில உரிமையாளருக்கு ஆண்டு வாடகையாக ரூ.12,000 கொடுத்து உதவியதையும் குறிப்பிட்டார். அந்த நில உரிமையாளர் எங்கள் சேவையால் ஈர்க்கப்பட்டு மாத வாடகை ரூ.1,300 என்பதை ரூ.1,000-மாக குறைத்துக் கொண்டதையும் நினைவுகூர்ந்தார்.

தற்போது ரோட்டேரியன்கள், வீடுகளைச் சீரமைக்கும் கோரிக்கைகளை பெற்று வருகின்றனர். வெள்ளத்தால் வயல்களில் பல இடங்களில் களிமண் படிந்துள்ளது. அவற்றை அகற்ற பல மாதங்கள் ஆகும். கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப் பட்டன. சுமார் 200 குடும்பங்கள் ஆடு கேட்டுள்ளனர். தூத்துக்குடி பகுதி உப்பளங்களுக்கு பெயர்பெற்றது. கரையோரம் உப்பளங்களும், செங்கற்சூளைகளும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன என்றார் பிள்ளை.

மறுவாழ்வுப் பணிகளுக்காக CSR நிதியுதவி பெறுவது குறித்தும், கேரளம் மற்றும் வடகிழக்கு பகுதிகளில் கட்டப்பட்டது போல ரூ.2.5 லட்சம் பட்ஜெட்டில் குறைந்த செலவிலான தங்குமிடங்கள் கட்டித் தருவது குறித்தும் விவாதிக்கப்பட்டு வருகிறது. இந்த மக்களை நாங்கள் சந்திக்கும் போது, அவர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் ரோட்டரி மீது அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை பார்த்து அகமகிழ்ந்து போகிறோம் என்றார் பிள்ளை.■

# 90%க்கும் அதிகமான ரோட்டேரியர்கள் GGகளில் மகிழ்ச்சியாக இருப்பதாக கணக்கெடுப்பு காட்டுகிறது

ரஷீதா பகத்

ரோட்டேரியர்கள் மானியச் செயல்பாட்டில் திருப்தி அடைகிறார்களா என்பதைக் கண்டறிய, ரோட்டரி அறக்கட்டளையின் உலகளாவிய மானியங்களின் (GGs) சமீபத்திய மதிப்பீட்டில், அவை அறிமுகப்படுத்தப்பட்ட கடந்த 10 ஆண்டுகளில், 50 சதவீத சங்கங்கள் ஏதோ ஒரே வழியில் GGகளில் பங்கேற்றதை நாங்கள் கண்டறிந்தோம். அவர்கள் பணம் கொடுத்திருக்கிறார்கள், புரவலர்களாக இருந்திருக்கிறார்கள் அல்லது ஏதாவது ஸ்பான்சர் செய்திருக்கிறார்கள். இது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விஷயம் என்று பெங்களூரு ஜோன் இன்ஸ்டிடியூட்டில், ரோட்டரியின் செயல் திட்டத்தை முன்னோக்கி எடுத்துச் செல்வதில் TRF தாக்கம் தொடர்பான கேள்விக்கு TRF துணைத்தலைவர் பாரத் பாண்டியா பதிலளித்தார்.

PRID C பாஸ்கரால் நடத்தப்பட்ட 'ரோட்டரி அறக்கட்டளை: இன்றும் நாளையும்' என்ற தலைப்பிலான குழு விவாதத்தில் அவர் பங்கேற்றார்.

90 சதவிகிதத்திற்கும் அதிகமான ரோட்டேரியர்கள் GGகளில் திருப்தி அடைந்துள்ளனர் மற்றும் 92 சதவிகிதத்தினர் எஎகள் தங்கள் ரோட்டரி அனுபவத்தின் மிக முக்கியமான பகுதியாக கருது கின்றனர் மற்றும் 95 சதவிகிதத் தினர் எஎக்கு விண்ணப்பிக்க ஆர்வமாக உள்ளனர் என்றும் கணக்கெடுப்பு கண்டறிந்துள்ளது. பங்கேற்பாளர்களின் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கு இது முக்கியமானது என்று ரோட்டரி செயல்திட்டத்தின் முக்கிய கூறுகளை TRF திட்டங்கள் எவ்வாறு முன்னெடுத்துச் செல்கின்றன'' என்ற பாஸ்கரின் கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

செயல் திட்டத்தின் நான்கு முன்னுரிமைகள், நம் தாக்கத்தை அதிகரிப்பது, நம் வரம்பை விரிவுபடுத்துவது, பங்கேற்பாளர் ஈடுபாட்டை மேம்படுத்துவது மற்றும் மாற்றியமைக்கும் திறனை அதிகரிப்பது. ரோட்டரியின் ஏழாவது கவனம் செலுத்தும் பகுதியாக சுற்றுச்சூழலைச் சேர்த்தது, மாற்றத்தை தழுவும் நமது திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. TRF

*PRID கமல் சங்வி, TRF அறங்காவலர் அஜீஸ் மேமன், PRID அசோக் மகாஜன்,TRF அறங்காவலர் லாரி லன்ஸ்ஃபோர்ட், TRF துணைத் தலைவர் பரத் பாண்டியா மற்றும் PRID C பாஸ்கர்.*



மற்றும் நம் செயல் திட்டம் முற்றிலும் ஒத்திசைவில் உள்ளன என பாண்டியா கூறினார்

“TRF திட்டங்கள் இந்த நான்கு முன்னுரிமைகளுடன் ஒத்திசை வில் உள்ளன என்பதை நிரூபிக்க, நமது ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல்ஸ்-ஐ பார்ப்போம்.’’ இதன் முதல் திட்டத்தின் கீழ், மலேரியாவை எதிர்த்துப் போராடுவதற்கு ஜாம்பியாவிற்கு 2 மில்லியன் டாலர் மானியம் TRF வழங்கியது. “பல ஆப்பிரிக்க நாடுகளில், குறிப்பாக ஜாம்பியாவின் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களின் இறப்புக்கான முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.” இதற்கு இணையாக பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் வேர்ல்ட் விஷன் இன்டர்நேஷனல் ஆகியவை தலா $2 மில்லியன் பங்களிப்பு அளித்தது.

“இந்த மானியத் திட்டம் செயல் படுத்தப்பட்ட மாகாணங்களில், மலேரியாவால் ஏற்படும் இறப்பு கணிசமாகக் குறைந்துள்ளது என்பதை ஆரம்பகட்ட முடிவுகள் காட்டுகின்றன, எனவே நாங்கள் நிச்சயமாக எங்கள் தாக்கத்தை அதிகரிக்க உள்ளோம்.’’

இந்த தாக்கம் மேலும் பலப் படுத்தப்பட்டு, அதன் நோக்கம் அடுத்தடுத்த முன்னேற்றங்களால் விரிவடைகிறது. “கேட்ஸ் அறக்கட்டளை அதன் செயல்பாட்டில் மிகவும் மகிழ்ச்சியடைந்து மேலும் $13 மில்லியனை வழங்க முன்வந்துள்ளனர் மற்றும் வேர்ல்ட் விஷன் மேலும் $7 மில்லியனைச் வழங்கியுள்ளது. TRF அறங்காவலர்கள், நாங்கள் கூடுதலாக $10 மில்லியன் தருவோம் என்று வாக்குறுதியளித்தனர்; முதலில் $2 மில்லியன் அசலை கொண்ட இத்திட்டம் இப்போது ஜாம்பியா, நைஜீரியா, காங்கோ மற்றும் மொசாம்பிக் ஆகிய நான்கு நாடுகளில் $30 மில்லியன் முயற்சியாக விரிவடைந்துள்ளது. மலேரியா, நிமோனியா மற்றும் வயிற்றுப்போக்கு ஆகிய மூன்று முக்கிய நோய்களைக் கையாள்வதில் கவனம் செலுத்தப்பட்டு, குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. உலகின் அந்தப் பகுதியில் உள்ள மிகப்பெரிய கொலையாளிகள் இவைகள் தான்.

TRF மெகா திட்டம் எவ்வாறு தாக்கத்தை அதிகரித்தது, அதன் வரம்பை விரிவுபடுத்தியது, ரோட்டேரியர்களை ஈடுபடுத்தியது மற்றும் ஆப்பிரிக்காவில் ஒரு பெரிய சவாலை எதிர்கொள்ளும் வகையில் தன்னை மாற்றிக்கொண்டது என்பதற்கு இது சிறந்த எடுத்துக் காட்டு என்று பாண்டியா கூறினார்.

பாஸ்கர் தனது அறிமுக உரையில், இந்தியாவும் உலகமும் மாறிக்கொண்டிருப்பதாகவும், மாறிவரும் காலத்திற்கேற்ப ரோட்டரியும் ரோட்டேரியர்களும் மாறவேண்டும் என்றும் கூறினார்.

ரோட்டரி உலகின் முக்கியமான மற்றும் ஒருங்கிணைந்த பகுதியாக மாற TRF நீண்ட தூரம் பயணித்துள்ளது. நம் உறுப்பினர் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கவில்லை என்றாலும், TRFக்கான பங்களிப்புகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து, தற்போது ஆண்டுக்கு 350 மில்லியனுக்கும் அதிகமான பங்களிப்பாக இருக்கின்றன. இந்தியாவும் சிறப்பாகச் செயல்பட்டதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் TRF-க்கான இந்திய பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கவை, என்றார்.

பாஸ்கர் அடுத்ததாக, போலியோ நிதிக்கு பங்களிப்பு செய்யும்போது, இந்திய ரோட்டேரியர்களுக்குள் ஊடுருவிய “சோர்வு மற்றும்



# துருக்கிக்குப் பிறகு அடுத்த அமைதி மையம் இந்தியாவில் வருமா?



TRF குழு விவாதத்தில், மத்திய கிழக்கில் ஒரு அமைதி மையம் தொடங்குவதற்கு ஓட்டோ மற்றும் ஃபிரான் வால்டர் அறக்கட்டளை TRF-க்கு $15.5 மில்லியன் பரிசாக அளித்த போதிலும், அடுத்த அமைதி மையத்தை துருக்கியில் அமைக்கும் TRF முடிவில் சிறிது வெளிச்சம் போட்டு காட்டுமாறு TRF அறங்காவலர் லாரி லன்ஸ்ஃபோர்டிடம் நடுவர் PRID C பாஸ்கர் கேட்டுக்கொண்டார். அறங்காவலர்கள் அவ்வாறு செய்ததற்கு என்ன காரணம் என்று கேட்டார்.

"உலகம் முழுவதும் 'மத்திய கிழக்கிற்கு' வெவ்வேறு வரையறைகள் இருக்கலாம். இந்தத் தேர்வுச் செயல்பாட்டில், இதைத் தீர்மானிக்க நாங்கள் இரண்டு வடிப்பான்கள் அல்லது வரம்புகளைப் பயன்படுத்தினோம், அதில் ஒன்று ரோட்டரியின் உள் பிராந்திய வரையறை, துருக்கி அந்த வரையறையில் பொருந்தியது" என லன்ஸ்ஃபோர்ட் பதிலளித்தார்.

துருக்கியை அல்லது எந்தவொரு நாட்டையும் தேர்ந்தெடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு முக்கியமான அளவுகோல், பாதுகாப்பு மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மையம் அமைந்துள்ள சமூகத்தைச் சுற்றி நடப்பது பொதுவாக பாதுகாப்பானதா என்பதுதான். மேலும் ஆங்கிலம் என்பது பாடத்திட்டத்திற்கான தேர்ந்தெடுக்கப் பட்ட மொழி மட்டுமல்ல, அது தங்கும் மற்றும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்தப்படுகிறது. மற்றொரு அளவுகோல் என்னவென்றால், பிராந்தியத்தில் வலுவான ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் இருப்பு. ஏனெனில் இது குடும்பங்களுக்கு விருந்தோம்பல் அளிக்கும் திறனை வழங்குகிறது. துருக்கியில் உள்ள ரோட்டேரியர்கள் இந்த அளவுகோல்களை நிறைவேற்றினர்.

கூடுதலாக, அறங்காவலர்கள் ஏற்கனவே அமைதி மற்றும் மோதல் தீர்வு பகுதியில் முன்னிலையில் இருக்கும் பல்கலைக்கழகங்களை தேடுகின்றனர் என லுன்ஸ்ஃபோர்ட் மேலும் கூறினார், "இறுதியாக, மிக முக்கியமான விஷயம் என்னவென்றால் நாட்டிற்குள் எளிதாக நுழையும் திறன்-பாலினம், பிராந்தியம் பொருட்படுத்தாமல் சமமான அணுகல் மற்றும் விசாவை எளிதாகப் பெறுதல். TRF பணிக்குழு இந்த அளவுகோல்களை ஆய்வு செய்த்து, துருக்கி இந்த தேவைகளை பூர்த்தி செய்தது.

இறுதியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழகம் நன்கொடையாளரின் அளவுகோல்களை பூர்த்தி செய்தது என அவர் கூறினார்; "TRF இதுவரை பெற்ற பரிசு களில் இரண்டாவது முக்கியமான பரிசு இது, எனவே நன்கொடையாளர்களின் உணர்வுகள் மற்றும் விருப்பங்கள் முக்கியம் என கருதப்பட்டது. உலகின் உங்கள் பகுதியில் வரும் அடுத்த அமைதி மையத்தைத் தேர்ந்தெடுக்கும்போது இதே போன்ற அளவுகோல்கள் பயன்படுத்தப்படலாம் என்று லன்ஸ்ஃபோர்ட் மேலும் கூறினார்.

ஆசியாவில் TRF அமைக்கும் அடுத்த அமைதி மையத்தைப் பற்றி சிறிது விவரித்துபேசிய அறங்காவலர் பாண்டியா, இந்தியா போட்டியாளர்களில் ஒருவர் என்பதை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் மற்றும் புனேவைச் சேர்ந்த சிம்பயோசிஸ் பல்கலைக்கழகம் அத்தகைய அமைதி மையத்தை அமைக்க ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது. மேலும் இரண்டு பல்கலைக்கழகங்கள், ஒன்று பெங்களூரிலும் மற்றும் மற்றொன்று ஒடிசாவிலும் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தி யுள்ளன. நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால், அடுத்த ரோட்டரி அமைதி மையம் இந்தியாவில் வரும் என்று நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன்! என்றார்.

ஆர்வமின்மை" பற்றி முன்னாள் TRF அறங்காவலரும் PRIDயுமான அசோக் மகாஜனிடம் ஒரு கேள்வி கேட்டார். போலியோ ஒழிப்பு நடவடிக்கைக்கு பங்களிக்க நமது மண்டலங்களில் உள்ள இந்திய ரோட்டரி சங்கங்களை ஊக்கப்படுத்தவும், மீண்டும் உற்சாகப்படுத்தவும் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்.

நான்கு தசாப்தங்களாக போலியோவிற்கு எதிரான போராட்டத்திற்குப் பிறகு சோர்வு வரக்கூடும் என்றும் குறிப்பிட்ட மகாஜன், ''ரோட்டேரியர்கள் போலியோ ஒழிப்பில் மீண்டும் தீவிரமாக ஈடுபடுவதற்கு தகவல், உத்வேகம் மற்றும் ஊக்கம் தேவை'' என்றார். இந்தியாவில் ஜனவரி 2011-ல் கடைசி போலியோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 2014-ல் WHO-ஆல் போலியோ இல்லாத நாடு என்று சான்றிதழைப் பெற்றது அவர்களின் சோர்வுக்கு இதுவும் ஒரு காரணம். இந்தியா போலியோ இல்லாத நாடாக மாறி கிட்டத்தட்ட 13 ஆண்டுகள் ஆகிறது. நம் மண்டலங்களில் உள்ள பெரும்பாலான ரோட்டேரியர்கள் தங்கள் வேலை முடிந்ததாக உணர்கிறார்கள். ஆனால் இந்த காரணத்திற்காக TRF $2.5 பில்லியன் செலவழித்துள்ளது என்றும் இந்தியாவில் மட்டும் போலியோ ஒழிப்பு முயற்சிகளுக்காக $275 மில்லியன் செலவழித்துள்ளது என்றும் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். இந்தியாவிற்கு வெளியில் இருந்து இதற்கான ஆதரவு பெருமளவில் வந்துள்ளது

என்பதையும், எங்கு போலியோ இருந்தாலும் உலகெங்கிலும் போலியோ பரவ வாய்ப்புள்ளது என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இந்தப் போரில் வெற்றி பெற இந்த நோயிலிருந்து உலகம் முழுவதுமாக விடுபட வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டும். போலியோ நிதிக்கு இந்திய ரோட்டேரியர்களின் பங்களிப்பைப் பொறுத்தவரை, "தாய் கூட அழும் வரை குழந்தைக்கு உணவளிப்பதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் கேட்டாலொழிய கொடுக்க மாட்டார்கள். ஆதித்ய பிர்லா அறக்கட்டளை ஒவ்வொரு ஆண்டும் போலியோவுக்காக $1 மில்லியன் வழங்குகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம், ஆனால் அது தானாகவே வருவதில்லை; அவர்களிடம் கோரிக்கை வைத்து வலியுறுத்த வேண்டும்.

இதேபோல், உலகம் முழுவதும் போலியோவை ஒழிக்கும் வரை போலியோ RI-ன் முதன்மையான முன்னுரிமையாக இருக்கும் என்பதை நினைவூட்டுவதன் மூலம், நமது ரோட்டேரியர்கள் தொடர்ந்து போலியோவுக்கு உதவ வேண்டும் என்று மூத்த தலைவர்களால் வலியுறுத்தப்பட வேண்டும், என்றார்.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானின் நிலைமை குறித்த அறிவிப்பை வழங்கிய TRF அறங்காவலர் அஜீஸ் மேமன், "பல தசாப்தங்களாக ரோட்டேரியர்களின் அர்ப்பணிப்புள்ள முயற்சிகள் மற்றும் வளங்களுக்குப் பிறகும், போலியோவின் கடைசி வழக்குகள் இன்னும் உள்ளன, ஆனால் அவை ஒரு சிறிய புவியியல் பகுதிக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது, முன்னெப்போதையும் விட அதன் ஒழிப்பிற்கு நெருக்கமாக இருக்கிறோம்" என்று அவர் குறிப்பிட்டார்.

GGகள் பற்றிய கேள்விக்கு பதிலளித்த ரோட்டரி அறக்கட்டளையின் (இந்தியா) தலைவர் மற்றும் PRID கமல் சங்வி, TRF அறங்காவலர்களிடம் மானிய விண்ணப்பங்களைச் செயலாக்குவதற்கும், மானிய ஒப்புதலுக்கு பயன்படுத்தப்படும் பல்வேறு அளவுருக்களை மண்டல அடிப்படையில் தேர்வுசெய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார். ரோட்டரி பிராந்தியமயமாக்கலை வலுவாக ஆதரித்து அதனை நோக்கி நகர்ந்து வருவதால், GGகளை அங்கீகரிப்பதில் உள்ள செயல்முறையை ஏன் பிராந்தியமாக்க முடியாது என்ற கேள்விகள் RFI தலைவரான எனக்கு வருகின்றன. ஏனெனில் அமெரிக்காவிலோ அல்லது ஐரோப்பாவிலோ பொருத்தமானது இந்தியாவிற்கு பொருத்தமாக இல்லாமல் போகலாம்.

ஒரு உதாரணம் அளிக்கும் அவர், 20 பள்ளிகளுக்கு ஸ்மார்ட் போர்டு போன்ற மின்-கற்றல் வசதிகளை வழங்குவதற்காக இந்திய ரோட்டேரியர்கள் GG-க்கு விண்ணப்பிக்கும் போது, மானிய அலுவலர் 20 பள்ளிகளுக்குப் பதிலாக ஒரே ஒரு பள்ளியை மட்டும் எடுத்துக்கொள்ளுமாறு கூறுகிறார். அமெரிக்கா அல்லது ஐரோப்பாவில் உள்ள பள்ளிகள் ஒரு குறிப்பிட்ட நிலையை எட்டியுள்ளன. ஆனால் ஆப்பிரிக்கா அல்லது தென் அமெரிக்காவில் உள்ள ஒரு நாடு மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள பள்ளிகள் இத்தகைய திட்டங்கள் பெரிய அளவில் செயல்படுத்தப்பட வேண்டும். பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கும் அல்லது மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கும் அதிகபட்ச நன்மைகளை நீட்டிக்க GGண் மூலம் TRF நிதியைப் பயன்படுத்த



விரும்புகிறோம். அத்தகைய நாடுகளில் கல்வி வசதிகளை 300 அல்லது 500 குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், மிகப் பெரிய எண்ணிக்கையிலான குழந்தைகளுக்கு வழங்க வேண்டும், என்றார் சங்வி.

TRF அறங்காவலர் குழுவிடம் முறையிட்ட சங்வி இந்த நாடுகளை வேறு கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். உதாரணமாக, 20 சதவீத மானியங்கள் இந்தியாவில் பயன்படுத்தப்படுகின்றன. 80 சதவீத GGகள் வளரும் நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன என்று கருதுகிறேன். தரநிலைப்படுத்தலின் அவசியத்தை ஒப்புக்கொள்ளும் அதே வேளையில், TRF அறங் காவலர்கள் பிராந்தியமயமாக் கலை அனுமதிக்க வேண்டும், மேலும் இந்த மானியங்கள் அதிக மக்கள் பயன்பெறுமாறு வசதியாக இருக்க வேண்டும்'' என்றார்.

ரோட்டரி திட்டங்களுக்கு CSR நிதியைப் பயன்படுத்துவதை பற்றி சங்வி பேசுகையில், இந்தியாவில் ரோட்டேரியர்கள் இதுவரை கொண்டு வந்த CSR பணம் மிகவும் சிறியது எனவும், அதுவும் பெரும்பாலும் ரோட்டேரியர்களுக்குச் சொந்தமான அல்லது தலைமை தாங்கும் நிறுவனங்களிடம் இருந்து வந்ததாகவும் கூறினார். ''ஆனால் இந்தியாவில் CSR பணம் ஒரு பெரிய தொகை உள்ளது, மேலும் நாம் தீவிரமாக செயல்பட்டு பெரிய நிறுவனங்களை உள்ளிழுக்க வேண்டும், என்றார்.

RFI இதைச் செய்வதற்கான பல்வேறு முறைகளை ஆராய்ந்து வருவதாகவும், குறிப்பாக பெரிய நிறுவனங்களுக்கான தரப்படுத்தப்பட்ட விளக்கக்காட்சி களை எவ்வாறு உருவாக்குவது, அதில் அவர்களின் ஆர்வத்தைப் பற்றிப் புரிந்துகொண்டு மற்றும் CSR மானியங்களுக்கு ரோட்டரியை அவர்களின் விருப்பமான கூட்டாளராகத் தேர்வுசெய்ய என்ன செய்வது என்பதை ஆராய வேண்டும்.

“நம் வளர்ந்து வரும் உறுப் பினர்களுடன், கடந்த மூன்று ஆண்டுகளில் நம் மண்டலங்களில் உள்ள ரோட்டேரியர்களால் TRF-க்கு அளிக்கப்படும் தனிநபர் தொகையும் தொடர்ந்து வளர்ந்து வருவதை நாங்கள் காண்கிறோம், இது ஒரு அற்புதமான மாற்றம்” என்ற நேர்மறையான செய்தி களை பாண்டியா பகிர்ந்து கொண்டார்.

சமீபகாலம் வரை, ஆண்டு நிதி குறைந்து வந்தது முக்கியக் கவலையாக இருந்தது, இப்போது இந்தப் போக்கு தலைகீழாக மாறிவிட்டது என்றும், தங்கள் மண்டலங்களில் ஆண்டு நிதி வசூல் அதிகரித்திருப்பதாகவும் அவர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். “அதிகமான மாவட்டங்கள் இப்போது பங்களிப்பில் பல படிகள் முன்னேறி வருகின்றன, கடந்த ஆண்டு இந்தியாவில் ஒன்பது மாவட்டங்கள் TRF-க்கு $1 மில்லியனுக்கு மேல் பங்களித்தன.” என்றார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# உறுப்புக் கொடைக்கான ஒரு RAG

ரோட்டரி செய்திக்குழு

இரத்தம், திசு மற்றும் உறுப்புக் கொடைக்கான (BOD) ரோட்டரி செயல் குழுவின் புதிய பிரிவு ஒன்று தொடங்கப் பட்டுள்ளது. இதன் தேசிய ஒருங்கிணைப்பாளர், RC தில்லி மந்தான் பதிவுத் தலைவர் மற்றும் RID 3011ன் உறுப்புக் கொடைத் தலைவர் ராஜேஷ் மிட்டல்.

இந்தக் குழுவின் பணியை அறிமுகப்படுத்திய மிட்டல், “இந்தப் புதிய RAG ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட தளத்தின் வழியாக BOD விழிப்புணர்வு தொடர்பான வளங்களை மையமாக்கும், ஒழுங்குபடுத்தும். எங்கள் இலக்கு, இந்தியாவில் யாரும் உறுப்புகள் இன்றி இறக்கக் கூடாது'' என்றார். இந்தக் குழு, செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள், அறிவுத் தொகுப்பின் வழியாக வளங்களை ஒன்றுதிரட்டும், வல்லுநர்கள், மக்கள் அமைப்புகளில் உள்ள வெற்றியாளர்களுடைய உதவியை நாடும். திட்டங்கள் மற்றும் முன்னெடுப் புகளின் வழியாக உறுப்புக் கொடை பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதற்குச் சங்க மற்றும் மாவட்ட அளவிலான செயல்பாடுகளை இந்த RAG-BOD ஊக்குவிக்கும்.




உறுப்புக்கொடை பற்றிய ரோட்டரியன்களுக்கான கையேடு ஒன்று (இதைத் தொகுத்தவர்: ஹெமாலி அஜ்மெரா) பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்ட ரோட்டரி மாநாடு சந்திப்புப் பொதிகளில் சேர்க்கப்பட்டிருந்தது. https://oneindiaonelaw.org/ என்ற இணையத்தளம் உறுப்புக் கொடையின் சட்ட அம்சங்களைப்பற்றிய தகவல்களை வழங்குகிறது.■

ADVT.

# BECOME A DOCTOR IN USA

## XAVIER UNIVERSITY ARUBA'S 6 YEAR PROGRAMME TO TRANSFORM YOUR AMERICAN DREAM INTO A REALITY



### DOCTOR OF MEDICINE

**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 2 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island - Netherland

**Next 2 years**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

### DOCTOR OF VETERINARY MEDICINE

**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 3 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island- Netherland

**Final year**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

**Limited Seats**

**The session starts in May/September 2024**

To apply, Visit: **application.xusom.com**

Contact: Uday @+91 91 0083 0083 +91 98 8528 2712

email: infoindia@xusom.com

**XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME**

# ரோட்ராக்ட் ரோட்டரியின் பிரதிபலிப்பு

ஜெய்ஸ்ரீ

ரோட்டரியின் எதிர்காலம்தான் ரோட்ராக்ட் என்று பலரும் வர்ணிக்கிறார்கள். ஆனால், ரோட்ராக்ட் என்பது தற்போதுள்ள ரோட்டரிதான் என்று நான் நம்புகிறேன். ரோட்ராக்ட் ரோட்டரி மேஜைக்கு கொண்டு வரும் திறன்கள் அற்புதமானவை. ரோட்டேரியன்களின் திறனுக்கு துணை நிற்பவை என்றார் RI தலைவர் கோர்டான் மெக்கினலி. பெங்களூரில் உள்ள மண்டல கழகத்தில் நடை பெற்ற DRRE மற்றும் DRRN-களுக் கான ரோட்ராக்ட் கருத்தரங்கில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். அவர், ஸ்காட்லாந்தில் சௌத் குயின்ஸ்பெர்ரி ரோட்ராக்ட் சங்க முன்னாள் உறுப்பினர்.

2019 CoL கூட்டத்தில் ரோட்ராக்ட் தரம் உயர்த்தப்பட்ட முடிவு எடுக்கப்பட்டதை அவர் நினைவு கூறுகையில், அந்த முடிவு ரோட்டரிக்கும் ரோட்ராக்ட்டுக்கும் இடையே புதிய உறவை கொண்டு வந்துள்ளதாக கூறினார்.

கூட்டாகச் செயல்படுவதில் வலுவான நம்பிக்கை கொண்டிருக்கும் அவர், நம் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்துவமான பலம் மற்றும் திறமை உள்ளது. நாம் ஒன்றாகச் செயல்பட்டால் பலவற்றை சாதிக்க முடியும். நீங்கள் ரோட்ராக்ட் அல்லது ரோட்டரியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நமது குறிக்கோள் ஒன்றுதான். இந்த உலகத்தை தலைமுறை தலைமுறையாக மக்கள் வாழும் அமைதியான இடமாக மாற்றுவதுதான் அது.

மண்டல கழகத்தின் அமைப்பாளர் RID ராஜூ சுப்பிரமணியன் கூறுகையில், ரோட்ராக்ட் உறுப் பினர்கள் எண்ணிக்கை குறைந்து வருவது பற்றி சுட்டிக்காட்டி, ரோட்ராக்டை வளர்ப்பதில் உள்ள சவால்களை பகிர்ந்து கொள்ளுமாறு மாவட்ட தலைவர்களை அவர் வலியுறுத்தினார். ரோட்ராக்ட் துடிப்புடன் இருப்பதையும், நமது பகுதியில் இருப்பதையும் காணவேண்டுமானால், நீங்கள் ஒவ்வொருவரும் முழுமனதுடன், இதயபூர்வமாக செயல்பட வேண்டும். இந்த மதிப்புமிக்க அமைப்பில் நீங்கள் அனுபவிக்கும் பலன்களை முன்னிலைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மாநாட்டிற்கான பதிவுக் கட்டணம் மற்றும் தங்கும் கட்டணங்கள் முழுவதுமாக தள்ளுபடி செய்யப் பட்டுள்ளன. நீங்கள் எங்களின் ஒருபகுதி. நீங்கள் ரோட்டரியில் இருப்பதால் உலகத்தரம் வாய்ந்த அனுபவத்தை நாங்கள் உங்களுக்கு வழங்க விரும்புகிறோம். இங்கு நீங்கள் கற்றுக்கொள்ளும் பாடங்கள் விலைமதிப்பற்றவை என்றார் சுப்பிரமணியன்.

TRF துணைத் தலைவர் பரத் பாண்டியா, அறக்கட்டளை மானியங்கள், திட்டங்களின் அளவு குறித்து விளக்கினார். ரோட்ராக்ட் தரம் உயர்த்தப்பட்ட கொள்கையின் ஒரு பகுதியாக ரோட்ராக்ட் சங்கங்கள் இப்போது ரோட்டரியுடன் இணைந்து சர்வதேச மானிய திட்டங்களில் பணியாற்றலாம். ரோட்டரி சங்கம் மூலம் மாவட்ட



*RI இயக்குநர் ராஜு சுப்ரமணியன், TRF துணைத்தலைவர் பரத் பாண்டியா மற்றும் ரோட்ராக்ட் தலைவர் அபிநந்தன் ஷெட்டி ரோட்டரி மண்டல மாநாட்டில் ரோட்ராக்ட் தலைவர்களுடன்.*

மானிய உதவிகளையும் பெறலாம். பொறுப்புணர்வும், மேற்பார் வையும் மிகவும் முக்கியமானது. நீங்கள் செலவிடும் ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு காட்ட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஜூலை 2022 முதல் நிறுவன அடிப்படையிலான ரோட்ராக்ட் சங்கங்கள் 5 டாலர், சமூக அடிப்படையிலான சங்கங்கள் 8 டாலர் தனிநபர் நிலுவைத் தொகையாக ரோட்டரி தலைமைக்கு செலுத்துகின்றன. நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு எதிர்ப்பு ரோட்ராக்ட் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்து வருவதை தடுக்கவும் நிறுவனத் தலைவர் கே.பி.நாகேஷ், நிறுவன அடிப்படையிலான சங்கங்களின் 50 சதவீத நிலுவையை தாய் ரோட்டரி சங்கங்கள் செலுத்தலாம், 25 சதவீத நிலுவையை கல்லூரி மற்றும் பல்கலைக்கழகமும் செலுத்தலாம். மீதி 25 சதவீத்த்தை ரோட்ராக்டர்கள் செலுத்தலாம்.



*RI தலைவர் கோர்டன் மெக்கினலி ஒரு ரோட்ராக்டருடன் பேசுகிறார். மாநாட்டு தலைவர் K P நாகேஷ் மையத்தில் காணப்படுகிறார்.*

இது 1 டாலர் அல்லது அதற்கு குறைவாகவே இருக்கும் என்று யோசனை தெரிவித்தார். சமூக அடிப்படையிலான ரோட்ராக்ட் சங்கங்களைச் சேர்ந்த ரோட்ராக்டர்கள் வசதியாக இருப்பதால் அவர்களால் செலவை ஏற்க முடியும் என்றும் கூறினார்.■

# காப்பீட்டு நிறுவனத்துடன் ரோட்டரி உடன்படிக்கை

**ரோட்டரி செய்திக் குழு**

பெங்களூரு மாநாட்டில், ரோட்டரி இந்தியா மற்றும் RFL என்ற காப்பீட்டுத் தரகு நிறுவனத்துக்கிடையில் ஓர் MoU கையொப்பமிடப்பட்டது. இது, ரோட்டரியன் களோ அவர்களால் பரிந்துரைக்கப்படுவோரோ பொது, நல அல்லது வண்டிக் காப்பீட்டுப் பாலிசிகளை வாங்கும் போது நிதி ஓட்டத்திற்கு வழிசெய்யும்.



**இடமிருந்து:** *RI இயக்குநர்கள் அனிருதா ராய்சௌத்ரி மற்றும் ராஜு சுப்ரமணியன், மற்றும் காப்பீட்டு தரகு நிறுவனம் RFL-ன் பிரதிநிதி அனுராக் ஸ்ரீவத்சவ், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு.*

பொதுவாகத் தரகர்களுக்குச் செல்லும் ஊக்கத் தொகைகள் இப்போது ரோட்டரி சங்கம் அல்லது அதன் அறக்கட்டளைக்குச் செல்லும். ரோட்டரியன்கள் மற்றும் அவர்களால் பரிந்துரைக்கப்படுவோர் RFL காப்பீட்டு நிறுவனத்துடன் ஊடாடும்போது, இந்தக் கூட்டுப்பணி நிலையான நிதி ஓட்டத்தை உறுதி செய்யும். RI தலைவர் கார்டன் மெக்கினலி முன்னிலையில், RI இயக்குநர்கள் ராஜூ சுப்ரமணியன், அனிருத்தா ராய்சௌத்ரி இருவரும் RFL பிரதிநிதி அனுராக் ஸ்ரீவத்சவ் உடன் ஒப்பந்தத்தில் கையொப்ப மிட்டனர். இந்த MoU வழியாகச் சங்கங்களுக்குச் சேரும் நிதியைச் சேவைத் திட்டங்கள் மற்றும் சமூக முன்னெடுப்புகளைச் செய்யப் பயன் படுத்தலாம்.

அத்துடன், ரோட்டரி சங்கங்கள் தங்கள் சங்கத்துக்கும் RFLக்கும் இடையிலான தகவல் தொடர்பை நடத்துவதற்கு ஒரு தனி நபரை (இயன்றால், வாரிய இயக்குநர் ஒரு வரை) நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.■

# RI தலைவர் சண்டிகர் விஜயம்

ரஷீதா பகத்

777 உயிர்களைக் காப்பாற்றிய உங்களுக்கு நன்றி என்று மொஹாலியில் உள்ள ஃபோர்டிஸ் மருத்துவமனைக்குச் சென்றபோது RI தலைவர் கார்டன் மெக்கினலி சண்டிகர் ரோட்டரி சங்கம், RID 3080 இன் உறுப்பினர்களிடம் கூறினார். ஃபோர்டிஸ் மருத்துவமனை, 1991-ம் ஆண்டு முதல் ரோட்டரி ஹார்ட்லைன் திட்டத்தில் சங்கத்துடன் கூட்டு சேர்ந்து இலவச இதய அறுவை சிகிச்சைகளை செய்து வருகிறது. இன்றுவரை, இத்திட்டம் இதயக் கோளாறு உள்ள குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்து 777 விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றியுள்ளது.

அவரது மனைவி ஹீதர், PRIP ராஜேந்திர சாபூ, RID 3080-ன் DG அருண் மோங்கியா, சங்கத் தலைவர் அனில் சத்தா, சமூக சேவை இயக்குநர் டீனா விர்க் மற்றும் ஹார்ட்லைன் திட்டத்தின் தலைவர் A K சிங் ஆகியோருடன், RI தலைவர் மொஹாலி மாவட்டத்தைச் சேர்ந்த 8 வயது அனுவை சந்தித்தார். இந்த மருத்துவமனையில் டாக்டர் T குமஹந்த் அவர்களால் அச்சிறுவனுக்கு வெற்றிகரமான இதய அறுவை சிகிச்சை முந்தைய நாள் செய்யப்பட்டது. பின்னர் ஜிம்பாப்வேயைச் சேர்ந்த 16 வயது டாப்னேவையும் சந்தித்தார், டாப்னே தனது இரண்டாவது திருத்த அறுவை சிகிச்சைக்காக ஒரு நாள் முன்னதாக தனது தாயுடன் வந்திருந்தார். முன்னர் 2016-ம் ஆண்டு ஒன்பது வயதில் அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது, அப்போதே அவருக்கு ஒரு அறுவை சிகிச்சை பின்னர் தேவைப்படும் என்று தெரிவிக்கப்பட்டது, அது இப்போது செய்யப்பட்டுள்ளது.

மெக்கினலி, டாக்டர் மஹந்த் ஆகியோர் அவரது இருதயநோய் நிபுணர்கள் குழுவைச் சந்தித்து, பல குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றுவதில் அவர்கள் ஆற்றிவரும் மகத்தான சேவைக்கு நன்றி தெரிவித்ததோடு, ஹார்ட்லைன் திட்டத்திற்கான ஆதரவை




*RI தலைவர் கோர்டன் மெக்கினலியும் ஹீத்தரும் மொஹாலியில் உள்ள ஃபோர்டிஸ் மருத்துவமனையில் ஜிம்பாப்வேயைச் சேர்ந்த இளம் டாப்னேவைச் சந்திக்கின்றனர். மேலும் RC சண்டிகர் தலைவர் அனில் சத்தா, DG அருண் மோங்கியா மற்றும் PRIP ராஜேந்திர சாபூ ஆகியோர் காணப்படுகின்றனர்.*

அங்கீகரித்து, RC சண்டிகர் சார்பாக ஃபோர்டிஸ் மருத்துவமனைக்கு ஒரு மேற்கோளை வழங்கினார்.

PRIP சாபூ மற்றும் அவரது மனைவி உஷா வழங்கிய விருந்து மற்றும் மற்றொரு TRF இரவு விருந்தில், ரோட்டரி அறக்கட்டளைக்கு $93,000 நன்கொடையாக வழங்கப்பட்டது. மேலும், இரவு உணவின் போது, RC யமுனாநகரைச் சேர்ந்த PDG சுபாஷ் கர்க் பஞ்சாபில் முதல் தாய்ப்பால் வங்கிக்கு நிதியுதவி செய்ததற்காகப் பாராட்டப்பட்டார்.

மெக்கினலி மற்றும் ஹீதர் ரோட்டரி வித்யா சாதனுக்குச் சென்று அப்பள்ளியைச் சேர்ந்த 100 மாணவர்களைச் சந்தித்தனர். Rtn மேஜர் B M சிங்கால் 1987-ல் நிறுவப்பட்ட இப்பள்ளி பிற்படுத்தப் பட்ட குழந்தைகளுக்கு கல்வியை வழங்குகிறது. குழந்தைகள் காப்பகத்தை உள்ளடக்கிய இந்த வளாகம், ஆங்கிலம், கணிதம், இந்தி மற்றும் பிற பாடங்களுடன் ஆரம்ப வகுப்புகளை நடத்தும் இலவச சேவையை வழங்குகிறது. ஆறு கணினிகளை கொண்ட ஒரு கணினி அறையும் சேர்க்கப்பட்டுள்ளது.




*RI தலைவர் மெக்கினலியும் ஹீத்தரும் சங்கத்தின் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு வருகை தந்தனர். மேலும் PDG பிரவீன் கோயல், சத்தா, DG மோங்கியா, தொழிற்கல்வி சேவைகள் இயக்குநர் சர்தாஜ் லம்பா மற்றும் பாசு கோயல் உள்ளனர்.*



200க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பள்ளியில் படிக்கின்றனர். RI தலைவரின் விஜயத்தின் போது, மாணவர்கள் தங்கள் கையால் தயாரித்த வாழ்த்து அட்டைகளை வழங்க, அதில் 'கல்வி என்பது தங்கக் கதவின் திறவுகோல்' என்ற மேற்கோளைக் கண்டது RI தலைவருக்கு ஆழ்ந்த உணர்ச்சியை ஏற்படுத்தியதாகவும், அவர் அந்த குழந்தையின் கையால் எழுதப்பட்டதை குறிப்பாக எடுத்துச் சென்றதாகவும் சங்கத்தலைவர் அனில் சத்தா கூறினார்.

சண்டிகர் மற்றும் மொஹாலிக்கு RI தலைவர் மெக்கினலியின் வருகையின் சிறப்பம்சம், மொஹாலியில் உள்ள B R அம்பேத்கர் ஸ்டேட் இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் சயின்ஸில், RC சண்டிகரால் அமைக்கப்பட்ட முதல் தாய்ப்பால் வங்கியை தொடங்கி வைத்ததாகும். நிறுவனத்தின் முதன்மை இயக்குநர் டாக்டர் பவ்னீத் பார்தி, PRIP சாபூ, ஆகியோர் உடனிருந்தனர்.

"தாய் மற்றும் குழந்தை சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும், பிராந்தியத்தில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் நல்வாழ்வை உறுதி செய்வதற்குமான ரோட்டரியின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டும் முக்கிய முயற்சிக்காக" RC சண்டிகரின் உறுப்பினர்களுக்கு RI தலைவர் வாழ்த்து தெரிவித்தார்.

டாக்டர் பவ்னீத், இந்த அதிநவீன வசதியைப் பற்றிய நுண்ணறிவை வழங்கினார் மற்றும் "பாலை சேமித்து வைத்து, விநியோகம் செய்வதில் பாதுகாப்பு மற்றும் தரத்திற்கு உத்தரவாதம் அளிக்க" மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் முறையான நெறிமுறைகள் பின்பற்றப்படும் என்று உறுதியளித்தார். இந்த வசதி, தேவைப்படும் குழந்தைகளுக்கு தாய்ப்பாலை சேகரித்து, சோதனையிட்டு, பதப்படுத்தி, வழங்கும். ஒரே நேரத்தில் 500 யூனிட் பாலை இந்த வசதியில் சேமிக்க முடியும், இது குறைமாத குழந்தைகள் அல்லது தாயின் பால் பெறுவதைத் தடுக்கும் குறிப்பிட்ட மருத்துவ நிலைமைகளைக் கொண்டிருக்கும்

குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கும் .

பாதுகாப்பான தாய்ப்பால் கிடைப்பதை உறுதிசெய்ய தேவையான அதிநவீன உபகரணங்கள் இந்த மருத்துவ மனையில் பஞ்சாப் அரசாங்கத்தால் மொத்தம் 1.1 கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன என்று சத்தா கூறினார்.

பால் வங்கி அமைப்பதற்கு சங்க உறுப்பினர்கள் ரூ.5 லட்சத்துக்கும் மேலான நன்கொடையும், Rtn சுபாஷ் கர்க்கின் நிறுவனமான ருச்சிரா பேப்பர்ஸ் ரூ.31 லட்சமும் CSR பங்களிப்பாக வழங்கியதாக அவர் கூறினார்.

1955-ல் அமைக்கப்பட்ட மற்றும் 161 உறுப்பினர்களைக் கொண்ட RC சண்டிகர் மேற்கொண்ட பல்வேறு திட்டங்களுக்கு RI தலைவரின் வருகையின் போது, “இந்த சங்கத்தை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதில் அவர் ஆற்றிய முக்கியப் பங்கிற்காகவும், குறிப்பிடத்தக்க திட்டங்களை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதலை





1. *RI தலைவர் மெக்கினலி மற்றும் ஹீதர் ரோட்டரி வித்யா சதனில் குழந்தைகளுடன்.*
2. *பள்ளியில் கணினி நிலையத்தில் RI தலைவர் மெக்கினலி மற்றும் ஹீதர். PDG மதுகர் மல்ஹோத்ரா, PRIP சாபு, DG மோங்கியா மற்றும் சத்தா ஆகியோரும் படத்தில் உள்ளனர்.*
3. *மாணவர்கள் தங்கள் ஓவியங்களை RI தலைவர் மெக்கினலி மற்றும் ஹீத்தருக்கு வழங்குகிறார்கள். மேலும் (இடமிருந்து) குல்பீர் டோக்ரா, குர்விந்தர் சாகூ, சத்தா மற்றும் சாபு மற்றும் DG மோங்கியா ஆகியோரும் உள்ளனர்.*





*தாய் பால் வங்கியில்.*

தங்களுக்கு வழங்கியதற்காகவும் PRIP சாபூவிற்கு பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன என்று RI தலைவரின் வருகையை ஏற்பாடு செய்வதில் முக்கிய பங்கு வகித்த சங்க உறுப்பினரும் PDG-யுமான பிரவீன் கோயல் கூறினார்.

RI தலைவரும் ஹீத்தரும் ரோட்டரி ஹவுஸ்ஸில் நிறுவப்பட்ட தொழில் பயிற்சி மையத்தை காண அழைத்துச் செல்லப்பட்டனர், இங்கு வழங்கப்படும் சேவைகளில் கணினி தொழில்நுட்பம், தையல், அழகு பராமரிப்பு மற்றும் தோட்டக்கலை போன்ற படிப்புகள் அடங்கும்.

அழகு பராமரிப்பு வகுப்புகளுடன் சுற்றுப்பயணம் தொடங்க, அங்கு மாணவர்கள் ஹீதர் மெக்கினலியின் உள்ளங்கையில் மெஹந்தியைப் பூசி, வளையல்கள் இட்டு மற்றும் பொட்டு வைத்து அலங்கரித்தனர். இங்கே கற்பிக்கப்படும் நெயில் ஆர்ட் டிசைன்கள் அந்த இரு பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன. அவர்கள் கணினி வகுப்புகளையும் பார்வையிட்டனர், அங்கு RI தலைவர் Tally கற்றலுக்கான புதிய வகுப்பை ஆரம்பித்து வைத்தார். தையல் வகுப்புகள் கவர்ச்சிகரமானதாக இருந்தது, RI தலைவர் ஒரு தையல் இயந்திரத்தில் அமர்ந்து, மிதி இயந்திரங்களின் நுணுக்கங்களைப் புரிந்துகொள்ள முயன்றார். தொழிற்கல்விப் படிப்புகளில் சிறந்து விளங்கி, சொந்த நிறுவனங்களை நிறுவிய பெண்களின் வெற்றிக் கதைகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

கடந்த 33 ஆண்டுகளில் சுமார் 10,000 பயிற்சியாளர்கள் தொழிற்கல்விப் படிப்புகளால் பயனடைந்துள்ளனர் என்று PDG மதுகர் மல்ஹோத்ரா கூறினார். தேர்ச்சி பெற்று வெளியேறும் 10 பெண்களைக் கொண்ட ஒரு தொகுதிக்கு சங்க உறுப்பினர் B B கோயலின் அனுசரணையில் சிங்கர் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டது.

ரோட்டரி இரத்த வங்கிக்கும் RI தலைவர் மெக்கினலி அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அதன் வரலாறு மற்றும் அதை நிறுவுவதில் PRIP சாபூ ஆற்றிய முக்கிய பங்கு அவருக்கு விளக்கப்பட்டது.

ஒரு கூட்டத்தில், DG அருண் மோங்கியா RID 3080-ல் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கிய சமூக நல முயற்சிகளை விவரித்தார். PDG மதுகர் மல்ஹோத்ரா, ஏற்பாட்டுக் குழுவின் தலைவராக பொறுப்பேற்று, RI தலைவரின் வருகையில் முக்கிய பங்கு வகித்தார்.■




RC *சண்டிகர் கட்டிய அமைதி நினைவுச் சின்னத்தில்.*




அமெரிக்கா, மினசோட்டா, RC மேப்பிள் க்ரோவ் உறுப்பினர் ராஜ் கான்கரியாவை கிராம மக்கள் வரவேற்கின்றனர்.



# 33 கிராமங்களுக்கு தண்ணீர் வசதி! தானா ரோட்டேரியன்களின் மகத்தான பணி

ரஷீதா பகத்

தானா மேற்கு ரோட்டரி சங்கம் (RID 3142) மற்றும் மாப்பிள் குரோவ், மின்னஸோட்டா ரோட்டரி சங்கம், யு.எஸ். (RID 5950) இரண்டின் நீண்டகால கூட்டு முயற்சிக்கு நன்றி. மும்பையின் தானாயிலிருந்து 125 கி.மீ. தொலைவில் உள்ள ஜவாஹர், மொகாடா மற்றும் விக்ரம்கட் தாலுகாக்களைச் சேர்ந்த 33 கிராமங்கள் பாசனத்திற்கும், வீட்டு உபயோகத்திற்கும் தண்ணீர் வசதி பெற்றுள்ளன.

குடிநீர், சுகாதாரம், மருத்துவம், கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ரோட்டரி கவனம் செலுத்தி வரும் திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துக்கூறிய சங்கத்தின் முன்னாள் தலைவர் ஸ்ரீராம் சேஷன், கடந்த நான்கு ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட தொடர் முயற்சியின் காரணமாக 33 கிராமங்களில் உள்ள மக்கள் தண்ணீர் வசதி பெற்றுள்ளதாக மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

பழங்குடியினர் அதிகம் வசிக்கும் இந்த கிராமங்களை நாங்கள் தேர்ந்தெடுக்க காரணம் அவர்கள் நீண்டகாலமாக தண்ணீர் பிரச்னையை சந்தித்து வருகிறார்கள். இந்த பிராந்தியத்தில் செயல்பட்டு வரும் தொண்டு நிறுவனமான பிரகதி பிரதிஷ்டான் கடந்த 50 ஆண்டுகளாக அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது. எனவே உள்ளூர் மக்களின் தேவைகளை அது புரிந்துகொண்டுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள 100 கிராமங்களில் பருவமழை பெய்கிறது. ஆனால், மலைப்பாங்கான பகுதியாக இருப்பதால், தண்ணீர் வெளியேறி விடுவதால் கிணறுகள் மற்றும் நீரோடைகள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் வறண்டு விடுகிறது. இங்குள்ள விவசாயிகளுக்கு சிறிய நிலம் மட்டுமே உள்ளது. கோடைக்காலத்தில் தண்ணீர் இல்லாததால் அவர்கள் விவசாயம் செய்ய முடியவில்லை. கரீப் பருவத்தில் மட்டும் அரிசி, தானிய வகைகளை பயிரிடுகின்றனர்.

விளைநிலங்களுக்கு பாசனம் செய்ய தண்ணீர் இல்லாத்தால், விவசாயிகள் தங்கள் குடும்பத்துடன் பக்கத்தில் உள்ள நகர்ப்புறங்களுக்கு வேலைதேடி குடும்பத்துடன் இடம்பெயர்ந்து விடுகின்றனர். இதனால், குழந்தைகளின் கல்வியும் பாதிக்கப்படுகிறது. குடும்ப வாழ்க்கை நிலையும் பாதிப்படைகிறது.

பருவமழைக்குப் பிறகு கிணறுகளில் தண்ணீர் இருந்தாலும், தினசரி வீட்டு உபயோகத்துக்காகவும், தனிப்பட்ட பயன்பாட்டுக்காகவும் மக்கள் நீண்ட தொலைவு சென்று தண்ணீர் எடுத்துவர வேண்டியுள்ளது. அதாவது பெண்கள் மலைப்பாங்கான நிலப்பரப்பில் 2 கி.மீ. வரை சென்று தண்ணீர் எடுத்து வரவேண்டியுள்ளது. இதையடுத்து தானா மேற்கு ரோட்டரி சங்கம் மற்றும் தானாயில் உள்ள இதர சங்கங்கள் மற்றும் மாப்ளே குரோவ் ரோட்டரி சங்கம் இணைந்து கிராம மக்களின் தண்ணீர் பிரச்னைக்கு தீர்வுகாண முன்வந்தன.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு

ஜில்லா பரிஷத் பள்ளி உள்ளது. சில கிராமங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆசிரமம் போன்ற பள்ளிகளை நடத்தி வருகின்றன. ஜில்லா பரிஷத் பள்ளிகளில் 8-ஆம் வகுப்பு வரை உள்ளது. அதன் பிறகு அங்கு படிக்கும் மாணவர்கள் வேறு கிராமங்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளை நாடிச் செல்ல வேண்டியுள்ளது. இதில் மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால் மாணவர்கள் பக்கத்து கிராமங்களுக்குச் சென்று மேல்நிலைப்பள்ளிகளில் படிப்பது மட்டுமின்றி, சில மாணவர்கள் விடாமுயற்சியாக பட்டப்படிப்பையும் முடித்துள்ளனர் என்பதுதான். அதிர்ஷ்டவசமாக பிரகதி பிரதிஷ்டான் கல்வி, சுகாதாரம் மற்றும் குடிநீர் என உதவி செய்து வருகிறது.

2019-ஆம் ஆண்டில் மாப்ளே குரோவ் ரோட்டரி சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது இரு ரோட்டரி மாவட்டங்களும் கூட்டுறவை ஏற்படுத்திக் கொண்டன. அதுமட்டுமல்ல சர்வதேச திட்டத்தை செயல்படுத்தவும் முன்வந்தன. தானா மேற்கு ரோட்டரி சங்கத்தின் ஸ்ரீரங் தேஷ்பாண்டேயிடம் நான் அறிமுகமானேன். எனது சகோதரி அவரின் நண்பர் என்பதால் இது சாத்தியமானது. புவியியல் ரீதியாக சரியான தொடர்பு இல்லாததால் ரோட்டரி திட்டங்களை செயல் படுத்த ஒரு நல்ல சர்வதேச கூட்டாளியை தேர்ந்தெடுப்பது சவாலாகவே இருந்தது. கடந்த கடந்த நான்கு ஆண்டுகளில் 6 சர்வதேச மானியங்கள் ஒரு சர்வதேச மாவட்ட மானியம் மூலம் வலுவான கூட்டுறவை பெற்றோம்.

செயல்படுத்தப்பட்ட திட்டங்களை விவரித்த தானா வெஸ்ட் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ஸ்ரீரங் தேஷ்பாண்டே, இரண்டு வகையான தடுப்பணை கள் மீது கவனம் செலுத்தினோம். முதலாவதாக ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைக்கும் வகையில் நீரோடைகள் மற்றும் சிறய ஆறுகளின் மீது தண்ணீரை தேக்கிவைக்க தடுப்பு அணைகள் கட்டப்பட்டன.

இரண்டாவது வகை சிறிய நிலங்கள் வைத்திருக்கும் விவசாயிகள் பயன்படுத்தும் கிணறுகளுக்கு உதவும் வகையில் நில மேற்பரப்பில் துணை தடுப்பணைகள் கட்டப்பட்டன. கோடையில் வறண்டுபோகும் வண்டல் மண் நீரோடைகள் மூலம் தண்ணீர் கிடைக்க வழி செய்யப்பட்டது. எங்களின் கூட்டாளிகளில் ஒருவரான வசுந்தரா அறக்கட்டளை அறங்காவலர் உமேஷ் முண்டலே மூலம் இதற்கு தீர்வு காணப்பட்டது. அவரின் நிபுணத்துவத்தால் நிலத்தடிக்கு கீழே இருக்கும் பாறை அடுக்குகளில் கான்கிரீட் சுவர் அமைத்து அதன் மூலம் நீரோடைகளிலிருந்து வரும் தண்ணீர் வெளியேறுவதை தடுப்பதே திட்டமாகும்.

இந்த முன்முயற்சிகள் ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்தன. இதன்மூலம் விவசாயிகள் கூடுதல் பயிர் வகைகள் மற்றும காய்கறிகள், பழங்கள் பயிரிட வழியேற்பட்டது. இதைவிட முக்கியமானது அவர்கள் கோடை காலத்தில் பக்கத்து நகரங்களுக்கு வேலைதேடிச் செல்வது தவிர்க்கப் பட்டது. இந்த திட்டம் கிராம மக்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தியுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

தடுப்பணைக்கும், துணை தடுப்பணைக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால் தடுப்பணைகள் நீர்நிலைகளில் தண்ணீரை தேக்கிவைக்கும். துணை தடுப்பணைகள் மழைநீர் வீணாகாமல் தடுத்து நிலத்தடி நீரை அதிகரிக்கச் செய்கிறது. இதன் மூலம் விவசாயிகளின் பாசனக்கிணறுகளில் நீர் மட்டம் அதிகரிக்கிறது. இதனால், கோடை காலத்திலும் அவர்களின் தண்ணீர்த் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

இதில் கூடுதல் நன்மை என்னவென்றால் இடம்பெயர்வதால் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்ட நிலை மாறி இப்போது அவர்கள் இடையூறு இல்லாமல் பள்ளிக்குச் சென்று கல்வி கற்க முடிகிறது என்கிறார் சேஷன். இந்த கட்டுரைக்கான உரையாடலின் போது, அங்குள்ள தண்ணீர் இருப்பு குறித்து எங்களுக்கு விவரித்தார். கடந்த வாரம் நாங்கள் ஒரு தண்ணீர் சேமிப்பு திட்டத்தை நிறைவேற்றினோம். தண்ணீரின் அளவை கண்காணித்த போது, ஒரே நாளில் அதாவது 24 மணி நேரத்தில் தண்ணீர் அளவு 11 அங்குலம் அதிகரித்திருந்தது என்றார் அவர்.

நீண்ட தொலைவு சென்று தண்ணீர் எடுத்துவரும் கடினமான பணிக்கு முற்றுப்புள்ளி வைத்து, பெண்களுக்கு உதவும் வகையில், அவர்களின் வீட்டு வாசலுக்கே தண்ணீர் வசதி ஏற்படுத்தி தந்துள்ளனர் ரோட்டேரியன்கள். கிராமத்துக்கு அருகில் தண்ணீர் கொண்டுவர சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார்கள் போடப் பட்டுள்ளன. இதன் மூலம் பெரிய



தொட்டிகளில் நீரை சேமித்து வைக்க முடியும். பின்னர் இந்த தண்ணீர் வடிகட்டப்பட்டு கிராமத்தில் உள்ள வீடுகளுக்கு பலமுனைகளிலிருந்து விநியோகிக்கப்படுகின்ற என்கிறார் தேஷ்பாண்டே.

இது பெண்களுக்கும் இளைஞி களுக்கும் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இப்போது பெண்கள் தங்களது நேரத்தை பண்ணை களிலும் அல்லது குடும்ப வருமானத்தை பெருக்குவதற்கான வழிகளிலும் செலவிடுகின்றனர். சிறுமிகள் பள்ளிக்குத் தவறாமல் சென்று படிப்பில் கவனம் செலுத்தி வருகின்றனர். நல்ல குடிநீர் தாராளமாக கிடைப்பதால் கிராமமக்களின் ஆரோக்கியமும் மேம்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

தற்போது அதிக தண்ணீர் கிடைப்பதால் சிறு விவசாயிகள் பல்வேறு வகையான காய்கறிகள் மற்றும் பூக்களைப் பயிரிட திட்ட மிட்டுள்ளனர். மேலும் தங்கள் விளை பொருள்களை 200 கி.மீ. தொலைவில் உள்ள மும்பை மொத்தவிலை மார்க் கெட்டில் விற்பதற்கும் திட்டமிட்டு வருகின்றனர். தன்னார்வ தொண்டு நிறுவனமான பிரகதி பிரதிஷ்டான், தானா, தானா லேக் சிட்டி மற்றும் தானா டவுன்டன் ரோட்டரி சங்கங்கள் செயல்படுத்திய திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணித்து வருகின்றன. சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார்கள், குழாய்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகளையும் கவனித்து வருகின்றனர் என்றும் சேஷன் விளக்கினார். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பராமரிப்பு கணக்கு உள்ளது. கிராம மக்களே நிதி திரட்டி செலவிட்டு வருகின்றனர். கிராமப் பஞ்சாயத்தும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளது.

ரோட்டரியின் இந்த திட்டத்தில் பிளாஸம் சாரிடபிள் டிரஸ்ட், சபரி சேவா சங்கம் மற்றும் கிராம சேவை பிரதிஷ்டான் ஆகிய சமூக சேவை அமைப்புகளும் கூட்டாக இணைந்துள்ளன.

**RC தானா வெஸ்ட் உறுப்பினர்கள் மொகடாவில் முடிக்கப்பட்ட ஒரு தடுப்பணையில் ஓய்கோஸ் நீர் மேலாண்மை பிரதிநிதிகளுடன்.**



கடந்த நான்கு ஆண்டுகளில் அமெரிக்க மாவட்டம் மற்றும் தானாயில் உள்ள சில சங்கங்கள் சேர்ந்து இரண்டு தடுப்பணைகள், 15 துணை தடுப்பணைகள் மற்றும் குடிநீர் விநியோக முறைகளை கட்டமைத்துள்ளன. இந்தப் பணி மூலம் 33 கிராமங்களில் 2,099 குடும்பங்களைச் சேர்ந்த 11,700 பேர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தில் இதுவரை நான்கு மானிய உதவிகள் பெறப்பட்டுள்ளன. 2019-ம் ஆண்டிலிருந்து மானியத் தொகை அதிகரித்து வருகிறது. 2019-ல் 30,000 டாலர், அடுத்து 2020–21-ல் 79,000 டாலர் மற்றும் 82,500 டாலர் (அவர் தலைவராக இருந்த போது) மற்றும் 2021–22-ல் 92,000 டாலர் மற்றும் 2022–23-ல் 99,250 டாலர் செலவிடப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட மானியமாக 1,22,000 டாலர் கிடைக்கும் நிலை உள்ளது என்று சேஷன் விளக்கினார்.

தண்ணீர் வசதி திட்டத்தில் கவனம் செலுத்தும் அதே நேரத்தில் அவர்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் திட்டங்களை விரிவுபடுத்தவும் இதன் மூலம் கிராம மக்களுக்கு தண்ணீர் கிடைப்பது மட்டுமின்றி, கல்வி, சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதி கிடைக்கவும், அவர்களின் வாழ்வாதாரத்தை பெருக்கும் வகையிலும் இந்த திட்டங்கள் இருக்கும்.

அடுத்ததாக சிறிய பிளாஸ்டிக் பம்புகளுக்கு பதிலாக சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் 7.5 குதிரை சக்தி கொண்ட சூரிய சக்தியில் இயங்கும் பம்புகளை நிறுவவும் திட்டமிட்டுள்ளோம். இவை 25 பண்ணைகளில் நிறுவப்படும். மேலும் இந்த பண்ணைகளில் சொட்டு நீர்ப்பாசனம் செய்யப்படும்.

கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபரில் இரண்டு கிராமங்களில் மக்களின் வீட்டு வாசலில் தண்ணீர் வழங்கும் வகையில் கட்டப்பட்ட இரண்டு தடுப்பணை களை திறந்துவைக்க கன்காரி இந்தியா வந்திருந்தார். மேலும் மூன்று துணை தடுப்பணைகள் நிறுவப்பட்ட இடத்தையும் அவர் பார்வையிட்டார். ஜவஹர் தாலுகாவில்









உள்ள செரிச்சபாடா கிராமத்திலும், விக்ரம்காட் கிராமத்தில் கும்பிபாடா மற்றும் நிர்மானிபாடாவிலும் கிராம மக்களின் வீடுகளுக்கே தண்ணீர் வழங்கும் வசதியையும் அவர் திறந்து வைத்தார்.

ஆதிவாசிகள் வசிக்கும் கிராமங்களுக்குச் சென்று அவர்களுக்கு ரோட்டரி திட்டத்தின் பயன்கள் கிடைக்கின்றனவா என்பதை உறுதி செய்யும் நோக்கிலேயே இந்தியா வந்ததாக கன்காரி கூறினார். மேலும் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும் இடத்தையும் நாங்கள் பார்வையிட்டோம். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அவர், ராம்வாடி கிராமத்தில் கிராம பஞ்சாயத்து பெண் அதிகாரி உள்ளிட்ட சில பெண்களைச் சந்தித்து அவர்களுக்கு தண்ணீர் வசதி தேவையா என்பதை கேட்டறிந்து உறுதிப்படுத்திக் கொண்டார்.

இந்த முறையும் அதே கிராமத்தின் பெண் தலைவரை சந்தித்தோம். இந்த திட்டம் செயல்படுத்தப் பட்டதை அடுத்து மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா என்று கேட்டபோது, அவரது முகத்தில் மகிழ்ச்சியின் வெளிப்பாட்டை பார்க்க முடிந்தது. தண்ணீர் கொண்டுவருவதற்காக அதிக நேரத்தை செலவிட்ட பெண் குழந்தைகள் இப்போது பள்ளிக்குச் செல்கிறார்களா என்று கேட்டதற்கு, ஆமாம் என்று பதில் அளித்தார். அது எனக்கு மகிழ்ச்சி அளித்தது. இது போன்ற கலந்துரையாடல்கள்தான் ரோட்டேரியன்கள் அதிக சேவை களைச் செய்வதற்கு புத்துணர்ச்சி யையும் ஊக்கத்தையும் அளிக்கிறது என்று அவர் ரோட்டரி நியூஸிடம் தெரிவித்தார்.

நிதி திரட்டுவது சவாலானது. ஆனால், அதன் முடிவு திருப்தி அளிக்கிறது. தகவல் தொழில் நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியால் இப்போது நன்கொடையாளர்கள் தங்களின் பங்களிப்புக்கு என்ன வேலை நடந்துள்ளது என்பதை காட்சியாக பார்க்க முடிகிறது. இதன் மூலம் அவர்களுக்கு நம்பிக்கை பிறக்கிறது.

ஆனால், நேரில் சென்று பார்ப்பது மிகவும் உறுதியானது. கடந்த நான்கு ஆண்டுகளில் எனது மாவட்டத்தைச் சேர்ந்த சங்கங்களும் அதன் உறுப்பினர்களும் மிகவும் திறந்த மனதுடனமும், தாராளத்தன்மையுடன் செயல்பட்டு வந்துள்ளனர். சிலர் திட்டச் செயல்பாடுகளை என்னுடன் நேரில் பார்த்துள்ளனர். அவர்களின்

**மேலே:** *ஸ்ரீராம் சேஷன், கான்காரி, பிரகதி பிரதிஷ்தான் தலைமை நிர்வாக அதிகாரி வீரேந்திர சம்பனேகர் மற்றும் சங்க தலைவர் ஸ்ரீரங் தேஷ்பாண்டே கிராம மக்களுடன்.*



PDG *கைலாஷ் ஜெதானி (நடுவில்) மற்றும் கங்காரி (வலது), ரோட்டேரியன்களுடன் ஒரு கிராமத்தில்.*



கங்காரியா மொகடாவில் உள்ள கிராம மக்கள் உடன்.

முதல் அனுபவம் எங்களுக்கு பலவிதங்களில் கைகொடுத்துள்ளது.

நம்பகமான கூட்டாளிகளைக் கண்டுபிடிப்பது பெரும் சவாலாக இருக்கும். ஆனால், அதில் எங்களுக்கு வெற்றி கிடைத்தது. அந்த வகையில் எனக்கு மகிழ்ச்சி தான். ரோட்டரி மாவட்டம் 3142-ஐ கூட்டாளிகளாக கொண்டதற்கும் ஸ்ரீராம் சேஷன் போன்ற அர்ப்பணிப்புள்ள உறுப்பினர்களை பெறுவதற்கும் நாங்கள் அதிர்ஷ்ட்ட சாலிகள். தானா வெஸ்ட் ரோட்டரி சங்கம் மூலம், தானா லேக்சிட்டி ரோட்டரி சங்கம், தானா மிட்டவுன் ரோட்டரி சங்கங்களின் நட்புறவு கிடைத்தது. கொரோனா தொற்றுக் காலத்திலும் அவர்கள் ஒரு சர்வதேச மானியத் திட்டத்தை செயல்படுத்தினர்.RID 3142 சர்வதேச கூட்டாளியாக இருந்தது. மாப்ளே குரோவ் ரோட்டரி சங்கம் திட்டத்தை செயல்படுத்தும் சங்கமாகவும் இருந்தது. இந்த சர்வேதச திட்டத்தின் கீழ் மின்ன சோட்டாவில் உள்ள 400-க்கும் மேற்பட்ட மருத்துவ கிளினிக்கு களுக்கு பி.பி.இ. உபகரணங்கள் வழங்கப்பட்டன.




மொகடாவில் உள்ள நீர் விநியோக திட்ட தளத்தில் சங்க உறுப்பினர்கள்.

இப்போது அவர் சில இந்திய ரோட்டேரியன்களை தனிப்பட்ட நண்பர்களாகக் கருதுகிறார். பால் ஹாரிஸ் ரோட்டரியை நிறுவிய போது இதுதான் அவரது மனதில் இருந்தது என்பதை நினைக்கும்போது ஆச்சரியமாக இருந்தது. நாங்கள் 3142 மாவட்ட சங்கங்களுடன் இணைந்து கூடுதலாக சர்வதேச மானியத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி யுள்ளோம் என்றார் அவர்.■

# ரோட்டரி தலைமைக்கு துணைவியர்களின் ஆதரவு

ஜெய்ஸ்ரீ

மாவட்ட ஆளுநர்களாகப் பணியாற்றும் ரோட்டேரியன்களின் மனைவி அல்லது துணைவிகளாக நீங்கள் அர்ப்பணிப்புடன் செய்யும் வேலைகளுக்கு நன்றி. நீங்கள் அனைவரும் மேற்கொள்ளும் அற்புதமான பயணம் இது. சில சமயங்களில் இது சோர்வை தரும் பயணமாகவும் இருக்கும். ஆனால், இறுதியில் நிறைவுதரும் பயணமாக இருக்கும் என்று ரோட்டரி மண்டலத்தில் உள்வரும் மாவட்ட ஆளுநர்களின் மனைவிமார்களிடம் RI தலைவர் கோர்டன் மெக்கினலி கூறினார்.

ஹீதர், கிட்டத்தட்ட 40 ஆண்டு காலமாக எனக்கு ரோட்டரியில் துணை நிற்கிறார். குறிப்பாக கடந்த 18 மாதங்களில் ரோட்டரி தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டது முதல் இப்போது RI தலைவராக இருக்கும் வரை எனக்கு துணை நிற்கிறார். அது அவளுக்கு ஒன்றும் எளிதான காரியம் அல்ல என்பது எனக்குத் தெரியும். அவள் எனக்கு அளித்து வரும் ஆதரவை அங்கீகரிக்கிறேன். அதற்கான நன்றியுடவனாக இருப்பேன். வருகிற பிப்ரவரி 9-ம் தேதி மெக்கினலி ரோட்டரியில் 40 ஆண்டுகளை பூர்த்தி செய்கிறார்.

மாவட்ட ஆளுநர்களுக்கு துணை நிற்கும் கூட்டாளியின் பங்கை ஆதரித்த மெக்கினலி, இது உடன் இருந்து ஊக்குவித்து, அவர்களுக்கு சரியான கருத்துக்களை வழங்குவதன் மூலம் அவர்கள் சிறந்த தலைவர்களாக செயல்பட முடியும் என்றார்.

DGE-ண் மற்றும் DGN-ண் வாழ்க்கை துணைவர்களுக்கான கூட்டாளிகள் அமர்வுக்கு வித்யா சுப்பிரமணியன் தலைமைவகித்தார். ரூபா ஹரியானி மற்றும் சுஜாதா மாதவ் சந்திரன் நடுவராக இருந்தனர். ஹீதர் மெக்கினலி, மாதவி பாண்டியா, வானதி ரவீந்திரன் மற்றும் வினிதா வெங்கடேஷ் ஆகியோர் அமர்வுக்கு தலைமை தாங்கினார்கள். அனைவரும் தங்கள் அனுபவங்களையும், வேடிக்கை விளையாட்டுகளையும் பகிர்ந்து கொண்டு பிணைப்பை வலுப்படுத்திக் கொண்டனர்.

மண்டல நிறுவனத்தின் அமைப்பாளர் RID ராஜு சுப்பிரமணியன், மனைவி வித்யாவுக்கு பாராட்டுத் தெரிவித்தார். நான் கேள்விப்பட்டவரை நீங்கள் சிறப்பாக செயல்பட்டுள்ளீர்கள். நீங்கள் எப்போதும் நன்றாக செய்வீர்கள் என்பது எனக்குத் தெரியும் என்றார். ஒருவர் ஒரு வேலையை விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்திய அவர், வித்யா, தனது சங்கத்தில் தலைவராக பணியாற்றியதை நினைவு கூர்ந்தார். தனது சங்கத்தின் சார்ஜென்டாக இருக்க வித்யா எனக்கு உத்தரவிட்டார். நானும் அதை கடமையாக ஏற்றுக்கொண்டேன். நாம் எதைச் செய்தாலும் அதை ஆர்வத்துடன் செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் வெற்றிகாண முடியும். நாம் மக்கள் மனதைத் தொடும் வகையில் செய்யும் சேவைகளுக்கு இணையாக வேறு எந்த அமைப்பையும் கூறமுடியாது. நாம் ஒரு சர்வதேச அமைப்பின் பகுதியாக இருக்கிறோம். எனவே நீங்கள் உங்கள் வாழ்க்கை துணைவருக்கு ஆதரவாக இருப்பதில் பெரும் பங்காற்ற முடியும் என்று அவர் கூறினார்.

கூட்டாளர்களின் நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக உயர்ந்து வருவதாக மண்டல நிறுவனத்தின் இணை அமைப்பாளர் RI இயக்குநர் அனிருதா ராய்சௌத்ரி ரோட்டேரியன்கள் சிறப்பாகச் செயல்பட முக்கிய காரணமாக இருப்பவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மனைவி மார்கள்தான். அவர்கள்தான் ஊக்க சக்தியாக இருக்கிறார்கள் என்றார்.

ஷிப்ரா ராய்சௌதுரி சில விலை மதிப்பற்ற ஆலோசனைகளை வாழ்க்கை துணைவர்களுக்கு வழங்கினார். உங்கள் மாவட்டத்தில் உள்ள சேவைத் திட்டங்களில் நீங்கள் முழு ஈடுபாடு காட்டினால், அது இதர ரோட்டேரியன்களுக்கு உந்துசக்தியாக இருக்கும். அவர்களும் ஆர்வத்துடன் சேவை செய்ய முன்வருவார்கள் என்றார். நீங்கள் எதையும் விரும்பிச் செய்தால் எதுவும் பெரிய வேலையாகத் தெரியாது. மற்றவர்கள் என்ன சொல் கிறார்கள் என்பதை காது கொடுத்து கேளுங்கள், என்று கூறினார்.■



*வித்யா சுப்ரமணியன் (வலது) மற்றும் RID ஜெரமி ஹர்ஸ்ட் மனைவி மிச்செல் (இடது), உள்வரும் ரோட்டரி தலைவர்களின் துணைவியருடன். நிகழ்ச்சி நடுவர் ரூபா ஹரியானி வலதுபுறம் உள்ளார்.*

# ராணுவ வீரர்களுக்கு தீபாவளி இனிப்புகள்

ராஜேந்திர சாபூ

தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக இந்திய ராணுவ வீரர்களுக்கு தீபாவளி இனிப்புகள் வழங்க நிதி திரட்டி வருகிறார்கள். குறிப்பாக 2020-ம் ஆண்டில், தொற்றுநோய்களின் சவால்களுக்கு மத்தியில் குருபூர்ணிமாவை முன்னிட்டு இந்திய ஜவான்களுக்கு 2,000 கிலோ இனிப்புகள் அனுப்பிவைக்கப்பட்டன.

சில நேரங்களில் தற்செயலான சந்திப்புகள் முக்கிய முயற்சிகளுக்கு வழிவகுக்கும். RID 3080-க்கு உட்பட்ட சண்டீகர் ரோட்டரி சங்கத்துக்கு இதுபோன்ற ஒரு சந்திப்புதான் இனிப்புகள் வழங்கும் இயக்கத்துக்கு (மித்தாய் மிஷன்) வழிவகுத்தது. 2016-ம் ஆண்டில் எனது மனைவி உஷா, தில்லி-சண்டீகர் சதாப்தி எக்ஸ்பிரஸில் தலைநகருக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போதுதான் அவர் இளம் ராணுவ அதிகாரியை சந்தித்தார். முகத்தில் புன்னகையுடன் இருந்த அந்த இளைஞர் எனது மனைவி உஷாவிடம் உரையாடினார். அப்போது ராணுவ வீரர்கள் எதிர்கொள்ளும் சவால்களை அவர் ஆர்வத்துடன் கேட்டறிந்தார்.

தினசரி ஏற்படும் பிரச்னைகள், ஒவ்வொரு நிலையிலும் எதிர்கொள்ளும் ஆபத்துகள் மற்றும் நாட்டை பாதுகாக்க ஜவான்கள் மற்றும் ஆகியவற்றை அந்த அதிகாரி பகிர்ந்துகொண்டார். ராணுவத்தினரின் வாழ்க்கையை அவரிடமிருந்துதான் உஷா தெரிந்து கொண்டார். சியாச்சின் பனிப்பாறைகளின் உச்சியில் பணிபுரியும் ஜவான் ஒருவருக்கு தனிப்பட்ட தேவைகளுக்கு இரண்டு பக்கெட் தண்ணீர்தான் கிடைக்கும். அதுவும் பனியை உருகவைத்து கிடைக்கும் தண்ணீர்தான். மேலும் அவருக்கு வழங்கப்படும் உணவு ஏற்கெனவே பேக் செய்யப்பட்டவை. நமது வீட்டில் சாப்பிடுவதுபோலான சுவையான உணவு கிடைக்காது.

இந்த சந்திப்புதான் உஷா மனதில் இனிப்பு இயக்கத்துக்கான விதையை விதைதத்து. தீபாவளி நெருங்கிவந்த நிலையில் ராணுவ வீரர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நாங்கள் இனிப்பு அனுப்ப முடிவு செய்தோம்.

முதல் கட்டமாக சண்டீகர் ரோட்டரி சங்கம், தீபாவளி சமயத்தில்



PRIP *ராஜேந்திர சாபூவும் அவர் மனைவி உஷாவும் பஞ்சாப் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உடன் (வலது).*

லே மற்றும் சியாச்சின் பகுதியில் சவாலான சூழ் நிலையில் பணியாற்றும் ராணுவ வீரர்களுக்காக 4,500 இனிப்பு பெட்டிகளை அனுப்பி வைத்தது. இந்த இனிப்புகள் ஒரு பிரபலமான கடையிலிருந்து வாங்கப்பட்டு ரோட்டரி ஹவுஸிலிருந்து ராணுவ லாரிகளில் ஏற்றப் பட்டன. முதல் கட்டமாக 2,000 இனிப்பு பெட்டிகள் விமானத்தில் அனுப்பிவைக்கப் பட்டன. அவற்றை நாடாளுமன்ற உறுப்பினர் கிரோன் கெர் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

ஒவ்வொரு பெட்டியும் நன்றி மற்றும் ஒற்றுமையின் அடையாளமாக ஆப் ஹைன் தோ ஹம் ஹைன் என்னும் இதயபூர்மான செய்தியைக் கொண்டிருந்தது. அவர்களிடமிருந்து வந்த பதிலும் இதயத்தை தூண்டும் வகையில் இருந்த்து. நாங்கள் உங்களுக்காக இருக்கிறோம் என்று அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

அதன்பிறகு இந்த கருணை முயற்சி தொடர்ந்ததுடன் சண்டீகர் ரோட்டரி சங்கத்துக்கு 2017-ம் ஆண்டு ஜூனில் சிறந்த திட்டத்துக் கான விருதையும் பெற்றுத்தந்தது. உஷாவின் கண்ணோட்டம் எளிமையானதாக இருந்தாலும் ஆழமானது. நாட்டின் பாதுகாப்புக்காக தங்கள் உயிரைக் கொடுப்பவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொண்டோம். தீபாவளி நெருங்கும் சமயத்தில் அதை நாங்கள் கொண்டாடுவதில் மட்டும் கவனம் செலுத்தாமல், குடும்பத்தை விட்டு, நாட்டை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ராணுவ வீரர்களுக்கு பாராட்டு தெரிவிப்பதிலும் கவனம் செலுத்தினோம்.

ராணுவ வீரர்களுக்கு இனிப்புகள் வழங்கும் திட்டத்துக்காக சண்டீகர் ரோட்டரி சங்கத்துக்கு 2017 ஜூன் மாதம் சிறந்த திட்டத்துக்கான விருது கிடைத்தது. ராணுவ வீரர்கள் நமக்காக உயிரையும் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு தீபாவளி நேரத்தில் இனிப்புகள் வழங்கி நன்றி தெரிவிக்கிறோம் என்றார் உஷா.




PDG *கமல் பேடியுடன் உஷா சாபூ. ஜக்மோகன் கர்க், கமல் சர்மா,*
PDG *ஜிதேந்திரா திங்ரா மற்றும் ரிது,* AP *சிங், நீரு மல்ஹோத்ரா,*
PDG*கள் பிரவீன் கோயல் மற்றும் யோகிந்தர் திவான், மற்றும் ஹர்ஜித் சிங்.*

இந்த உன்னதமான முயற்சி 2017-ல் தேசிய அளவில் கவன்த்தை ஈர்த்தது. பிரபல நடிகர் அமிதாப்பச்சன் தனது, கௌன் பனேகா குரோர்பதி நிகழ்ச்சியின் போது ராணுவ வீரர்களுடன் தீபாவளியைக் கொண்டாடியதற்காக ரோட்டேரியன்களுக்கு நன்றி தெரிவித்தார்.3080

2018-ம் ஆண்டில், 3080 மாவட்டத்துக்கு உட்பட்ட சண்டீகர், பஞ்சாப், ஹரியாணா, ஹிமாச்சல், உ.பி. மற்றும் உத்தரகண்ட் சங்கங்கள் சார்பில் 5,000 இனிப்பு பெட்டிகள் ராணுவத்தினருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. 3000 இனிப்பு பெட்டிகள் கொண்ட தொகுப்பை அப்போதைய ஆளுநர் வி.பி.சிங் பத்னோர் கொடி அசைத்து தொடங்கிவைத்தார். எங்கள் ரோட்டரி சங்கம் 1,700 இனிப்புப் பெட்டிகளை அனுப்பிவைத்து முக்கிய பங்காற்றியது.

தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக இந்திய ஜவான்களுக்கு தீபாவளி இனிப்புகளை அனுப்புவதற்கு ரோட்டேரியன்கள் நிதி திரட்டியுள்ளனர். 2020-ம் ஆண்டில், தொற்றுநோய்களின் சவால்களுக்கு இடையில் குருபூர்ணிமாவின்போது 2000 கிலோ இனிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

2021-ல் சண்டீகருக்கு அப்பால் உள்ள ரோட்டேரியன்களும் இதில் பங்கேற்று 6,000 இனிப்பு பெட்டி களை அனுப்பிவைத்தனர். பஞ்சாப் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், இனிப்பு பெட்டிகள் ஏற்றப்பட்ட லாரியை, பஞ்சாப் ஆளுநர் மாளிகையிலிருந்து கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

2022-ல், மாவட்ட ஆளுநர் வி.பி.கல்தாவின் தலைமையின் கீழ் இந்த நிகழ்வு தொடர்ந்தது. 2023 நவம்பரில் 6,000 இனிப்பு பெட்டிகள் பஞ்சாப் மற்றும் சண்டீகர் யூனியன் பிரதேசத்தின் ஆளுநர் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

கொச்சி, விசாகப்பட்டினம் மற்றும் போர்பந்தரில் கடற்படை தளங்களில் பணியாற்றும் வீரர்களுக்கும் இந்த திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்து நாங்கள் திட்டமிட்டு வருகிறோம். கடற்படையில் அவர்களின் தியாகங்களையும் அங்கீகரிக்க விரும்புகிறோம். ரோட்டேரியன்கள் மதவேறுபாடு இன்றி பல்வேறு பண்டிகைகளின்போது நமது ஆயுதப்படையினரை ஆதரிக்க ரோட்டேரியன்கள் ஒன்றுபடுகிறார்கள்.

இந்த நடவடிக்கைகள் எல்லையில்லா மதிப்பு மற்றும் அசைக்க முடியாத ஒருமைப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியது. நமது ராணுவத்தினருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நமது அன்பின் வெளிப்பாடாக செயல்படுகிறது.

எழுத்தாளர் முன்னாள் RI தலைவர்.
இக்கட்டுரை முதலில்
தி இந்தியன் எக்ஸ்ப்ரஸ் நாளிதழில்
பிரசூரிக்கப்பட்டது.

# தவிர்க்கமுடியாதது

டயானா ஸ்கோபெர்க்

*தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்டெபானி அர்ச்சிக் ரோட்டரியின் செயல்திட்டத்தை ஒரு துடிப்பான எதிர்காலத்திற்கு முக்கியமாகக் கருதுகிறார்.*

RC மெக்முரே, பென்சில்வேனியாவின் உறுப்பினரான அர்ச்சிக், 1991-ல் ரோட்டரியில் சேர்ந்தார் மற்றும் TRF-ன் பணிக்கு விரைவாக ஈர்க்கப்பட்டார். புதிய உறுப்பினராக, போலியோவை ஒழிப்பதற்கான ரோட்டரியின் பணிகளைப் பற்றி கேள்விப்பட்டு அதில் ஆர்வம் கொண்டார். அவர் தனது சங்கத்திற்கும் பின்னர் தனது மாவட்டத்திற்கும் அறக்கட்டளைத் தலைவரானார். பின்னர், மண்டல அளவில் RRFC-ஆக பணியாற்றினார், நிதி வளர்ச்சியில் கவனம் செலுத்தினார், மேலும் 2012–14-ல் அவர் ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலராக இருந்தார்.

ரோட்டரி பத்திரிகையின் மூத்த எழுத்தாளரான டயானா ஸ்கோபெர்க்குடன் அர்ச்சிக் அமர்ந்து தனது கடந்த காலம் மற்றும் ரோட்டரியின் எதிர்காலம் பற்றி பேசினார்.

**ரோட்டரியின் தலைவராகப் பணியாற்றும் இரண்டாவது பெண் நீங்கள். இனியும் நாம் அந்த வேறுபாட்டைச் சுட்டிக்காட்ட வேண்டுமா?**

என் கண்ணோட்டத்தில், வேண்டாம். இது அந்தக் காலத்திற்கான சிறந்த தலைவராக இருப்பது பற்றியது. இருப்பினும், மக்கள், குறிப்பாக பெண்கள், ரோட்டரி தலைவர் பதவியில் ஒரு பெண்ணைக் கண்டால் ஆஹா, இவரால் இதைச் செய்ய முடிந்தால் என்னாலும் இதைச் செய்யமுடியும் என நினைப்பார்கள் என்பதை நான் அறிவேன்.

பதவியில் இருக்கும் போது துணைவர் இல்லாத ஒரு சில ரோட்டரி தலைவர்களில் நானும் ஒருவராக இருப்பேன். நிறைய பேர் என்னிடம் வந்து, “நானும் துணைவர் இல்லாமல் இருக்கிறேன், நீங்கள் இந்த பதவியில் இருப்பது மிகவும் நல்லது” என்று கூறுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை, நீங்கள் இந்த பாத்திரத்திற்கு தகுதியானவரா என்பதை துணைவருடன் இருப்பது தீர்மானிக்காது. ஆனால் மீண்டும், இந்த நிலையில் தங்களைப் போல் தோற்றமளிக்கும் அல்லது தங்களைப் போல வாழ்க்கை நிலையைக் கொண்ட ஒருவரைப் பார்ப்பது மக்களுக்கு நிறைய அர்த்தத்தை தருகிறது.

**இது பன்முகத் தன்மையின் மற்றொரு கூறு போன்றது. கடந்த சில ஆண்டுகளாக ரோட்டரியின் பன்முகத் தன்மை பற்றிய பார்வை மாறிவிட்டது என்று நினைக்கிறீர்களா?**

பன்முகத்தன்மை எப்போதும் நமது முக்கிய மதிப்புகளில் ஒன்றாகும். ஆனால் நாம் பன்முகத் தன்மையை அளந்த விதம் நிச்சயமாக மாறிவிட்டது என்று நினைக்கிறேன். 40 ஆண்டுகளுக்கு முன்பு நாம் ஒரு முழு ஆண் அமைப்பாக இருந்ததை விட இன்று இது அதிகமாக மாறிவிட்டது. உதாரணமாக, தங்கள் சமூகத்தைப் பார்த்து, அவர்களின் ரோட்டரி சங்கம் அந்த சமூகத்தை பிரதிபலிக்கிறதா என்பதை கண்டறியுமாறு நாங்கள் மக்களைக் கேட்டுக்கொள்கிறோம். அது எல்லா வகையான விஷயங்களையும் குறிக்கலாம். அது வயது, பாலினம், மதம் அல்லது அரசியல் சார்பு என எதுவாகவும் இருக்கலாம். ஒரு வித்தியாசமான கண்ணோட்டம், மக்கள் வித்தியாசமாக சிந்திக்கும் கோணம் போன்ற விஷயங்களையும் இது உள்ளடக்கியிருக்கலாம். உங்கள் சங்கம் சமூகத்தை பிரதிபலித்தால், எதிர்காலம் உங்கள் கையில் இருக்கும். அப்படி இல்லையென்றால், அதை மாற்றும் வாய்ப்பு இப்போது உங்களுக்கு உள்ளது.

**1991ல் பெண்கள் சேர அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே நீங்கள் ரோட்டரி உறுப்பினரானீர்கள். நீங்கள் ஏன் சேர்ந்தீர்கள், ஏன் தங்கினீர்கள்?**

அப்போது நான் விவாகரத்து பெற்றிருந்தேன். திருமணமானவர் என்றால் நீங்கள் நிறைய விஷயங்களைச் செய்ய ஒன்றாக முனைவீர்கள். ஒன்றாக இரவு உணவிற்குச் செல்வீர்கள், ஒன்றாக விடுமுறைக்குச் செல்வீர்கள், மற்றும் பல விஷயங்களை செய்வீர்கள்.

RIPE *ஸ்டீபனி ஆர்ச்சிக்*



எனக்கு திடீரென்று அது இல்லாமல் போனது. ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸைப் போலவே, நான் புதிய நபர்களைச் சந்திப்பதற்கான வழிகளைத் தேடிக்கொண்டிருந்தேன். ஒரு பெண் என் அலுவலகத்திற்குள் வந்து தன்னுடன் ரோட்டரி சங்க கூட்டத்திற்கு செல்லலாமா என என்னிடம் கேட்டார். எனக்கு ரோட்டரி பற்றி எதுவும் தெரியாது, ஆனால் அவர் அதன் சேவை மற்றும் சர்வ தேசத்துவத்தை பற்றி பேசியபோது எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. அதனால் நான் சென்றேன், சேர்ந்தேன்.

முதலில் என்னைப் பொறுத்த வரை, அது கூட்டுறவு பற்றியது. நான் புதியவர்களை சந்திக்க விரும்பினேன்; எல்லா வகையான மக்களையும் சந்தித்தேன். உடனடியாக சேவை நடவடிக்கை களில் ஈடுபட்டேன். நான்காவது சந்திப்பிலேயே, நான் செய்திமடலை தயாரிக்கத் தொடங்கினேன், எனவே நான் அப்போதே சங்கத்தின் சேவையில் ஈடுபட தொடங்கி விட்டேன். அந்த சங்கம் ரோட்டரி யூத் எக்ஸ்சேஞ்ச், குரூப் ஸ்டடி எக்ஸ்சேஞ்ச் மற்றும் ரோட்டரி அறக்கட்டளை மானியங்களில் துடிப்பாக செயல்பட்டு கொண்டிருந்தது. இது எல்லாம் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பெரும்பாலான மக்களைப் போலவே, என்னை ரோட்டரியில் ஈடுபட வைத்தது சேவை தான்.

**நீங்கள் ஏன் ரோட்டரியின் தலைவராவதற்கு விரும்பினீர்கள் - இப்போது உங்களை ரோட்டரிக்கு சரியான தலைவராக்குவது எது?**

ரோட்டரியின் தலைவராவது உண்மையில் என் வாழ்க்கை திட்டதில் இருந்ததில்லை. நான் உறுப்பினராக இருந்த 30-க்கும் மேற்பட்ட ஆண்டுகளில் ரோட்டரிக்கு பல்வேறு வழிகளில் சேவை செய்துள்ளேன். எனது சிந்தனையை வடிவமைத்த ஒரு சிறப்பான வாய்ப்பு மூலோபாய திட்டமிடல் குழுவின் தலைவராக இருந்ததில் கிடைத்தது. நிறுவனத்தின் பலம் மற்றும் பலவீனங்களை ஆராயவும், ரோட்டரி மற்றும் ரோட்டரி அல்லாத உலகத்தை அணுகி, நம்மை ஒரு செழிப்பான எதிர்காலத்திற்கு நகர்த்துவது எது என்று மக்கள் நினைத்ததைப் பற்றிய தகவல்களைப் பெறவும் எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது.

ரோட்டரி பல தசாப்தங்களாக ஒரே சந்திப்பு மாதிரியைக் கொண்டிருந்தது - மாதம் நான்கு முறை சந்தித்தோம்; மணியை அடித்தோம்; அட்டென்டன்ஸ் எடுத்தோம். உலகம் வெகுவாக மாறிவிட்டது, ஆனால் நாம் மாறவில்லை. நாம் உண்மையில் அவற்றை எட்டிபிடிக்க வேண்டிய நேரம் இது! இப்போது எங்களிடம் இ-சங்கங்கள் மற்றும் பாஸ்போர்ட் சங்கங்கள் மற்றும் துணைச் சங்கங்கள் மற்றும் கார்ப்பரேட் சங்கங்கள் உள்ளன, மக்கள் ரோட்டரிக்கு வருவதற்கும் சேவை செய்வதற்கும் பல்வேறு வாய்ப்புகள் இப்போது உள்ளன.

நான் அதையெல்லாம் பார்க்க ஆரம்பித்தேன், நாம் ஒரு செழிப்பான எதிர்காலத்தை நோக்கிச் செல்லக் கூடிய நிலையில் இருக்கிறோம் என்பதை உணர்ந்தேன். அது தான் என் பெயரை முன்வைக்க என்னைத் தூண்டியது. ரோட்டரி மாவட்டங்கள் மற்றும் சங்கங்கள் செயல்திட்டத்தை பயன்படுத்தினால், நாம் முன்னேற முடியும் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன். சேவை மற்றும் கூட்டுறவு ஆகியவற்றில் இன்னும் பல ரோட்டரி உறுப்பினர்கள் ஈடுபடும் எதிர்காலமாக அது அமையும்.

**உங்கள் கடந்தகால தொழில் வாழ்க்கையின் எந்தத் திறமைகளை நீங்கள் தலைவராக சார்ந்திருப்பீர்கள்?**

எனக்கு மூன்று வெவ்வேறு துறைகளில் பின்னணி உள்ளது. நான் கல்லூரியில் படிக்கும் போதும், அதன் பிறகு சில வருடங்களும் ஒரு இசைக் குழுவில் பாடினேன். மேடையில் ஏறி மக்களை உற்சாகப்படுத்திய அனுபவம், அவர்களை நடனமாட செய்து வேடிக்கை பார்த்த அனுபவம் எனக்கு உண்டு. இது எளிமையானதாகத் தோன்றலாம், ஆனால் அது உண்மையில் எனக்குள் ஒரு திறன்களின் தொகுப்பை உருவாக்கியது. எனது இரண்டாவது தொழில் உயர்கல்வி. நான் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக அமைப்புகளில் பணியாற்றினேன். அந்நேரத்தின் பெரும்பகுதி, மாணவர்கள் தொழில் மற்றும் வேலைகளை கண்டறிய உதவுவதில் செலவிட்டேன். அது மனநிறைவாகவும் கண்களை திறப்பாதாகவும் இருந்தது. எனது மூன்றாவது தொழில், சுயதொழில் செய்பவராக எனது ஆலோச னை மற்றும் வணிக மேம்பாட்டு நிறுவனத்தில் இருந்தது. நான் கொஞ்சம் பயிற்சியும், அதிகமாக வணிக மேம்பாட்டையும் செய்தேன். எந்த திறமையும் நம்மை விட்டுச் சென்றுவிடும் என நான் ஒருபோதும் நினைத்ததில்லை. அவை அனைத்தும் ஒருவரின் அங்கமாக மாறும்.

**உங்கள் இசைக்குழுவின் பெயர் என்ன?**

தி ஹார்மோனியர்ஸ்.

**எந்த நிகழ்விலாவது நீங்கள் மேடைக்கு வரும்போது ஏதேனும் ஹார்மோனியர்ஸ் இசை ஒலிக்கப்படுமா?**

இல்லை, ஒலிக்ககூடாது. அவர்கள் ராபர்ட் பால்மரின் “சிம்ப்லி இர்ரெசி ஸ்டபிள்” ஐ இசைப்பார்கள் என்று நம்புகிறேன்.

**நீங்கள் முன்பு “சிம்ப்லி இர்ரெசி ஸ்டபிள்(தவிர்க்கமுடியாதது)” என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி யுள்ளீர்கள்: அதற்கு முக்கியத்துவம் உள்ளதா?**

சிம்ப்லி இர்ரெசிஸ்டபிள். அப்படிதான் ரோட்டரி இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்கங்கள் சேவை மற்றும் கூட்டுறவுக்கான இதயம் கொண்ட சமூக உறுப்பினர் களுக்கு தவிர்க்க முடியாததாக இருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை மதிப்பிடுவதற்கும், அவர்கள் எங்கு செல்ல வேண்டும் என்பதைக் கண்டுபிடிப்பதற்கும் அவர்கள் செயல்திட்டத்தைப் பயன்படுத்து வார்கள். இதன் விளைவாக மிகவும் கவர்ச்சிகரமான மற்றும் அதிகமான மக்களைத் தக்கவைக்கும் சங்கங்களாகும் என்று நம்புகிறேன்.

ஒவ்வொரு சங்கமும் வித்தியாசமானது. “இதைச்

செய்யுங்கள், நீங்கள் நன்றாக இருப்பீர்கள்'' என்று சொல்லி நாம் சங்கங்களுக்குக் கொடுக்ககூடிய சமையல் புத்தகம் எதுவும் இல்லை. ஒவ்வொரு சங்கமும் அதன் சொந்த கலாச்சாரத்தை உருவாக்குகிறது. நாட்டிற்கு நாடு, ரோட்டரி வித்தியாசமாக செயல்படுகிறது. ஒரே மாவட்டத்தில் மிகவும் வித்தியாசமான ரோட்டரி சங்கங்களையும் நீங்கள் காணலாம். ஒவ்வொரு சங்கமும் சிறிது நேரம் ஒதுக்கி, மதிப்பீடு செய்து, செயல் திட்டத்தின் நான்கு முன்னுரிமை களை நோக்க வேண்டும். பின்னர், நாம் கொஞ்சம் வித்தியாசமாக ஏதாவது செய்ய முடியுமா அல்லது ஏற்கனவே நம்மால் முடிந்ததை சிறப்பாக செய்கிறோமா? என்று அவர்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும். நீங்கள் ஏற்கனவே தவிர்க்கமுடியாதவராக இருந்தால், அப்படியே இருங்கள். ஆனால் தற்போதுள்ள சங்கங்களுக்கு மக்களை ஈர்க்க வேண்டும், மேலும் புதிய சங்கங்களை தொடங்க வேண்டும். ரோட்டரியை வளர்ப்பதற்கும் எதிர்காலத்தைப் பெறுவதற்கும் இதுவே வழி.

**உங்கள் கருப்பொருள் என்ன, அதை எப்படி தேர்வு செய்தீர்கள்?**

தி மேஜிக் ஆஃப் ரோட்டரி. மக்கள் தாங்கள் விரும்பும் எந்த வினைச் சொல்லையும் அதன் முன் சேர்க்கலாம். ரோட்டரியின் மேஜிக்கை நம்புங்கள். ரோட்டரியின் மேஜிக்கை பரப்புங்கள். ரோட்டரியின் மேஜிக்கை உருவாக்குங்கள். ரோட்டரியின் மேஜிக்கை கொண்டாடுங்கள். இது போன்ற அனைத்து வகையான சொற்களையும் நாம் பயன் படுத்தலாம்.

டொமினிகன் குடியரசிற்கு சென்றிருந்த போது எனக்குள் அது தோன்றியது. ஒரு பாட்டி, ஒரு தாய் மற்றும் மூன்று சிறுவர்கள் வசிக்கும் வீட்டில் தண்ணீர் வடிகட்டியை நிறுவ நாங்கள் உதவி செய்தோம். நாங்கள் வாட்டர் ஃபில்டரை நிறுவி, அதில் அழுக்குத் தண்ணீரை செலுத்த, அது சுத்தமாக வெளியே வருவதைக் குடும்பத்தினர் பார்த்தனர். பெண்கள் வடிப்பானைப் பயன்படுத்துவது எப்படி என்று கற்றுக்கொண்டார்கள், நாங்கள் புறப்படத் தயாரானோம், அப்போது ஒரு குழந்தை என் கையைப் பிடித்து, அந்த மேஜிக்கை மீண்டும் எனக்கு செய்துக்காட்டுங்கள் என்றான். அது என்னை யோசிக்க வைத்தது: ஆம், இது உண்மையில் மேஜிக் தான். அவர்களின் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க உதவும் மேஜிக்.

**ரோட்டரி தலைவராக உங்கள் முன்னுரிமைகள் என்னவாக இருக்கும், ஏன் அவற்றை தேர்ந்தெடுத்தீர்கள்?**

உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான செயல்திட்டத்தை முன்னெடுப்பது எனது பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. நான் சந்திக்கும் ரோட்டரியின் ஒவ்வொரு உறுப்பினரையும் போலவே இந்த அமைப்பையும் நான் நேசிக்கிறேன். ரோட்டரிக்கு எதிர்காலம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

நேர்மறையான அமைதி மூலம் பிளவுபட்ட உலகத்தை குணப்படுத்துவதே எனது இரண்டாவது முன்னுரிமை. இதில் ஈடுபட பல வழிகள் உள்ளன. நான்கு வழி சோதனையை ஒப்பிக்க மட்டுமல்லாமல் அதை அனைவரும் கடைபிடித்து வாழ்ந்தால், நமக்கு அமைதியான உலகம் கிடைக்கும். நான்கு வழி சோதனையைச் சுற்றி சங்கங்கள் அணிதிரண்டு, அதை ஆக்கப்பூர்வமான வழிகளில் பயன்படுத்தும் என்று நம்புகிறேன். மேலும் அமைதிக் கம்பம் திட்டம் உள்ளது: சங்கங்கள் தங்கள் உள்ளூர் பூங்கா, நகர சதுக்கம் அல்லது கல்லூரி வளாகத்தில் அமைதிக் கம்பங்களை அமைக்கலாம். ரோட்டரி ஒரு அமைதியைக் கட்டியெழுப்பும் அமைப்பு என்பதற்கு கம்பங்களில் இருக்கும் அமைதியின் செய்தி சமூகத் திற்கு ஒரு கண்கூடான அடையாளம். கூடுதலாக, ரோட்டரியிடம் ஒரு நேர்மறையான அமைதி சங்கம் உள்ளது, இது ஒரு ஆன்லைன் சங்கமாகும். எந்த ரோட்டரி அல்லது ரோட்டரி அல்லாத உறுப்பினர் சற்று நேரம் செலவிட்டு அதை பார்க்கலாம். நம் ரோட்டரி அமைதி மையங்கள் வாழ்க்கையை மாற்றுவதில் சக்திவாய்ந்த செயல்பாட்டாளர்கள். மத்திய கிழக்கில், இஸ்தான்புல்லில் ஒரு புதிய அமைதி மையத்தைத் திறக்கிறோம். பிப்ரவரி 2025-ல், நாங்கள் அந்த இடத்தில் ஒரு அமைதி மாநாட்டை நடத்துவோம்.

எனது இறுதி முன்னுரிமை தொடர்ச்சி. அதாவது இரண்டு விஷயங்கள்: தலைமைப் பதவிகளில் இருக்கும் நாம் அனைவரும், நமது முன்னோடிகளுடனும் நம்மைப் பின்தொடர்பவர்களுடனும் பணிபுரிய வேண்டும். சங்கங்கள் ஆதரித்த விஷயங்களையும், அவற்றில் வேரூன்றி இருக்கும் விஷயங்களையும் ஆராய்வதும் இதில் அடங்கும். ஒரு தலைவர் பதவியை விட்டு வெளியேறுவதால், நீங்கள் ஒரு வெற்றிகரமான திட்டத்தை கைவிட வேண்டும் என்று அர்த்தமல்ல. கிளெம் ரெனோஃப் அல்லது ஜேம்ஸ் போமர் ஆகியோர் தலைவர் பதவியிலிருந்து விலகிய பிறகு போலியோவை ஒழிக்கும் முயற்சிகளை ரோட்டரி கைவிட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்?

**உங்களுக்குப் பிடித்த மந்திரங்களில் ஒன்று ''ஆம் என்பதன் மறுபக்கத்தில் வாழ்க்கை மிகவும் சுவாரஸ்யமானது.'' அதைப் பற்றி பேச முடியுமா?**

பொதுவாக நான் மக்களிடம் சொல்வது: ''ஆம் என்று சொல்லுங்கள், பிறகு அதை எப்படி செயல்படுத்தலாம் என பார்ப்போம்.'' ''நீங்கள் செய்திமடல் ஆசிரியராக விரும்புகிறீர்களா?'' ''ஆம்.'' ''நீங்கள் ரோட்டரி தலைவராக விரும்புகிறீர்களா?'' ''ஆம்.'' ''நீங்கள் இதைச் செய்ய விரும்புகிறீர்களா?'' ''ஆம்.'' ''சிக்கல்'' என்ற வார்த்தை இந்த கேள்விகளை பின்பற்றினால் மட்டுமே நான் ''இல்லை''என்று பதில் கூறுவேன். வாழ்க்கை உங்களுக்கு பல வாய்ப்புகளை வழங்குகிறது. அவைகளுக்கு ஆம் என்று பதிலளியுங்கள். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைக் கண்டுபிடிக்க உங்களுக்கு நேரம் தானாகவே கிடைக்கும்.

படங்கள்: லூாஸி ஹெவிட்
©Rotary

*The* **ROTARY ACTION PLAN**




Is your club looking for new ways to connect with your community?
**The Action Plan can help.**

Learn about expanding your club's reach:
**rotary.org/actionplan**

# தி மேஜிக் ஆஃப் ரோட்டரி
# 2024–25-க்கான தீம்

எடெல்கா லேஹோஸ்கி

RI தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்டெஃபனி அர்ச்சிக், 2024–25 தலைமைத்துவ கருப்பொருள் “தி மேஜிக் ஆஃப் ரோட்டரி” என்று அறிவித்தார், மேலும் உயிர்களைக் காப்பாற்றுவதற்கான நம் அமைப்பின் ஆற்றலை அங்கீகரித்து, பெருக்குமாறு உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

“என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்-ஒரு மந்திரக்கோலை அசைத்தோ அல்லது சில வேடிக்கையான வார்த்தைகளைச் சொல்வதன் மூலமோ நாம் போலியோவை ஒழிக்கப் போவதில்லை அல்லது உலகில் அமைதியை ஏற்படுத்தப் போவதில்லை” என்று ஜனவரி 8 அன்று ரோட்டரி இன்டர்நேஷனல் கூட்டத்தில் உள்வரும் மாவட்ட ஆளுநர்களிடம் அர்ச்சிக் கூறினார். “இது உங்கள் கையில் இருக்கிறது. ஒவ்வொரு திட்டத்திலும், ஒவ்வொரு டாலர் நன்கொடையிலும் மற்றும் ஒவ்வொரு புதிய உறுப்பினருடனும் நீங்கள் மேஜிக்கை உருவாக்குகிறீர்கள்.

அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் உள்ள RC மெக்முரே இன் உறுப்பினரான அர்ச்சிக் டொமினிகன் குடியரசில் தண்ணீர் ஃபில்டர்களை நிறுவ உதவியபோது ரோட்டரியின் மேஜிக்கை கண்டதாக கூறினார். வடிகட்டியில் அழுக்கு நீர் நுழைந்து, மறுமுனையில் சுத்தமாக வெளியேறுவதை இரண்டு சிறுவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

“ஒரு சிறுவன் என்னிடம் “மீண்டும் எனக்கு மாயாஜாலத்தை காட்டுங்கள்” என்று கேட்டான். நீர் வடிகட்டியில் எந்த மாயாஜாலமும் அல்ல. அந்த வடிப்பான்களைக் கொண்டு செல்வதற்கும், அவற்றை நிறுவுவதற்கும், அவற்றைப் பராமரிக்க அப்பகுதியில் உள்ள சமூகத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் நாங்கள் கடுமையாக உழைத்தோம். ஆனால் அந்தச் சிறுவர்கள் சுத்தமான தண்ணீரை எளிதில் பெறுவது அவர்களின் வாழ்க்கையை மாற்றிவிடும் என்பதை அறிந்திருந்தனர். அதில் நான் ஒரு சிறிய பங்காற்றினேன் என்பதை அறிந்தது என் வாழ்க்கையை மாற்றியது.

### அமைதிக்கு முன்னுரிமை

ரோட்டரியின் செயல்திட்டத்தை வெற்றியடையச் செய்யவும், தொடர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் இடையே சமநிலையைக் கண்டறியவும், அமைதிக்காக உழைக்கவும் அர்ச்சிக் உறுப்பினர்களை வலியுறுத்தினார்.




*RIPE ஸ்டெபானி அர்ச்சிக் 2024–25 ரோட்டரி கருப்பொருளை புளோரிடாவின் ஆர்லாண்டோவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் அறிவிக்கிறார்.*

2025ஆம் ஆண்டில் “பிளவுபட்ட உலகை குணப்படுத்துதல்” என்ற கருப்பொருளுடன் தலைமைத்துவ அமைதி மாநாட்டை நடத்த அவர் திட்டமிட்டுள்ளார்.

ரோட்டரி அதன் அமைதி மையங்களின் கூட்டமைப்பு மூலம் அமைதியை மேம்படுத்துவதற்கான நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது என உர்ச்சிக் குறிப்பிட்டார். உலகெங்கிலும் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் அமைந்துள்ள இந்த மையங்கள் கிட்டத்தட்ட 1,800 அமைதி கூட்டாளர்களுக்கு பயிற்சி அளித்துள்ளன, அவர்கள் இப்போது 140க்கும் மேற்பட்ட நாடுகளில் பணிபுரிகின்றனர். துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள பாக்ஷேஹிர் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள புதிய மையம், 2025ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அதன் முதல் வகுப்பு கூட்டாளர்களை வரவேற்கும்.

“இந்த மாநாடு ரோட்டரியின் அமைதி முயற்சிகளில் கவனம் செலுத்துவதோடு ஒன்றாகக் கற்க வாய்ப்புகளையும் வழங்கும்” என்று கூறினார்.

அமைதியைக் கட்டியெழுப்பு வதை வலியுறுத்துவதோடு, போலியோவை ஒழிப்பதில் ரோட்டரியின் உறுதிப்பாட்டை அர்ச்சிக் வலியுறுத்தினார். வரவிருக்கும் ஆளுனர்களை தங்கள் மாவட்டங்களில் போலியோ பிளஸ் சொசைட்டிகளில் சேர்ந்து அல்லது தொடங்கி, நோயை முடிவுக்கு கொண்டு வர தங்களால் முடிந்த அனைத்தையும் செய்யவேண்டும் என்று வலியுறுத்தினார்.

ரோட்டரியின் செயல்திட்டத்தை உயிரூட்டும் தொடர்ச்சியையும் மாற்றத்தையும் சமநிலைப் படுத்துவதன் அவசியத்தையும் அர்ச்சிக் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

சங்க அனுபவத்தை உறுப்பினர்களுக்கு தவிர்க்க முடியாததாக மாற்றுவதற்குத் தேவையான அனைத்தையும் செய்யுமாறு ஆளுநர்களைக் கேட்டுக் கொண்டார்.

“அது உங்கள் மாவட்டத்தில் விஷயங்கள் எவ்வாறு செய்யப் படுகின்றன என்பதை மாற்றுவதாக இருக்கலாம். உங்கள் மாவட்டம் 50 ஆண்டுகளாக ஒரே மாதிரியாக செயல்பட்டிருந்தால் மறுமதிப்பீடு செய்ய வேண்டிய நேரம் இது. உங்கள் மாவட்டத்தில் உள்ள சங்கம் செயலில் இல்லை அல்லது உறுப்பினர்களை இழந்தால், சமூகத்துடன் சிறப்பாகப் பொருந்தக்கூடிய புதிய சங்கத்தை தொடங்குவதற்கான நேரம் இதுவாகும். ஒரு சங்கம் அல்லது மாவட்டம் சிறிது காலமாக மாறவில்லை என்பதால் யாரும் மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை என்று அர்த்தமல்ல” என்று அவர் கூறினார். நேர்மறையான மாற்றத்தை உருவாக்குவதற்கான ஒரு வழி, சங்கங்களுக்குள் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் சேர்ப்பு ஆகியவற்றின் கொள்கைகளைத் தழுவுவது என்றார்.

©Rotary.org

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

**சங்கம் அல்லது சங்க உறுப்பினர்கள் சார்பாக ஆன்லைனில் கொடுங்கள்**

சங்கத்தின் தலைவர், அறக்கட்டளை தலைவர், உறுப்பினர் தலைவர், நிர்வாகச் செயலாளர்/இயக்குநர், செயலாளர் மற்றும் பொருளாளர் உள்ளிட்ட அனைத்து சங்க அதிகாரிகளும் அவர்களுக்கு கிரெடிட்/டெபிட் கார்டுகள் அல்லது நெட் பேங்கிங் மூலம் தங்கள் சங்க உறுப்பினர்களின் சார்பாக தங்கள் மை ரோட்டரி கணக்கு மூலம் ஆன்லைன் பங்களிப்புச் செய்யலாம்.

பங்களிப்புத் தொகை தனிப்பட்ட உறுப்பினர் பெயரில் செலுத்தப் படும் போது 80-G ரசீது சங்கத்தின் தலைவரின் பெயரில் மட்டுமே உருவாக்கப்படும். தனிப்பட்ட உறுப்பினர்கள் பெயரில் அல்ல. மேலும் விவரங்களுக்கு பார்க்கவும்: *http://www.highroadsolution.com/file_uploader2/files/give_online_on_behalf_of_club_or_club_members_sao.pdf*

**முக்கிய நன்கொடையாளர் அங்கீகாரம்:** பரிசுப் பதவியைப் பொருட்படுத் தாமல், 10,000 இலக்கை அடைந்த அனைத்து தனிநபர்கள்/தம்பதிகள் TRF-ல் பெரிய நன்கொடையாளர்களாக அங்கீகரிக் கப்படுகிறார்கள். இந்த அங்கீகார நிலையை தனிப்பட்ட/மனைவியின் பங்களிப்புகள் மூலமே அடைய முடியும். மேலும் மற்றொரு தனிநபர், சங்கம், மாவட்டம் அல்லது எந்த பெயரிலும் அல்லது அங்கீகாரப் புள்ளிகள் மூலம் இதை பொருத்த முடியாது. நன்கொடையாளர்கள் ஒவ்வொரு புதிய அங்கீகார நிலையிலும் கிறிஸ்டல் பீஸ் அல்லது பின்களை பரிசை கொண்டாடும் வகையில் தேர்வு செய்யலாம். முக்கிய நன்கொடையாளர்களின் அங்கீகாரம் இந்த நிலைகளில் வழங்கப்படுகிறது.

1-ம் நிலை : 10,000 முதல் 24,999 வரை; 2-ம் நிலை: 25,000 முதல் 49,999 வரை; 3-ம் நிலை: 50,000 முதல் 99,999 வரை மற்றும் 4-ம் நிலை: 1,00,000 முதல் 249,999 வரை.

அங்கீகாரம் தானாகவே செயல் படுத்தப்படாது. நன்கொடையா ளர்கள் பூர்த்தி செய்யப்பட்ட பெருநன்கொடையாளர் படிவத் துடன் தகவல்களை பதிவு செய்து நன்கொடையாளர் சேவைக்குழு, RISAO-வுக்கு சமர்ப்பிக்க வேண்டும். முக்கிய நன்கொடையாளர் அங்கீகாரங்கள் எவன்ஸ்டனில் செயலாக்கப்பட்டு நன்கொடை யாளரை அடைய 5 அல்லது 6 வாரங் களாகலாம். மேலும் விவரங்களுக்கு மது மம்கைன் (*Madhu.Mamgain@rotary.org*) மற்றும் Manju Joshi (*Manju.Joshi@rotary.org*) ஆகியோரைத் தொடர்பு கொள்ளவும்.

படிவத்தை இதிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்: *http://www.highroadsolution.com/file_uploader2/files/new_major_donor_recognition_form.docx*

Source: RISAO

# முதியோர், மாற்றுத்திறனாளிகளிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்திய RC பாரூச்

ரஷீதா பகத்

டிசம்பர் மாதத்தில் ஒரு தனித்துவமான மற்றும் மகிழ்ச்சியான ஞாயிற்றுக்கிழமை காலை. பாரூச் ரோட்டரி சங்கம் (RID 3060) மற்றும் ஆர்.கே. மருத்துவமனை குஜராத் நகரில் உள்ள பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து 300 பேர்களுடன் ஒரு நடைப்பயணத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது. நாம் ஒன்றாக நடப்போம் (சலோ சாத் கதம் பதே) என்று இதற்கு பெயரிடப்பட்டது.

இந்த நிகழ்வின் நோக்கம் குறித்து கேட்டதற்கு, சங்கத்தின் தலைவர் ரிஸ்வானா தல்கின் ஜமீன்தார் கூறுகையில், இந்த ஆண்டு ரோட்டரித் தலைவர் கோர்டன் மெக்கினலி, முக்கியமாக கவனம் செலுத்துவது மனநலம் பற்றித்தான். உண்மையில் சொல்லப்போனால், பல்வேறு வகையான சவால்களை எதிர்கொள்ளும் பல்வேறு பகுதி மக்களுடன் நீண்டகாலம் பணியாற்றியவள் நான். எனவே நான் இந்த ஆண்டு சங்கத்தின் தலைவராக பதவியேற்றவுடன் மக்களை ஈடுபடுத்தும், நேர்மறை சிந்தனைகள், உள்ளடக்கம், பரிவு மற்றும் மனநலம் அல்லது மன ஆரோக்கியத்தை உருவாக்கும் இதுபோன்ற நிகழ்வை நடத்த முடிவு செய்தேன்.

இந்த நிகழ்வு என்பது முக்கியமாக மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்களுக்கானது.

இந்த நிகழ்வு வெற்றிகரமாக நடந்தேறியது. சுகாதாரம், உடற்தகுதி, கல்வி மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பலதுறைகளைச் சேர்ந்த அமைப்புகளுடன் சங்கம் கூட்டாண்மை வைத்து இதை செயல்படுத்தினோம்.

மொத்தத்தில் ரோட்டேரியன்கள், தன்னார்வ தொண்டர்கள், முதியோர் களுக்கு உதவ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என 300 பேர் இந்த 1 கி.மீ. நடைப்பயணத்தில் பங்கேற்றனர். சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில்




*வாக்கத்தானில் பங்கேற்பாளர்கள் ஒரு துணையுடன், கைகோர்த்து நடக்கிறார்கள்.*

சக்கர நாற்காலிகளில் வந்தவர்களும் பதக்கம் வென்றனர்.

இந்த நிகழ்வில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் உடல் தகுதியில் கவனம் செலுத்தி வரும் இளைஞர்கள், தங்களது தாத்தாக்களை இந்த நிகழ்வுக்கு அழைத்து வந்திருந்தனர். நாங்கள் தினமும் நடைபயிற்சி அல்லது ஜாக்கிங் செய்கிறோம். ஆனால், அவர்களுக்கு வெளியில் செல்லும் வாய்ப்போ, மற்றவர் களுடன் சேர்ந்து செல்லும் வாய்ப்போ கிடைப்பதில்லை. எனவே இது அவர்களுக்கு ஒருநல்ல வாய்ப்பாக அமைந்தது என்று கூறினர். சிலர் தங்களது தாத்தாக்களை சக்கர நாற்காலியில் அழைத்துவந்து, அதை தள்ளிக்கொண்டே வந்தனர் என்றார் ரிஸ்வானா.

பங்கேற்பாளர்களில் பலரின் உடல்நிலை மற்றும் வயதை கருத்தில் கொண்டு ரோட்டேரியன்கள் அவர்கள் செல்லும் வழியில் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்தனர். பாரூச்சில் இதுபோன்ற நடைப்பயணம் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும். முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி களிடம் பரிவு காட்ட வேண்டும். அவர்களையும் சமமாக மதிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பார்வையற்றோர், வீடற்றவர்கள், 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர், மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், செயற்கைக்கால் பொருத்திக் கொண்டவர்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் பதக்கம் வழங்கப்பட்டது. பங்கேற்பாளர்கள் தங்களது குடும்பத்தினர், ரோட்டேரியன்கள் அல்லது தன்னார்வலர்களுடன் உதவியுடன் நடைபயணத்தை முடித்த போதும் பதக்கங்களை பெற்றபோதும் அவர்களின் முகத்தில் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் காண முடிந்தது.

இதுபோன்ற நிகழ்வுகள் மீண்டும் எப்போது நடைபெறும். எங்களுக்கு எப்போது இதுபோன்ற வாய்ப்பு கிடைக்கும் என்று அவர்கள் கேட்பதுபோல் இருந்தது. மீண்டும்








உடல் ஊனமுற்றோர் பங்கேற்க உதவுவதற்காக சக்கர நாற்காலிகளைத் தள்ளும் தோழர்கள்.

இதுபோன்ற நிகழ்வு நடக்குமா? உடனடியாக எந்த திட்டமும் இல்லை. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் இதேபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும் என்றே நம்புகிறேன் என்றார் ரிஸ்வானா.

இந்த நடைபயணத்தை (வாக்காதான்) ஆர்.கே.மருத்துவ மனை அறங்காவலர்களும் ரோட்டேரியன்களுமான பங்கஜ் ஹரியானி மற்றும் சிராக் தம்பேடியா மற்றும் மெனோபாஸ் சொசைட்டி தலைவர் டாக்டர் பாவனா சேத் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். உடல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் அதன் பலன்கள் குறித்து பங்கற்பாளர்கள் அனைவருக்கும் விளக்கப்பட்டது. பின்னர் அவர்களுக்கு சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

### மாற்றுத்திறனாளிகளுக்கு RYLA

பாரூச் மற்றும் வதோதராவில் செயல்பட்டு வரும் வாய்பேசாதோர் மற்றும் காது கேளாதோர் பள்ளி மாணவர்களுக்காக RYLA நடத்தப் பட்டது. இதில் 75 பேர் பங்கேற்றனர். இவர்களுக்கு சைகைகள் மூலமும், மொழிபெயர்ப்பாளர்கள் மூலமாகவும் வகுப்புகள் நடத்தப்பட்டன. மாணவர்களை ஊக்குவிக்கும் பேச்சாளர்கள் உரையாற்றினர். வகுப்புகளுடன், சைகை மொழியில் விளையாட்டு மற்றும் வேடிக்கை நிகழ்வுகளும் இடம்பெற்றன.




RC பரூச் தலைவர் ரிஸ்வானா டாக்கின் ஜமீன்தார்.

இளைஞர்களை இதில் ஈடுபடுத்துவதில் உள்ள பிரச்னைகளை விவரித்த ரிஸ்வானா, அவர்கள் பல கவலைகளையும், சவால்களையும் எதிர்கொள்கின்றனர். கல்வியை முடித்தபின் தங்களுக்கு இருக்கும் வாய்ப்புகள் குறித்தும் கேள்வி எழுப்புகின்றனர் என்றார்.

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கும் பேச்சாளர்களுக்கும் இளைஞர்கள் சொல்லும் செய்தி இதுதான்: தயவு செய்து எங்களுக்கான வாய்ப்புகள், வசதிகள், உள்கட்டமைப்புகள், நல்ல சூழலை உருவாக்கித் தாருங்கள். அப்போதுதான் நாங்கள் கண்ணியமான வாழ்க்கை வாழமுடியும். மேலும் வேலை வாய்ப்புகளையும் உருவாக்கிக் கொடுங்கள். எங்களிடமும் திறமைகள் இருக்கின்றன. எங்களது திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பு கொடுங்கள்.■

# மகளிர் தொழில்முனைவோரின் கனவுகள் நனவாகின்றன

கிரண் ஜெஹரா

RC பெங்களூர் யெலஹங்கா, RID 3192, மற்றும் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான ரோட்டரி செயல் குழு (RAGCED) இணைந்து, பெங்களூரில் மகளிர் தொழில்முனைவுத் திருவிழாவை நடத்தின. இதன் நோக்கங்கள், புதுமைச் சிந்தனையின் முதன் மைத்துவத்தைக் காட்சிப்படுத்துவது, எளிய பின்னணிகளிலிருந்து வரும் பெண்களுக்கு ஊக்கம் அளித்துத் தன்னம்பிக்கையுடன் தங்களுடைய தொழில்களைத் தொடங்கச்செய்வது என்றார் RAGCED இந்தியப் பிரிவின் தலைவர் ராகேஷ் பாபுஜி.

இந்தச் செயல் குழு “கல்வி, நுண்கடன், வழிகாட்டுதல், வலைப்பின்னலாக்கலின் வழியாக உள்ளூர்த் தொழில்முனைவோரின் திறன்களை மேம்படுத்துவதற்கு” பாடுபடும், சமூகத்தலைவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஆற்றல் அளித்தல், பொருளாதார மேம்பாட்டை வளர்த்தல் மற்றும் மன நிறைவான வேலை மற்றும் வளங்குன்றா வாழ்வாதாரங்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றிலும் ஈடுபடும்.

RAGCED-ன் இந்தியப் பிரிவு உள்ளூர் ரோட்டரி சங்கங்களுடன் பணியாற்றியபோது, இந்தச் சமூகத்தில் திறமையுள்ள, உயரும் விருப்பமுள்ள, குறிப்பிடக்கூடிய எண்ணிக்கையிலான பெண்கள் சிறுதொழில் உற்பத்திப் பிரிவுகளை அமைத்து, முதன்மையாக நகர்ப்புறச் சந்தைக்கு மதிப்பைக் கூட்டும் பொருட்களைத் தயாரிக்க விரும்புவது தெரியவந்தது. துணிக்கான துணைப் பொருட்கள், சூரிய ஒளிக்கருவிகள், பரல் கிளிஞ்சல் காளான், டெர்ரகொட்டா நகைகள் போன்ற பகுதிகளில் ஏழு குறு நிறுவனங்களைத் தொடங்குவதற்கு உள் கட்டமைப்பு, கருவிகள், பயிற்சி, தொடக்க நிதி மற்றும் சந்தைப்படுத்தல் உதவி ஆகியவற்றில் ஆதரவு தேவைப்படுகிற, திறமையுள்ள மற்றும் ஓரளவு திறமையுள்ள, பெண்களை இந்த முன்னெடுப்பு அடையாளம் கண்டது.



*ரோட்டேரியன்கள் ஒரு ஸ்டாலில் தொழில்முனைவோருடன் உரையாடுகிறார்கள்.*

இந்தத் தொழில்முனைவுத் திருவிழா “பெண் தொழில்முனை வோரை ஆதரிக்கிற, அவர்களுக்கு ஆற்றல் அளிக்கிற எங்கள் உறுதிப் பாட்டைக் காட்சிப்படுத்துகிறது. வருங்காலத்தில் நாங்கள் பல சங்கங்களுடன் இணைந்து இன்னும் புதுமைச் சிந்தனையுள்ள திட்டங்களை நடத்தவுள்ளோம்” என்றார் பாபுஜி. இந்த நிகழ்ச்சியில் நடைபெற்ற ஊடாடும் பயிலகங்கள், தொழில் தொடங்குதல், அதை வளர்த்தல், நிதியைப் பெறுதல், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், எதார்த்தக் கருவிகள், வியூகங்கள் போன்றவற்றை விளக்கின. இதன்மூலம் 150க்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோர் புதிய திறமைகள் மற்றும் தன்னம்பிக்கையைப்” பெற்றார்கள் என்கிறார் இவர்.

தங்கள் துறைகளில் குறிப்பிடக் கூடிய தாக்கத்தை உண்டாக்கியுள்ள பெண் தொழில்முனைவோருடைய சாதனைகளையும் இந்த நிகழ்ச்சி கொண்டாடியது. “அவர்களுடைய கதைகள், தொழில்முனைவுப் பயணத்தை இப்போது தான் தொடங்குகிற எங்களைப் போன்ற பெண்களுக்கு ஊக்கமாக அமைந்தன. நான் இந்த நிகழ்ச்சியின் மூலம் ஊக்கத்தையும் தாக்கத்தையும் உணர்ந்தேன், என்னுடைய தொழிலை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்வதற்கான மதிப்புமிக்க சிந்தனை களைப் பெற்றுக்கொண்டேன். தொழில் முனைவுப் பயணத்தில் பெண்கள் ஒருவரை ஒருவர் ஆதரிப்பதன் ஆற்றலை இந்த நிகழ்ச்சி காண்பித்தது” என்றார் இதில் பங்கேற்ற ரூபா.

இன்னொரு பங்கேற்பாளரான சுரபி இந்த நிகழ்ச்சி “பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்தது” என்கிறார். “என் தொழில் யோசனையை உண்மை யாக்கத் தேவையான அறிவு, வளங்கள் மற்றும் இணைப்புகளை இது வழங்கியது. நான் என் தொழிலைத் தொடங்கத் தயாராகிவிட்டேன்.” என்றார். ■

# ரே கிளிங்கின்ஸ்மித், உயர்ந்த திறமை கொண்ட ரோட்டரி தலைவர்

**KR ரவீந்திரன்**

ரே கிளிங்கின்ஸ்மித்தை நான் முதன்முதலில் பார்த்தபோது, அவர் 1998 புது டெல்லி கவுன்சில் ஆன் லெஜிஸ்லேஷன் தலைவராக இருந்தார், அங்கு நான் ஒரு பிரதிநிதியாக சென்றிருந்தேன். சபை விவாதங்களை நடத்தும்போது கையை மேடையின் மீது வைத்து அலட்சியமாக சாய்ந்துகொண்டு, தனக்கே உரித்தான ஒரு பாணியை அவர் கொண்டிருந்தார். இது என்னைப் போன்ற ஒரு புதியவருக்கு மிகவும் வசீகரமாக இருந்தது. எதிர்காலத்தில் ஒரு நாள், நான் தொலைதூரத்திலிருந்து போற்றும் இவரும் நானும் ஒன்றாகச் சேவை செய்வோம் என்பதை நான் அப்போது உணரவில்லை… ரே அறங்காவலர்களின் தலை வராகவும் நான் RI தலைவராகவும். அவர் 2010–11-ல் RI தலைவராக பணியாற்றினார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவரது குழுவில் அவரது பொருளாளராக இருந்த போது, ரோட்டரி கிளப் ஆஃப் கிர்க்ஸ்வில்லின் நீண்டகாலமாக உறுப்பினரான ரே, நான் சந்தித்ததில் மிகவும் புத்திசாலித்தனமான மனிதரில் ஒருவர் என்பதை உணர்ந்தேன். ரே தலைமை தாங்கி வாரிய மேசையில் அமர்ந்திருப்பது உண்மையில் தலைமைத்துவம் பற்றிய ஒரு கவர்ச்சிகரமான ஆய்வாகவும், கற்றல் அனுபவமாகவும் இருந்தது. தனது துணைத்தலைவர் மற்றும் பொருளாளரைத் தனது சொந்த வாரிய உறுப்பினர்களால் வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுத்த முதல் மற்றும் ஒரே தலைவர் அவர் தான்!

அவரை சந்திக்கும் போது உங்களுக்கு முதலில் தோன்றும் விஷயம், அவர் ஒருபோதும் அவசரப்படுவதில்லை என்பது தான். வாரியத் தாள்கள் பெரும்பாலும் 500 பக்கங்களைத் தாண்டியதாக இருக்கும். சரியான தயாரிப்பு மற்றும் திட்டமிடல் அதற்கு முன் இருந்திருந்தால் மற்றும் ரே ஒவ்வொரு பக்கத்தையும் அறிந்திருந்தால், மிக நீண்ட திட்டத்தை கூட சுலபமாக கையாள முடியும் என்பதை நான் அப்போது கற்றுக்கொண்டேன்.

ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் கருத்து தெரிவிப்பதற்கான வாய்ப்பும் பங்களிப்பதற்கான சந்தர்ப்பமும் இருக்கும் ஒரு கூட்டத்தை எவ்வாறு நடத்தலாம், நிகழ்வின் ஈர்ப்பை நல்ல நகைச்சுவை மூலம் எப்படி தணிக்கலாம் மற்றும் முறையாகவும் தீவிரமாகவும் தோற்றமளிக்க ஒருவர் த்ரீ பீஸ் சூட் அணியத் தேவையில்லை என்பதை நான் கற்றுக்கொண்டேன். அவர் தலைமை தாங்குவது, எங்களுக்குக் கல்வி கற்பிப்பது, அந்த தலைமைத்து வத்தையும் வழிகாட்டுதலையும் வழங்கியபோது அவர் கடைப்பிடித்த பொறுமை மற்றும் சகிப்புத் தன்மையைப் பார்த்தது எனக்கு ஒரு கற்றல் அனுபவமாக இருந்தது.

தேவை மற்றும் ஆளுமைக்கு முன் கொள்கைக்கும் அமைப்புக்கும் அவர் முக்கியத்துவம் கொடுத்தார். ஒரு இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொண்டு, உங்கள் முகத்துக்கு நேராக உண்மையை சொல்லும் வலிமை அவருக்கு இருந்தது.

ஆனால், தலைவரான அவருடன் கருத்து வேறுபாடு கொள்வது குற்றமல்ல என்பதையும், அது இணக்கமான முறையில் முன்வைக்கப்பட்டால், அத்தகைய கருத்து வேறுபாடுகளை மேசையிலே விட்டுவிட்டு, சாயங்கால கூட்டுறவு நேரத்துக்குள் மறந்துவிடலாம் என்பதையும் நான் கற்றுக் கொண்டேன்.



PRIP K R *ரவீந்திரன் உடன்* PRIP *ரே கிளிங்கின்ஸ்மித்.*

அவருடன் இந்தியாவிலும், அப்போதைய இலங்கையில் போர் பகுதிகளிலும் (அப்படிச் செய்த முதல் சர்வதேசத் தலைவர்) பயணித்த போது, உலகின் ரோட்டேரியர்களை சந்திப்பதில் அவர் கொண்டிருந்த உண்மையான ஆர்வத்தையும், விமானத்தில் ஏறுவதற்கும் காத்திருப் பதற்கும் முன்பு, ஒவ்வொரு சாத்திய மான தருணத்திலும், அவர் எவ்வளவு அயராது உழைத்தார் என்பதையும் நான் கண்டிருக்கிறேன். அவர் தனது அறைக்கு சென்று, தனது கணினியில் இரவு தாமதமாக வேலை செய்துவிட்டு, காலை 4.30 மணிக்கு எழுந்து மீண்டும் தனது கணினிக்கு திரும்புவார். இதன் விளைவாக, ரோட்டரி உலகில் நடக்கும் அனைத்தையும் அவர் எப்போதும் அறிந்திருந்தார். எவன்ஸ்டனில் உள்ள RI தலைமையகத்திலும், இது வேறுபடவில்லை. அவர் எப்பொழுதும் எங்கள் அனைவருக்கும் முன்பாகவே அங்கு இருப்பார், கிட்டத் தட்ட எப்போதும் கட்டிடத்தை விட்டு வெளியேறும் கடைசி நபராகவும் இருப்பார்.

நான் பொறாமைப்படும் இன்னொரு திறமையும் அவரிடம் இருந்தது. அவர் விமானத்தில் ஏறியதும், கணினியை மூடிவைத்து விட்டு, விமானம் புறப்படுவதற்கு முன்பே தூங்கி விடுவார். உணவு சேவையின் முழுவதும் தூங்கி விட்டு, தரையிறங்குவதற்கு சில நிமிடங் களுக்கு முன் புத்துணர்ச்சியுடன் எழுந்து RI தலைவராக அவர் வாழ்க்கையில் இன்னொரு நாளை எதிர்கொள்ள தயாராக இருப்பார்.

அவரது புகைப்பட நினை வாற்றல், அன்பான புத்திசாலித்தனம் மற்றும் ரோட்டரி பற்றிய அவரது கலைக்களஞ்சிய அறிவு ஆகியவை என்னை மிகவும் கவர்ந்தன. உதாரணமாக, 1922-ல் ரோட்டரியின் தலைவர் யார், 1941-ல் துணைத் தலைவர் யார் என்று நீங்கள் அவரைக் கேட்டால் உடனடியாக பதில் கிடைக்கும். ரே அவரைப் பற்றி ஏதும் பேசியதில்லை, அவருடைய தனித்துவமான வழிகளில் பணிவானவர்; உறுதியானவர் ஆனாலும் அவரது வாதங்களில் மென்மையாக பேசுபவர்; அவரது நம்பிக்கைகளுக்காக துணிந்து நிற்பவர் மற்றும் குறைந்தபட்சம் குழுவில், மற்றவர்களின் கருத்து களுக்கு சகிப்புத்தன்மை காட்டியவர். அடிப்படையில் அவர் ஒரு ஜென்டில்மேன். அவர் என்னைப் போன்ற புதியவர்களிடம் அன்பாகவும் ஊக்கமளிப்பவராகவும் இருந்தார். அவர் சிக்கனமானவரும் கூட.

அவர் மறைந்த நேரத்தில், ரே 62 ஆண்டுகள் ரோட்டேரியராக இருந்துள்ளார். RI வாரியத்தில் பணியாற்றிய முதல் தூதுவ உதவித் தொகை முன்னாள் மாணவர் ஆவார். நம் அனைவரையும் போலவே ரேவும் தனது தவறுகளைக் கொண்டிருந்தார் (யாரிடம் தான் இல்லை?) ஆனால் இறுதியாக, அவர் ஒரு அசாதாரண தனிமனிதர் மற்றும் உயர்ந்த திறமை கொண்ட ரோட்டரி தலைவர் என்று நான் சொல்லியே ஆக வேண்டும். ரே ஒரு பூரண வாழ்க்கையை வாழ்ந்தார். இப்போது அவர் நித்திய அமைதியைக் பெறட்டும்.

எழுத்தாளர் ஒரு முன்னாள் RI தலைவர்.

## அர்ஜுனா விருது பெறும் வில்லாளர்கள் அதிதி, தியோடலெ

ரோட்டரி செய்திக்குழு

ஹாங்ஜௌ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்த வில்லாளர்கள் அதிதி கோபிசந்த் சுவாமி (17), ஓஜஸ் தியோடலெ (21) ஆகியோருக்கு ஒன்றிய அரசு அர்ஜுனா விருதுகளை வழங்கிப் பெருமைப்படுத்தியது. அவர்கள் பெங்களூரில் ரோட்டரி பகுதி சந்திப்பில் பெருமைப்படுத்தப்பட்ட போது அர்ஜூனா விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டார்கள். (மேலும் தகவல்களுக்கு, ரோட்டரி நியூஸ், ஜனவரி 2024ல் இப்போது பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளிலும் இந்தியாவின் கை ஓங்கியுள்ளது என்ற கட்டுரையைப் படியுங்கள்).

அதிதி உலகின் மிக இளம் மூத்த வில்லாளர் வெற்றியாளர் ஆவார். தியோடலெ உலக வில்வித்தைப் போட்டிகளில் தங்கம் வென்ற முதல் இந்திய ஆண் (பெர்லின், 2023) ஆவார். இவர் உலகில் ஒன்பதாவது தரநிலையைப் பெற்றுள்ளார். இவர்கள் இருவரும் மகாராஷ்டிரத்தில் உள்ள சதாரா-வில் பிரவீண் சாவந்த் நடத்தும் திருஷ்டி வில்வித்தைப் பயிற்சி நிறுவனத்தில் தயாரானவர்கள்.■




*அர்ஜுனா விருதுகளுடன் ஓஜஸ் தியோடேல் மற்றும் அதிதி சுவாமி.*

# சிர்சியில் ரோட்டரி மருத்துவமனை

ரஷீதா பகத்

1985-ல் சிர்சியின் ரோட்டரி சங்கம், RID 3170, தனது வெள்ளி விழாவைக் கொண்டாட ஒரு சிறிய தொண்டு மருத்துவமனையை அமைத்தது. இன்று அது 65 படுக்கைகள் கொண்ட மல்டி-ஸ்பெஷியால்டி மருத்துவ மனையாக மலர்ந்துள்ளது மற்றும் கர்நாடகாவின் மூன்று வருவாய் மாவட்டங்களான உத்தர கன்னடா, ஹாவேரி மற்றும் ஷிமோகா மக்க ளுக்கு மருத்துவச் சேவைகளை வழங்குகிறது.

சிர்சி நகரத்தில் ஒரு முக்கிய இடத்தில் அமைந்துள்ள இந்த மருத்துவமனை RC சிர்சியால் அமைக்கப்பட்ட ரோட்டரி அறக்கட்டளையான விஸ்வ சேவா சமிதியால் நடத்தப்படுகிறது. TRF இன் பொருத்தமான மானியம் மற்றும் சைட் சேவர்ஸ் (இங்கிலாந்து), ராயல் காமன்வெல்த் சொசைட்டி ஃபார் பிளைன்ட், இங்கிலாந்து (RCSB), கிறிஸ்டோஃபெல் ப்ளைண்டன் மிஷன் (CBM), ஜெர்மனி மற்றும் பல தொண்டு நிறுவனங்களும் இம்மருத்துவமனையை நிறுவ நன்கொடைகளை வழங்கியுள்ளன. தகுதி வாய்ந்த மற்றும் திறமையான மருத்துவர்களைக் கொண்ட இந்த பல மாடி வளாகம் பல்வேறு சிறப்பு பிரிவுகளில் சிகிச்சை அளிக்கிறது மற்றும் ஐந்து ஹைடெக் ஆபரேஷன் தியேட்டர்கள் மற்றும் பிற நவீன மருத்துவ உபகரணங்களைக் கொண்டுள்ளது.

மருத்துவமனை என்பது ஒரு கட்டிடத்தை விட அதிகமானது - இது விதிவிலக்கான சுகாதார சேவைகள் வழங்கப்படும் இடம் என்பதை சமீபத்தில் சங்கத்தலைவர் ஸ்ரீதர் ஹெக்டே மற்றும் மருத்துவமனையை நிர்வகிக்கும் முன்னாள் தலைவர் நிதின் காசர்கோட் ஆகியோர் டாடா ஸ்டீலின் மூத்த நிர்வாகியிடமிருந்து பெற்ற நன்றி கடிதத்திலிருந்து காணலாம். “உங்கள் மருத்துவ மனையில் என் அம்மா பெற்ற அசாதாரண சேவைகளுக்காக எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நர்சிங் ஊழியர்களின் சேவையின் தரம் மற்றும் டாக்டர் ராஜேஷ் ஷெட்டின் அர்ப்பணிப்பு முற்றிலும் பாராட்டுக்குரியது. துரதிருஷ்டவசமாக ஜனவரி 2, 2024 அன்று என் அம்மா காலமானார், அவர் தனது கடைசி சில நாட்களை மருத்துவமனையிலும் பிறகு வீட்டிலும் அமைதியாகக் கழித்தார். அதற்கு நான் எப்போதும் உங்களுக்கு கடமைப்பட்டுள்ளேன். உங்கள் ரோட்டரி சங்கம் செய்யும் உன்னதப் பணியின் மீதான எனது மரியாதை பன்மடங்கு அதிகரித்துள்ளது என்று T V ஸ்ரீனிவாஸ் ஷெனாய் எழுதுகிறார்.

“இந்த மருத்துவமனையின் நிறுவனர் மற்றும் கர்த்தா RID 3170-ன் PDG சுப்ராவ் காசர்கோட் ஆவார், மேலும் மற்றொரு முக்கிய நபர் PDG சதானந்த் நிலேகனி, அவரின் பெயரில் தான் ICU மற்றும் ட்ராமா கேர் சென்டர் இயங்கிக் கொண்டுள்ளது. அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சி கள் தான் இந்த சுகாதார வளாகத்தை ஒரு கௌரவ நிலைக்கு கொண்டு வந்துள்ளது, இது எங்களுக்கு சமீபத்தில் கிடைத்த நன்றிக் கடித்ததிலிருந்து தெரிகிறது” என ஹெக்டே கூறுகிறார்,

மும்பையில் உள்ள மூத்த வழக்கறிஞரான மாருதி பட்கல் அவர்களிடமிருந்தும் மருத்துவ மனைக்கு நிறைய ஆதரவு கிடைத்தது, மேலும் எங்கள் ஐசியுவை தற்போதைய அதி நவீன நிலைக்கு மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றியவர்” என கழகத்தின் முன்னாள் தலைவரும் மருத்துவ மனையின் செயலாளருமான நிதின் காசர்கோட் கூறுகிறார். இவர் மருத்துவமனையைத் தொடங்கிய PDG காசர்கோடின் மகன்.

ஹெக்டே மேலும் கூறுகையில், “இந்த மருத்துவமனையை அமைப்பதற்கு முன்பு, நூற்றுக் கணக்கான கிராமங்களால் சூழப் பட்ட இந்தப் பகுதியில் உள்ள மக்கள், தொலைதூர நகர மருத்துவமனைகளை நம்பியிருக்க வேண்டியிருந்தது. இப்பகுதியில் நல்ல தனியார் மருத்துவமனைகள் எதுவும் செயல்படவில்லை. மேலும், அருகில் உள்ள ஒரு நகரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையை யாராவது அணுக முடிந்தாலும், அடிப்படை நோய்களுக்கான மருத்துவச் செலவுகள் கூட மிக அதிகமாக இருப்பதால், அந்தச் சேவையைப் பெற முடியாத நிலை ஏற்பட்டது” என்றார்.



*RC சிர்சியால் நிறுவப்பட்டுள்ள ரோட்டரி தொண்டு மருத்துவமனை.*



*கண்புரை அறுவை சிகிச்சைக்குப் பிறகு மருத்துவமனையில் பரிசோதனைக்காக காத்திருக்கும் பெண்கள்.*

அந்த நேரத்தில்தான் சங்கத் தலைவர்கள் சிர்சியில் ஒரு மருத்துவ மனையை அமைக்க முடிவு செய்தனர். இந்த அறக்கட்டளை முதன்மையாக கண் நோய்களைத் தடுப்பதிலும் சிகிச்சையளிப்பதிலும் கவனம் செலுத்துகிறது என்கிறார் நிதின் காசர்கோட். இத்திட்டத்தின் கீழ், அறுவை சிகிச்சை தேவைப்படு பவர்கள் எங்கள் சொந்தப் பேருந்தில் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு, சிறந்த அறுவை சிகிச்சையும், தங்குமிடம் மற்றும் உணவும் வழங்கப்பட்டு, சிகிச்சைக்குப் பிறகு, அவர்களது வீடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர், இவை அனைத்தும் இலவசமாக செய்யப்படுகிறது.

கடந்த 35 ஆண்டுகளில், இந்தத் திட்டம் "70,000-க்கும் மேற்பட்ட ஏழைகளுக்கு பார்வையை மீண்டும் கொடுப்பதில் வெற்றி பெற்றுள்ளது. எங்கள் கூட்டாளர்கள், CSR மானியங்கள் மற்றும் உள்ளூர் நன்கொடையாளர்களால் நிதியளிக்கப்படும் எங்களின் இந்த அவுட்ரீச் திட்டம், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4,000 பேருக்கு பார்வையை மீட்டுத் தருகிறது," என்கிறார் காசர்கோட்.

மருத்துவம்/அறுவை சிகிச்சை சேவைகளுக்கு பணம் செலுத்தக்கூடியவர்கள் பணம் செலுத்துகிறார்கள், மற்றவர்களுக்கு, நன்கொடைகள் மூலமாகவோ அல்லது அரசாங்க நலன்களைப் பெறுவதன் மூலமாகவோ பணம் திரட்டப்படுகிறது. மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எங்கள் மருத்துவமனையில் நன்கு கவனிக்கப்படுவதையும், அவர்களுக்கு சிறப்பு தள்ளுபடிகள் வழங்கப்படுவதையும் நாங்கள் உறுதிசெய்கிறோம். எங்கள் சிறுநீரகவியல் பிரிவில் நான்கு ஹீமோடையாலிசிஸ் அலகுகள் உள்ளன, அவை நோயாளிகளுக்கு 24 மணி நேரமும் சேவைகளை வழங்குகின்றன. மிகவும் ஏழ்மையான நோயாளிகளுக்கு மருத்துவமனையே செலவுகளை ஏற்று இலவசமாக டயாலிசிஸ் செய்யப்படுகிறது என்று அவர் மேலும் கூறினார்.

"இந்த மருத்துவமனை வெளிநாடுகளில் உள்ள புகழ்பெற்ற சர்வதேச நிறுவனங்களிடமிருந்து பல விருதுகளை வென்றுள்ளது, மேலும் இது உலகின் சிறந்த 50 ரோட்டரி சேவை திட்டங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டு 1995-ல் RI தலைவரால் விருது வழங்கப்பட்டது" என ஹெக்டே கூறுகிறார்.

இந்த மருத்துவமனையில் ENT, எலும்பியல், மகளிர் மருத்துவம், சிறுநீரகவியல், அவசரநிலை மற்றும் விபத்து போன்ற சிறப்பு சிகிச்சை வசதிகளையும் வழங்குகிறது.

இந்தச் சேவைகள் அனைத் திற்கும் தேவைப்படும் நிதியைப் பொறுத்தவரை, பணம் செலுத்தும் நோயாளிகள் மிகவும் ஏழை நோயாளி களுக்கு சிகிச்சையின் ஒரு பகுதியை மானியமாக வழங்குவதாகவும், "நாங்கள் உள்ளூர் பரோபகாரர்கள், நிறுவனங்கள், கார்ப்பரேட்கள், சமூக சேவை நிறுவனங்கள் ஆகியவற்றை நன்கொடைகளுக்குச் சார்ந்துள்ளோம்" என்று காசர்கோடு கூறுகிறார்.

எதிர்காலத் திட்டங்கள் பொறுத்த வரை, தற்போதிருக்கும் தங்கள் ENT சேவைகளை வலுப்படுத்த விரும்புவதாகக் கூறுகிறார், அதே நேரத்தில் அவர்களின் அனைத்து நோயாளி களுக்கும், அவர்கள் செலுத்தும் திறனைப் பொருட்படுத்தாமல், சிறந்த தரமான மருத்துவசேவை வழங்கப்படுவதை உறுதிசெய்ய விரும்புவதாகவும் கூறுகிறார்.

இந்த ரோட்டரி மருத்துவ மனையில் டாக்டர்கள் மற்றும் செவிலியர்கள் குழுவினால் அவரது தாயார் பெற்ற "சிறந்த சேவை" பற்றி ரோட்டரி நியூஸிடம் பேசிய ஷெனாய், தனது தாயாருக்கு 88 வயதான தாகவும், கல்லீரல் தொடர்பான சில சிக்கல்களால் அவதிப்பட்ட தாகவும் கூறினார். பராமரிப்பாளராக மருத்துவமனையில் இரவுகளைக் கழித்த அவர் கூறுகையில், மருத்துவமனை ஊழியர்களால் அவர் எப்படி நடத்தப்பட்டார் என்பதை நான் கண்டேன், பெரும்பாலான நேரங்களில் மக்கள் பெயருக்கு மட்டுமே சேவை செய்வதைப் பார்போம்... ஆனால் இந்த ரோட்டரி மருத்துவமனையில் இதயத்திலிருந்து சேவை செய்வதைப் பார்த்தேன் என்றார்.■

# சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய RC தில்லி சௌத்

ஜெய்ஸ்ரீ

RC சௌத் தில்லி, (RID 3011) 55 ஆண்டுகள் பழமைவாய்ந்தது. 79 உறுப்பினர்களைக் கொண்ட இந்த சங்கம் கடந்த 7 ஆண்டுகளில் 2,000 பெண்களுக்கு தையல் பயிற்சி அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளது. நை திஷா எஜுகேஷனல் அண்ட் கல்சுரல் சொசைட்டி என்றும் தனியார் தொண்டு நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன், அவர்களது வளாகத்திலேயே தையல் பயிற்சி மையத்தை நிறுவியுள்ளது. ரோட்டரி உதவியால் இங்கு 20 தையல் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. தற்போது ஏழைக் குடும்பங்களை சேர்ந்த 40 பெண்கள் இங்கு தையல் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

பெண்களுக்கு சிறந்த வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க நாங்கள் அவ்வப்போது தையல் இயந்திரங்களின் தரத்தை மேம்படுத்தி வருகிறோம் என்றார் சங்கத்தின் தலைவர் பிரமோத் அகர்வால். தையல் இயந்திரங்கள் மூலம் எம்பிராய்டரி செய்யவும், இதர தொழில் நுட்பங்களை கற்றுக்கொள்ளவும், தங்களின் திறனை மேம்படுத்திக் கொள்ளவும் சமீபத்தில் இரண்டு நவீன தையல் இயந்திரங்கள் அந்த மையத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

தில்லி, தர்யாகஞ்சில் உள்ள டாக்டர் ஷராஃப் கண் மருத்துவ மனைக்கு 20 ஆண்டுகளுக்கும் மேலாக கண்சிகிச்சைக்குத் தேவையான கருவிகளையும் உபகரணங்களையும் வழங்கி ஆதரித்து வருகிறது சௌத் தில்லி ரோட்டரி சங்கம். கடந்த 2023 நவம்பர் மாதம் மருத்துவமனை வளாகத்தில் ஊர்மிளா கெம்கா கண்புரை நோய் சிகிச்சை மையம் திறக்கப்பட்டது. இத்திட்டத்துக்கு CSR உதவியுடன், திட்டத்தை செயல்படுத்துவதிலும் சங்கம் முக்கிய பங்காற்றியுள்ளது. இதன் மூலம் கூடுதலாக 6,000 பேருக்கு கண் அறுவைச்சிகிச்சைகளை செய்யும் திறனை மருத்துவமனை பெற்றுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்த சங்கம் ரோஷன்புரா பகுதியில் உள்ள எம்.சி.டி. ஆரம்பப் பள்ளியையும் சீரமைத்துள்ளது. பள்ளி கட்டடத்துக்கு புதிய வர்ணம் பூசப்பட்டது. விளையாட்டு மைதான சீரமைக்கப்பட்டு, கருவிகள் பழுது பார்க்கப்பட்டு தேவையான புதிய விளையாட்டு உபகரணங்களும் வாங்கி சேர்க்கப்பட்டுள்ளன. புதிய உபகரணங்களுடன் கூடிய விளையாட்டு மைதானம் பள்ளி மாணவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றார் அவர். இந்த பள்ளியில் 1,400 மாணவர்கள் படிக்கின்றனர். பள்ளி வளாகத்தை பசுமையாக்கும் நோக்கில் சங்கத்தின் சார்பில் 80 மரக்கன்றுகளும் நடப்பட்டன. இதில் மாணவர்கள் ஆர்வத்துடன்



கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி இளம் பெண்களுக்கு வழங்கப்பட்டது.



*RC டெல்லி சௌத் தலைவர் பிரமோத் அகர்வால் (இடது) மற்றும் தொழிற்கல்வி சேவை இயக்குனர் ராஜீவ் சியோனி நை திஷா தொழிற்கல்வி பயிற்சி மையத்தில். சவிதா (இடமிருந்து இரண்டாவது), நிறுவனர், நை திஷா மற்றும் பயிற்றுவிப்பாளர் மீனாட்சி (வலமிருந்து மூன்றாவது) ஆகியோரும் காணப்படுகின்றனர்.*

பங்கேற்றனர். பள்ளியில் உள்ள டிஜிட்டல் வகுப்பறையில் ஸ்மார்ட் டி.வி.யும் நிறுவப்பட்டுள்ளது.

புதுப்பிக்கப்பட்ட பள்ளி தொடக்க விழாவை ஒட்டி சங்கம் கண் மருத்துவ முகாமுக்கும் ஏற்பாடு செய்திருந்தது. மாணவர்களுக்கு கண்பரிசோதனை நடத்தப்பட்டு தேவையானவர்களுக்கு கண் கண்ணாடிகளும் வழங்கப் பட்டன. பள்ளிக்கு மேலும சில கூடுதல் வசதி செய்து தரவும் நிதி திரட்டி வருகிறோம். அடுத்து பள்ளியில் கை கழுவும் நிலையங்கள் அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றார் சங்கத்தின் தலைவர் பிரமோத் அகர்வால்.

மற்றொரு முன்முயற்சியாக நை திஷாவின் பராமரிப்பில் 60 இளம் பெண்களுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பு மருந்து முகாம் நடத்தப்பட்டது. இவர்களுக்கு இரண்டுமுறை செலுத்தும் தடுப்பூசி போடப்பட்டது என்றார் அவர். இதே போல பிர்லா வித்யா நிகேதனில் நடந்த முகாமில் 230 பெண்களுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன. இந்த மாணவிகளுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசி வரும் ஜூன் மாதம் போடப்பட்டும். சங்கத்தின்



**(இடமிருந்து)** *சங்க செயலாளர் சர்வ்பிரீத் சிங், முன்னாள் தலைவர் லலித் சாவ்னி, தலைவர் அகர்வால், ரஜினி துவா மற்றும் சோம் துவா ரோஷன்புரா முனிசிபல் கார்ப்பரேஷன் பள்ளியில்.*

ஆதரவில் இங்கு இன்டராக்ட் சங்கமும் ஏற்படுத்தப்பட்டது. தடுப்பூசி போடுவதற்கு முன்னதாக மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் பள்ளி ஊழியர்களுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் என்றால் என்ன? தடுப்பூசிகள் போடப்படுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து எடுத்துக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தீபாவளியன்று சங்கத்தின் உறுப்பினர்கள் தில்லி AIIMS மருத்துவமனை நோயாளிகள் மற்றும் பராமரிப்பாளர்கள் 1600 பேருக்கு இனிப்புகள் அடங்கிய பெட்டிகளை வழங்கினர்.■

# நாசிக்கில் ஒரு துடிப்பான டிஸ்கானை வழங்கிய RID 3030

கிரண் ஜெஹரா

நேர்த்தியான வெள்ளை மற்றும் தங்கப்புடவைகளில் அலங்கரிக்கப்பட்ட, RID 3030-ன் மகளிர் சங்கத்தலைவர்கள் DG ஆஷா வேணுகோபால், RIPR புபுடு டி சொய்சா மற்றும் அவர்களின் ரோட்டரிய துணைவர்கள் வேணுகோபால் மற்றும் க்ரிஷ் பெர்னாண்டோ ஆகியோரை மாவட்ட மாநாட்டின் தொடக்க அணிவகுப்பு ஆஷாரிகாவிற்கு வரவேற்றனர். கதகளி மற்றும் பரதநாட்டிய நடனக் கலைஞர்கள் தலைமையில், பாரம்பரிய பஞ்சாரி மேளத்தின் (கேரள கோயில் இசை) மேளதாளங்களுடன் அணிவகுப்பு நடைபெற்றது.

அணிவகுப்பின் பிரமாண்டத்திற்கு அப்பால், 1,900 பதிவுதாரர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு ஒரு சுமூகமான செக்-இன் செயல்முறையை உறுதி செய்வதற்காக பெண் ரோட்டேரியர்கள் குழு பதிவு கவுன்டர்களை விடாமுயற்சியுடன் நிர்வகித்து வந்தது.

DGஆஷா தனது வரவேற்பு உரையில், ரோட்டேரியராக இருந்து DG மற்றும் AKS உறுப்பினராக நான் ஆவதற்கு, இங்கு இருக்கும் எண்ணற்ற ரோட்டேரியர்களால் ஊக்குவிக்கப்பட்டேன் என்றார். மாவட்டத்திட்டங்களைப் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கிய அவர், கிராமப்புறப் பெண் மாணவர்களின் கல்வித் தேடலை மேம்படுத்துவதற்காக ரூ.2.22 கோடி மதிப்பிலான 5,555 மிதிவண்டிகளை விநியோகித்த RC நாசிக் கிரேப்சிட்டியின் உடான் என்ற திட்டத்தை எடுத்துரைத்தார். மகாராஷ்டிராவில் உள்ள தொலைதூர பழங்குடி கிராமங்களில் இருக்கும் ஆயிரக்கணக்கான பெண்கள் கற்றுக் கொள்ள ஆர்வமாக உள்ளனர், ஆனால் பள்ளிக்கு செல்ல ஒரு சவாலான பயணத்தை எதிர்கொள்கிறார்கள். மிதிவண்டி என்பது அவர்களுக்கு ஒரு போக்குவரத்து முறை மட்டுமல்ல, இது அவர்களுக்கு அதிகாரமளிக்கும் சின்னம். இந்த சைக்கிள்கள் மூலம், தடைகளை இந்த சிறுமிகளுக்கான வாய்ப்புகளாக மாற்றியுள்ளோம்'' என்றார். மற்ற குறிப்பிடத்தக்க திட்டங்களில் பூந்த் (நீர் பாது காப்பு), ஸ்பந்தன் (தலசீமியா நோயாளிகளுக்கு இரத்த தானம்), அகன்கன்ஷா (ஆன்லைன் கல்வி கருவி) மற்றும் அங்கூர் (மகாராஷ்டிரா

*RIPR RID 3220 PDG புபுடு டி சொய்சா மற்றும் அவரது கணவர் கிரிஷ் பெர்னாண்டோ (வலது) DG ஆஷாவை (வலமிருந்து இரண்டாவது) மற்றும் அவரது கணவர் வேணுகோபால் (வலமிருந்து நான்காவது) அவர்களின் AKS பங்களிப்புக்காக பாராட்டுகிறார்கள். மேலும் (இடமிருந்து) PDGs ஷபீர் ஷகீர், கிஷோர் கேடியா, K சுந்தர் ராஜன் மற்றும் ராஜீவ் சர்மா அவர்களும் உள்ளனர் .*






*மாவட்ட மாநாட்டில் நடிகர் அனுபம் கேருடன் PDG ஷபீர் ஷகிர்.*

அரசாங்கத்துடன் இணைந்து மூங்கில் தோட்டமிடுதல்) ஆகியவை அடங்கும்.

இலங்கையின் RID 3220-ன் PDG RIPR புபுடு டி சொய்சா, AKS



உறுப்பினர் ஆன DG ஆஷாவை வாழ்த்தி, "ஆஷாவைப் பொறுத்தவரை, இது AKS உறுப்பினராக இருப்பது பற்றியது மட்டுமல்ல. நிச்சயமாக, இது ஒரு மதிப்புமிக்க பங்களிப்பாகும், ஆனால் இது அவரின் வழங்குதலின் அன்பையும் அக்கறையையும் காட்டுக்கிறது. அவரிடம் உபரி இருப்பதால் அல்ல, அவரின் தாராள மனப்பான்மையால் தான் அறக்கட்டளைக்கு அவர் கொடுத்துள்ளார். நம் அறக்கட்டளை மூலம், மாற்றத்தை ஏற்படுத்த உங்களுக்கு சக்தி உள்ளது என்று முழு மனதுடன் நம்பியதற்கு நன்றி" என்று கூறினார்.

போலியோ ஒழிப்பு முயற்சியின் முக்கியத்துவத்தையும் புபுடு வலியுறுத்தினார், போலியோ மாதிரியின் மூலம் ஆப்பிரிக்காவில் ரோட்டரி நிறுவிய அவசரகால அறுவை சிகிச்சை மையங்கள், நோய் கண்காணிப்பு அதிகாரிகள் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச சுகாதார அதிகாரிகளுக்கு இடையே உள்ள தடையற்ற தகவல் தொடர்பு ஆகியவற்றால் தற்போது எபோலாவை நிறுத்த முடியும்! இது ரோட்டரியின் வலிமைக்கு சான்றாக உள்ளது" என்றார்.

"எண்ட் போலியோ நிதிக்கு $27,448 என்ற குறிப்பிடத்தக்க பங்களிப்பிற்காக" மாவட்டத்தைப் பாராட்டிய அவர், "போலியோ ஒழிப்பு அதன் மறுதொற்றை தடுப்பது மட்டுமல்லாமல், உலகளாவிய சுகாதார பட்ஜெட்டுக்கு 50 பில்லியன் வருவாயை மீட்டெடுக்கிறது. மலேரியா, கர்ப்பப்பை புற்றுநோய், காசநோய் மற்றும் எச்.ஐ.வி-எய்ட்ஸ் போன்ற பிற முக்கியமான சுகாதார சவால்களை எதிர்கொள்வதில் இந்த மீட்டெடுக்கப்பட்ட நிதி முக்கிய பங்கு வகிக்கும்.

இந்தியாவின் சின்னமாக திகழும் பெண்களின் வாழ்க்கையை சித்தரிக்கும் RYE மாணவர்களின் நடன நிகழ்ச்சியுடன் நிகழ்வு நிறைவு பெற்றது. அதை தொடர்ந்து மாவட்ட விருதுகள், GML வெளியீடு மற்றும் ஊடாடும் குழு விவாதங்கள் நடைபெற்றன. மேஜர் ஜெனரல் சஞ்சய்குமார் வித்யார்த்தி, தாழ்த்தப்பட்ட மற்றும் கிராமப்புற குழந்தைகளுக்கான கல்வி நிறுவனம் நர்மதாவின் நிறுவனர் தாக்கூர் பாரதி மற்றும் நடிகர் அனுபம் கெர் ஆகியோர் ரோட்டேரியர்கள மத்தியில் உரையாற்றினர்.

புகைப்படங்கள்: கிரண் ஜெஹரா

# 10 நாள் காஷ்மீர் முகாமில் 1,200க்கும் அதிகமான அறுவை சிகிச்சைகள்

**V முத்துகுமரன்**

புல்வாமா, ஷோபியான், குல்காம் மற்றும் அனந்த்நாக் (மருத்துவக் கல்லூரி) மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் 1,223 அறுவை சிகிச்சைகள் மற்றும் சிறு நடைமுறைகளை 10 நாட்களில் (செப். 3–13) செய்த 35 மருத்துவர்கள் (அனைவரும் ரோட்டேரியர்கள்) மற்றும் இரண்டு தன்னார்வலர்கள் கொண்ட குழுவிற்கு அது ஒரு சவாலான, ஆனால் மிகவும் திருப்தி கரமான பணியாக இருந்தது. “இந்தத் திட்டத்திற்கு தளவாடங்களில் விரிவான திட்டமிடல் மற்றும் யூனியன் பிரதேச அரசாங்கம், சுகாதார அதிகாரிகள் மற்றும் உள்ளூர் மருத்துவமனைகளின் ஆதரவு தேவைப்பட்டது” என செப்டம்பர் 2023-ல் நடைபெற்ற காஷ்மீர் அறுவைசிகிச்சை திட்டம்-III-ன் திட்டத்தலைவர் டாக்டர் கிரிஷ் குணே விளக்கினார்.



*நான்கு வயது சாரா இப்ராஹிம் பட் அவளது தந்தையுடன்.*

2022-ம் ஆண்டு மே மாதம் பாரமுல்லா மாவட்டத்தில் சோபோரில் இரண்டாவது அறுவை சிகிச்சை முகாமைத் தொடக்கிவைத்த லெப்டினன்ட் கவர்னர் மனோஜ் சின்ஹா, தீவிரவாதத்தால் தவித்து வரும் தெற்கு காஷ்மீரில் இதேபோன்ற ஒரு அறுவை சிகிச்சை முகாமை நடத்துமாறு ரோட்டேரியர்களை வலியுறுத்திய போது, இந்த பதற்றமான மாநிலத்தில் மூன்றாவது மருத்துவ முகாமுக்கான விதை விதைக்கப்பட்டது. PDGகளான குணே மற்றும் ராஜீவ் பிரதான் இருவரும் மருத்துவத் திட்டங்களை நடத்து வதற்காக ஜம்முவின் RID 3070 சேர்ந்த ரோட்டேரியர், RID 3131 மற்றும் 3132 ஆகியவற்றின் உடனான தலைமை ஒருங்கிணைப்பாளரான அதீப் மேத்தா மூலம் மாநில சுகாதார சேவைகள் இயக்குனரான டாக்டர் முகமது ராதருடன் தங்கள் தொடர்புப் பணிகளைத் தொடங்கினர். முகமது ராதர், ரோட்டரி அறுவை சிகிச்சை திட்டத்திற்கான செயல்பாட்டு அதிகாரியாக டாக்டர் அப்துல் ரவூப்பை நியமித்தார் மற்றும் வழக்கமான கூட்டங்களில் சுகாதார செயலாளர் பூபிந்தர் குமார் அவருக்கு ஆதரவளித்தார்.

பல ஜூம் சந்திப்புகள் மற்றும் திறமையான அடித்தள வேலைகளுக்குப் பிறகு, “நாங்கள் பொது அறுவை சிகிச்சை நிபுணர்கள், மகப்பேறு மருத்துவர்கள், எலும்பியல் மருத்துவர்கள், ENT நிபுணர்கள், பிளாஸ்டிக் மற்றும் குழந்தை அறுவை சிகிச்சை நிபுணர்கள், கண் மருத்துவர்கள் மற்றும் மயக்கவியல் நிபுணர்கள் கொண்ட குழுவை ஒருங்கிணைத்தோம் - இதில் பெரும்பான்மையானவர்கள் RID 3131 மற்றும் 3132 இன் ரோட்டேரிய மருத்துவர்கள் என திட்ட ஆலோசகர் டாக்டர் பிரதான் நினைவுகூர்ந்தார். PDG உபிந்தர் காய் மற்றும் டாக்டர் ஜகத் சுரிந்தர் (RID 3170); புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் உமாங் தேசாய் (RID 3060); மற்றும் டாக்டர் தர்ஷனா ஷா, டாக்டர் மனிஷா ஜக்தாப் மற்றும் டாக்டர் உஜ்வாலா தேவாரே (RID 3030) ஆகியோரும் திட்டக் குழுவில் இணைந்தனர்.

மருத்துவ வசதிகளைச் சரிபார்ப் பதற்கும், அரசு மருத்துவமனைகளின் தலைமை மருத்துவ அதிகாரிகள் மற்றும் கண்காணிப்பாளர்களுடன் தொடர்புகொள்வதற்கும் ஒரு ரோட்டரி குழு அனுப்பப்பட்டது; செப்டம்பரில் அறுவை சிகிச்சை திட்டத்தை முடிக்க குணே மற்றும்

ரோட்டேரியரான ராகுல் பேஸ் காஷ்மீருக்கு விரைந்து சென்றனர்.

அனைத்து அறுவை சிகிச்சை உபகரணங்கள், வசதிகள் மற்றும் மருத்துவ பொருட்கள் ஜம்மு காஷ்மீர் நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டன. "உள்ளூர் சுகாதார அதிகாரிகள், ஆஷா பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மூலம் நோயாளிகளை முகாம்களில் சேர்ப்பதற்காக வீடு வீடாகச் சென்று ஆய்வு செய்தனர். போதிய எண்ணிக்கையிலான OT-கள், உபகரணங்கள் மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் இல்லாதது போன்ற ஆரம்ப தடையை கூட சுகாதார அதிகாரிகள் விரைவாக வாங்குதல், உபகரணங்கள் மற்றும் ஊழியர்களை இடமாற்றம் செய்தல் மற்றும் கூடுதல் மேஜைகளை அறுவை சிகிச்சை அரங்கத்தில் வைத்ததன் மூலம் சரிபடுத்தினர் என்று பிரதான் கூறினார்.

நான்கு வருவாய் மாவட்டங்களில் 10 நாட்களில் 35 ரோட்டேரிய மருத்துவர்கள் குழு செய்த 1,223 அறுவை சிகிச்சைகளைப் பார்த்த பிறகு, இந்தியாவின் பிற பகுதிகளில் சேவை செய்ய எங்கள் அறுவை சிகிச்சை நிபுணர்களும் உங்கள் ரோட்டரி குழுக்களுடன் வர வேண்டும் என்று நினைக்கிறேன்.

நோயுற்ற பெருங்குடலால் பாதிக்கப்பட்ட, அனந்த் நாக்கைச் சேர்ந்த குலாம் ரசூல் (42), நான் இரண்டு மாதங்களாக கடுமையான வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன், என் வாழ்க்கையை காப்பாற்றிய அல்லாஹ்வின் இந்த தூதர்களுக்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன் என்றார். பிறவி மாறுகண்களுக்காக அறுவை சிகிச்சை செய்யப்பட்ட, புல்வாமாவைச் சேர்ந்த நான்கு வயது சிறுமி சாரா இப்ராஹிம் பட்டின் பெற்றோர், இப்போது எங்கள் மகளுக்கு இயல்பான பார்வை கிடைத்துள்ளது. அவளுக்கு சிறந்த கல்வியை கொடுத்து மருத்துவராக்குவோம், ரோட்டரியின் சேவைகளுக்கு நன்றி என்றனர்.

2012, 2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளில் காஷ்மீரில் இந்தத் திட்டங்கள் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம், PDGக்கள் டாக்டர் கிரிஷ் குணே மற்றும் டாக்டர் ராஜீவ் பிரதான் தலைமையிலான ரோட்டரி மருத்துவ குழுவை, பூஞ்ச் மற்றும் ரஜோரி மாவட்டங்களில் இதேபோன்ற மருத்துவ முகாம்களை இந்த ஆண்டு ஏப்ரல்-மே மாதங்களில் நடத்த வலியுறுத் தியுள்ளது. "அறுவைசி கிச்சை முகாமின் காலம், நடத்தப்பட வேண்டிய அறுவை சிகிச்சை வகைகள் மற்றும் உள்ளூர் சுகாதார அதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்காக நான் இரண்டு ரோட்டேரிய மருத்துவர்களுடன் விரைவில் இந்த எல்லைப் பகுதிகளுக்கு வருவேன்" என்று டாக்டர் குணே கூறினார்.■



*திட்டத் தலைவர் PDG Dr கிரிஷ் குணே (வலமிருந்து இரண்டாவது), மற்றும் அவரது குழு, ஆபரேஷன் தியேட்டரில்.*



டாக்டர் மீனல் சிட்குப்கர், மகப்பேறு மருத்துவர்

# RID 5610 பிரதிநிதிகள் குழு கோரக்பூர் வருகை

**ரோட்டரி செய்திக்குழு**

அமெரிக்காவில் உள்ள RID 5610-ஐ சேர்ந்த 6 ரோட்டேரியன் அடங்கிய பிரதிநிதிகள் குழு 2023 அக்டோபர் மாதம் இரண்டு நாள் பயணமாக கோரக்பூர் வந்தனர்.

கோரக்பூர் ரோட்டரி சங்கம் (RID 3120) ஏற்பாடு செய்திருந்த பலமாவட்டக் கூட்டத்தில், இவர்கள் பங்கேற்றனர்.

அடுத்த நாள், கோரக்பூர் ரோட்டரி சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட மஹாவீர் பிரசாத் கண்டோயுடன் குரு ஸ்ரீ கோரக்நாத் சிகித்சாலயா உள்ளிட்ட பல்வேறு சமூகநலத் திட்டங்களை பார்வையிட்டனர். அங்கு ரோட்டரி சங்கத்தின் சர்வதேச மானிய உதவியின் மூலம் ரூ.54.75 லட்சத்தில் நவீன கதிரியக்க கருவிகள் மற்றும் ரூ.40 லட்சம் மதிப்பிலான எக்ஸ்ரே கருவிகளை நன்கொடையாக வழங்கியிருந்தது.



RID 5610 ரோட்டேரியன்கள் RC கோரக்பூரால் மாற்றப்பட்ட மகிழ்ச்சி பள்ளிக்கு வருகை தருகின்றனர்.

கோரக்பூர் புறநகர் பகுதியான சோன்பர்ஸாவில் உள்ள ஆரம்பப் பள்ளி மகிழ்ச்சிப் பள்ளியாக மாற்றியமைக்கப்பட்டது. அங்கு சென்று பார்வையிட்ட ரோட்டேரியன்கள் TRF-ன் நேர்மறையான தாக்கத்தை நேரில் கண்டறிந்தனர். மேஜைகள், பெஞ்சுகள், வெள்ளைநிற பலகைகள் என வகுப்புகள் சீரமைக்கப்பட்டு ஸ்மார்ட் வகுப்பறைகளாக காட்சியளித்தன. A V உதவியினால் வகுப்புகள் நடத்தப்படுவதையும் அவர்கள் பார்த்தனர். இப்படி ஊரகப் பகுதிகளில் உள்ள 16 ஆரம்பப் பள்ளிகளை கோரக்பூர் சங்கம் மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றியமைத்திருந்தது.

தேசிய கல்விச் சங்கத்துடன் இணைந்து கோரக்பூர் ரோட்டரி சங்கம் நடத்தும் திட்டமான சிங்கர் ரோட்டரி திறன் வளர்ப்பு மையத்தையும் ரோட்டரி பிரதிநிதிகள் குழுவினர் பார்வையிட்டனர். RID 5610 மூலமான சர்வதேச நிதி ஆதரவு மற்றும் TRF உதவியுடன் 2015-ம் ஆண்டு இந்த மையம் ஏற்படுத்தப் பட்டது. இங்கு தையல் மற்றும் எம்பிராய்டரி பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது 55 பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள்.■

சங்கம் நடத்தும் சிங்கர் ரோட்டரி திறன் மையத்தில் பெண்கள் பயிற்சி பெறுகின்றனர்.



# குஷி புதிய பிணைப்பை வளர்க்கிறது

V முத்துகுமரன்

RC கோல்ஹாபூர் சன்ரைஸ் (RID 3170) இரண்டு நாள் RYLA, குஷி நிகழ்ச்சியை நடத்தியது. பால் கல்யாண் சங்குல் அனாதை குழந்தைகள் இல்லத்தைச் சேர்ந்த 200 பேர், கோல்ஹாப்பூரில் உள்ள மாதுஸ்ரீ விருத்தாஷ்ரம் முதியோர் இல்லத்தில் உள்ள 25 முதியோர்களை சந்தித்தபோது அவர்களுக்கு இடையே பாசப் பிணைப்பு ஏற்பட்டது. இரண்டு தலைமுறைகள் ஒன்றாக சந்திக்கும்போது அது குடும்ப பிணைப்பாக இருந்தது. தங்கள் குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்டு, முதியோர் இல்லத்தில் வாழும் சூழ்நிலையில் முதியோர்களை குழந்தைகள் சந்தித்து கலகலப்பாக பழகியது ரோட்டேரியன்களான எங்களுக்கு மனதை தொடும் நிகழ்ச்சியாக இருந்தது என்கிறார் சங்கத்தின் தலைவர் சந்தன் மிராஜ்கர்.

DRR பிரஞ்சல் மராத்தே மற்றும் ZRR அபிஹிஜித் பாடீல் தலைமையிலான மாவட்ட ரோட்ராக்ட் ஆதரவுடன் இந்த நிகழ்வு நடைபெற்றது. இது ஒருவகையான, உடல் ரீதியிலான உறவுகளை தவற விட்ட இரண்டு தலைமுறையினரின் சந்திப்பாகும். RYLA முடிந்து அவர்கள் பிரிந்து சென்ற போது அவர்களில் பெரும் பாலானோர் கண்ணீர் விட்டு அழுதனர். குழந்தைகளும் முதியோர்களும் பிரிக்க முடியாத உறவில் இருந்தனர் என்று நினைவுகூர்ந்தார் மிராஜ்கர். அனாதை குழந்தைகளும், புறக்கணிக்கப்பட்ட முதியோர்களும் சந்திப்பது தொடர்பான இந்த நிகழ்வு குறித்த யோசனையை பிரஞ்சல் மற்றும் பாடீல் கடந்த அக்டோபர் மாதம் எங்களிடம் தெரிவித்தபோது நான் நிதி ஆதரவுடன் உதவ ஒப்புக் கொண்டேன் என்று விளக்கினார் மிராஜ்கர்.



RYLA-ல் பல தருணங்கள் இருந்தன. கோல்ஹாபூரில் உள்ள D Y பாடீல் மருத்துவமனைக்குச் சென்ற போது குழந்தைகள் DPU கிளினிக்கல் சிமுலேஷன் மற்றும் ஸ்கில் ஆய்வகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் கோகுல் பால் பண்ணைக்குச் சென்று பார்வையிட்டு வந்னர். பின்னார் ஏழு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள கானேரி மடத்தையும் அவர்கள் பார்வையிட்டனர். அங்கு இந்தியாவின் கலாசார மரபுகளுடன் பண்டைய வாழ்க்கை முறையை சித்தரிக்கும் சிற்பங்களை பார்த்து வியந்தனர். முதல் நாளில் சிறுவர்கள் கால விளையாட்டுகள் விளையாடப்பட்டன. இது குழந்தைகள் மற்றும் முதியோர் இடையே வலுவான பிணைப்பை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து மண்பாண்டங்களை செய்முறை பட்டறையை நடைபெற்றது. இந்த சிறப்பு வாய்ந்த RYLA நிகழ்வை வருடாந்திர நிகழ்வாக கொண்டாட வேண்டும் என்பதில் பிரஞ்சால் மற்றும் மிராஜ்கர் இருவரும் உறுதியாக உள்ளனர்.■



*DRR பிரஞ்சல் மராத்தே (இடது) மற்றும் ZRR அபிஜீத் பாட்டீல், அனாதை குழந்தைகளுடன், பால் கல்யாண் சங்குலில்.*

# நன்மை பயக்கும் மன அழுத்தம்

பரத் மற்றும் ஷலன் சவுர்

பதற்றம், கவலை, கலவரம் என்பவை தெரிந்த வார்த்தைகள். ஆனால் அதன் இணைச்சொல் - மன அழுத்தம் காட்சியில் இன்னும் புதிதாக இருந்தது. காலப்போக்கில், நான் அதைப் புரிந்துக்கொண்டேன். மன அழுத்தம் என்பது மேலே உள்ள அனைத்தையும் உட்கொண்டது.

மன அழுத்தம் ஒரு விளைவு. காரணம் அல்ல. இது தனிநபரின் மன, உணர்ச்சி நிலையின் ஒரு உயிரினம். சற்று சிந்தியுங்கள் Y2K நினைவிருக்கிறதா? 1999-ம் ஆண்டின் இறுதியில் அடுத்த நூற்றாண்டைப் பற்றி ஆலோசிப்பதற்கும், விவாதிப்பதற்கும், கடுமையாக எதிர் பார்ப்பதற்கும் செலவிடப்பட்டது: Y2K (கி.பி. 2000). கணினிகள், கணினி யுகம், ஒட்டுமொத்த உலகமே செயலிழக்கப் போவதாக கூறப்பட்டது. பின்னோக்கிப் பார்த்தால், Y2K ஒரு தவறான அபாய மணியாகும். அன்று அழிவின் தீர்க்கதரிசிகளின் கூற்று தவறு என நிரூபிக்கப்பட்டது. ஆனால் இன்று, அது சற்று முன்கூட்டியே வந்த நம் உலகத்தின் ஒரு முன்னோடி அபாய மணியாக தோன்றலாம். சுனாமி (2004), உலகச் சந்தைகளுக்கு ஏற்பட்ட நிதி மற்றும் பொருளாதார அதிர்ச்சிகள் (2008) ஆகியவை எதிர்காலத்திற்கு முன்னோடிகளாக இருந்தன.

அந்த எதிர்காலம் இப்போது வந்து விட்டது. மோசமான செயல்களும் ஆரோக்கியமற்ற சிந்தனையும் இப்போது மையமாகி, இயற்கை அன்னையை தூண்டி கோபப்படுத் தியுள்ளன. கோவிட், புயல்கள் மற்றும் சூறாவளிகள். தொழிற்புரட்சி முதல் கூட்டு மனிதத்தின் வழிகள் அதன் பாதுகாவலரை கோபப்படுத் தியுள்ளன. எப்போதாவது நிகழும் கடவுளின் செயல்கள் அதிகரித்து வரும் உலகளாவிய வேகம் மற்றும் வெப்பநிலையுடன் படிப்படியாக அதிகரித்துள்ளன.

உலகப் பொருளாதார மன்றத்தின் உலகளாவிய இடர் அறிக்கையானது 'பாலிக்ரைசிஸ்' என்ற சொல்லை உருவாக்கியுள்ளது - கூட்டு விளைவுகளுடன் தொடர்புடைய அபாயங்களின் தொகுப்பாகும், அதாவது ஒட்டுமொத்த தாக்கம் ஒவ்வொரு பகுதியின் கூட்டுத் தொகையையும் மீறுகிறது. பழையவை தெளிவாக அல்லது போதுமானதாக இல்லாதபோது மன அழுத்தத்தின் மொழி ஒரு புதிய வார்த்தையை உருவாக்குகிறது. அடிக்கடி உச்சரிக்கப்படும் ஒரு கோர்வையான வார்த்தை ஒரு கிளிஷேவாக மாறும். இங்கே 'பாலிக்ரைசிஸ்' ஒரு முறை நிகழ்வு என்றும், மேற்கூறிய சூழ்நிலைகளின் சங்கிலி முடங்கும் என்றும் நம்புவோம். இந்த நிகழ்வுகள் நமது தனிப்பட்ட கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு உள்ளன. ஆனால், குறைந்தபட்சம் அவற்றுக்கான நமது எதிர்வினைகளையாவது அடக்கிவிட முடியும் அல்லது ஒரு அளவிற்கு கட்டுப்படுத்த முடியும்.

மன அழுத்தம் (ஸ்ட்ரெஸ்) ஆற்றலைத் தடுக்கிறது என்றால் யூஸ்ட்ரெஸ் அதற்கு எழுச்சி மற்றும் ஓட்டத்தை தருகிறது. இது நன்மை பயக்கும் மன அழுத்தம் (ஸ்ட்ரெஸ்) - உளவியல், உடல் அல்லது உயிர்வேதியியல் என எதுவாக இருந்தாலும் சரி. 1976-ம் ஆண்டு உட்சுரப்பியல் நிபுணரான ஹான்ஸ் செல்யேவால் இந்த வார்த்தை அறிமுகப்படுத்தப்பட்டது. மன அழுத்தம் (ஸ்ட்ரெஸ்) கட்டுப்படுத்தக் கூடிய, அர்த்தமுள்ள மற்றும் விரும்பத்தக்கதாக கருதப்படும் போது, அழுத்தத்திற்கு தைலம் போல யூஸ்ட்ரெஸ் வருகிறது.

உங்கள் உடலை ஓய்வெடுக்க உங்கள் சுவாசத்தை பயிற்சி செய்யுங்கள். ஒரு நல்ல ஆழமான மூச்சை எடுத்து, அது உங்கள் இதயத்திலும் வயிற்றிலும் நுழைவதை கற்பனை செய்து பாருங்கள். பிறகு, ஒரு பெரிய நிம்மதி பெருமூச்சை உருவகப்படுத்தி 'ஹா' என உங்கள் வாய் வழியாக வெளிவிடுங்கள். சில நேரங்களில் ஒன்று முதல் மூன்று முறை செய்தாலே உதவும். மற்றும் சில நேரங்களில் 20 முதல் 30 முறை செய்யவேண்டியிருக்கும். ஆனால் ஆழமாக சுவாசிப்பது நிச்சயமாக உதவும்.

'யூஸ்ட்ரெஸ் என்பது நேர்மறையான மனஅழுத்தம்' என்று டாக்டர் மைக்கேல் ஜெனோவர்ஸ் கூறுகிறார். "வேடிக்கையான சவாலுடன்" தூண்டப்பட்ட நரம்புகளின் தயாரிப்பு. உத்வேகத்துடன் இருக்கவும், இலக்குகளை நோக்கிச் செயல் படவும், வாழ்க்கையைப் பற்றி நன்றாக உணரவும் யூஸ்ட்ரெஸ் உதவுகிறது.

உடலின் சண்டை-அல்லது-ஓட்டம் எதிர்வினை முந்தைய பரிணாமத்திலிருந்து ஆழ்மனதில் அமைக்கப் பட்டுள்ளது. எனவே, யூஸ்ட்ரெஸ் என்பது நமது இறக்கைகளுக்குக் கீழே உள்ள காற்று. "யூஸ்ட்ரெஸ் உற்சாகம், நிறைவு, பொருள், திருப்தி மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றின் நேர்மறையான உணர்வுகளை உருவாக்குகிறது" என்கிறார் தொழில்முறை ஆலோசகர் கேசி லீ, M.A.

### எல்லைக்கு அப்பாற்பட்டது

இதன் நன்மைகள் ஏராளம். உணர்ச்சி ரீதியாக, யூஸ்ட்ரெஸ் திருப்தி, உத்வேகம், உந்துதல் மற்றும் ஓட்டம் ஆகியவற்றின் நேர்மறையான உணர்வைத் தூண்டுகிறது. உளவியல் ரீதியாக, யூஸ்ட்ரெஸ் நமது சுய-திறன், சுயாட்சி மற்றும் விடாமுயற்சி யை மேம்படுத்துகிறது. உடல் ரீதியாக, யூஸ்ட்ரெஸ் கடினமான உடல் உழைப்பை செயல்படுத்து கிறது மற்றும் உடற்பயிற்சி செய்ய அதிக ஆற்றலை வழங்குகிறது.

பூமியில் ஒருவராக, உங்களிடம் ஏற்கனவே "திரவத்தன்மை" ஆற்றல் திறன் உள்ளது. உங்கள் உடலில் 70 சதவீதத்திற்கும் அதிகமாக திரவமே உள்ளது. அதற்குத் தேவைப்படுவது தூண்டுதல் - யூஸ்ட்ரெஸ். ஆற்றலை தட்டி எழுப்பி இயக்க ஆற்றலாக மாற்றுவதற்கும், தேவையான, பொருத்தமான இலக்கிற்கு அதை அனுப்புவதற்கும் யூஸ்ட்ரெஸ் உதவும். எடுத்துக் காட்டாக: உங்கள் முதலாளி உங்களுக்கு ஒரு புதிய விற்பனை இலக்கை அமைக்கிறார். அல்லது ஒரு புதிய திட்டத்தை உங்களிடம் ஒப்படைக்கிறார். யூஸ்ட்ரெஸ் உங்கள் தற்போதைய பலம் மற்றும் திறன்களைப் பயன்படுத்த உதவுகிறது. அல்லது புதிய தேவையை பூர்த்தி செய்வதற்கான உங்கள் முயற்சிகளை இன்னும் சிறப்பாக பெரிதாக்கவும் மேம்படுத்தவும் உதவுகிறது. (தற்செயலாக, நம் பழைய காலக்கெடு இப்போது கால அளவுக்கோள் என விவரிக்கப் பட்டுள்ளதைக் கேட்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.) அந்த புதிய வார்த்தையே நமது தொழில் வாழ்க்கையை மறைமுகமாக பயமுறுத்திய காலக்கெடு என்ற வார்த்தைக்கு எதிராக நம்மை உயர்த்துகிறது.

ஆனால் தயவு செய்து நினைவில் கொள்ளுங்கள், யூஸ்ட்ரெஸ் ஒரு குறுகிய கால தீர்வு. அதன் சகிப்புத்தன்மை மற்றும் தங்கும் சக்தியை அதிகரிக்க தொடர் மற்றும் நிலையான முயற்சிகள் தேவை. யூஸ்ட்ரெஸ் என்பது வேறுபட்ட மற்றும் மாறுபட்ட செயல்களுக்கு பதிலாக இருக்கலாம்: தொடங்குதல், உறவைப் புதுப்பித்தல், திருமணம் செய்தல், புதிய வேலையில் சேருதல் போன்றவை.

யூஸ்ட்ரெஸ்ஸைத் தழுவிக் கொள்வதற்கு அல்லது சரியாக சொன்னால் அது உங்களைத் தழுவிக்கொள்ள, பின்பற்ற வேண்டிய சில படிகள் இங்கே உள்ளன: ஒவ்வொரு நாளும் புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்ளுங்கள், வேலை, விளையாட்டு போன்ற வற்றில் உங்கள் ஆறுதல் மண்டலத் திற்கு வெளியே உங்களைத் தள்ளுங்கள், சவாலான ஆனால் யதார்த்தமான புதிய இலக்கு களை (தனிப்பட்ட மற்றும் தொழில்முறை) அமைக்கவும். உங்கள் முன்னேற்றத்தைக் கண்காணித்து உங்களுக்கு நீங்களே பொறுப்புக்கூறுங்கள். இறுதியாக, உடற்பயிற்சி செய்யுங்கள். மன அழுத்தம் என்பது நாம் நினைத்தது போல் ஒரு பூதம் அல்ல. அதை மறந்து குதுகலிப்போம்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.



# ரோட்டரி ஆளுநர்



## அருண் குமார் மோங்கியா,

பிளைவுட் தயாரிப்பாளர், RC ஜகாத்ரி வடக்கு, RID 3080

## புதிய ரோட்டேரியன்களுக்கு பயிற்சி தர வேண்டும்

புதிய உறுப்பினர்களுக்கு ரோட்டரி அறிமுக பயிற்சி மற்றும் சிறப்பு பயிற்சி அமர்வுகளை நடத்த வேண்டும். ரோட்டரியின் சர்வதேச செயல்பாடுகளை விளக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் சேவைத் திட்டங்களில் முழு ஈடுபாடு காட்டுவார்கள். இது உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கும். பொது மக்களிடம் நன்மதிப்பை பெறவும் இது உதவும் என்கிறார் அருண் மோங்கியா.

உறுப்பினர்கள் எண்ணிக்கையை 15 சதவீதம் அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார். நாங்கள் 600 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும் 8 புதிய சங்கங்களை நிறுவவும் திட்டமிட்டுள்ளோம். ஏற்கெனவே 3 சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையை 4,500 ஆகவும், சங்கங்களின் எண்ணிக்கையை 116 ஆகவும் உயர்த்துவதே நோக்கம். 1,00,000 டாலர் சர்வதேச மானிய உதவியில் அறக்கட்டளைகள் மற்றும் மருத்துவமனைகளுடன் இணைந்த 5 டயாலிஸிஸ் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 35,000 டாலர் சர்வதேச மானியத்தில் புதிதாக 5 கழிப்பறை தொகுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. குடிநீர் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும் 30,000 டாலர் CSR நிதியுதவியில் 200 டி.பி. நோயாளிகளுக்கு மருந்து மற்றும் ஊட்டச்சத்து மாத்திரைகள் அடங்கிய கிட் வழங்கப்பட்டுள்ளன.

அவரது TRF இலக்கு 1 million. மோங்கியா ரோட்டரியின் கூட்டுறவு மற்றும் நெட்வொர்க்கால் ஈர்க்கப்பட்டதால் 2000-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார்.■



## விவேக் கர்க்

ரியல் எஸ்டேட், RC கான்பூர் இண்டஸ்டிரியல், RID 3110

## பல்வேறு திட்டங்களுக்கு CSR மானியங்கள்

வித்தியாசமாக இருங்கள், மற்றவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். இது விவேக் கர்கின் உத்வேகமான முழக்கம்.

அவரது மாவட்டத்தில் 149 சங்கங்கள் மற்றும் 4,000 ரோட்டேரியன்கள் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்கள் எண்ணிக்கையை 10 சதவீதம் அதிகரிப்பதும், புதிய சங்கங்களை நிறுவி அதன் எண்ணிக்கையை வரும் ஜூன் மாதத்திற்குள் 155-ஆக உயர்த்துவதும் லட்சியம் என்கிறார். கரன் லேடக்ஸ் நிறுவனத்தின் CSR நிதி உதவி ரூ.28 லட்சம் மூலம் வகுப்பறையில் டிஜிட்டல் பலகைகளை நிறுவி வருகிறார். வரும் மாதங்களில் ரூ.40 லட்சம் CSR நிதியில் 8 கணினி ஆய்வகங்கள், ரூ.50 லட்சம் CSR நிதியில் 2 மகிழ்ச்சிப் பள்ளிகள், ரூ.40 லட்சம் CSR நிதியில் ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 1 ஆம் தேதி 100 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு அதில் 1,00,000 பேருக்கு மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது. வரும் ஜூன் மாதம் 200 சுகாதார முகாம்கள் நடத்தவும் முடிவு செய்துள்ளோம் என்றார். அவரது TRF இலக்கு 1,00,000 டாலர். விவேக் கர்க் 2007-ல் ரோட்டரியில் சேர்ந்தார். கால்களை இழந்தவர்கள் முகாமில் தவழ்ந்து வந்து செயற்கைக் கால்களைப் பெற்று நடந்து சென்றது நெகிழ்ச்சி அளித்தது என்கிறார் அவர்.■

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





**மஞ்சித் சிங் அரோரா,**
பேஷன் ஜுவல்லரி, RC ரூர்கேலா மிட்டவுன், RID 3261

## 100 சதவீத TRF பங்களிப்பு சங்கங்கள் நோக்கம்

உறுப்பினர்கள் வளர்ச்சியை 15 சதவீதம் அதிகரிக்க திட்டம். 10 ரோட்டரி சங்கங்களை பட்டயப்படுத்தவும், 10 புதிய சங்கங்களை நிறுவ விரும்புகிறார். இவை தவிர 25 பள்ளிகளில் ரோட்ராக்ட் சங்கங்களை ஏற்படுத்தவும் திட்டமிட்டுள்ளதாக கூறுகிறார் மஞ்சித் சிங் அரோரா. தற்போது மாவட்டத்தில் 105 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 3,500-க்கும் மேலான உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

அவர் பல திட்டங்களை வரிசைப்படுத்துகிறார். பிறந்த குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான ஆம்புலன்ஸ் வசதி (GG:39,000) ஏற்படுத்தப்படும். ஜபல்பூர் புற்றுநோய் மருத்துவமனையில் சி.டி. சிமுலேட்டர் (GG:1,80,000) நிறுவப்படும். ஒடிசாவில், ஜார்சுகுடாவில் புற்றுநோய் கண்டறியும் வசதிகள் கொண்ட நடமாடும் வாகனம் (GG:ரூ.80 லட்சம்), கண் மருத்துவமனை (GG:ரூ.80 லட்சம்) ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எங்களது TRF இலக்கு 5,00,000 டாலர். பெருநன்கொடையாளர், லெவல் 2. அடுத்த நிலைக்கு உயர திட்டமிட்டுள்ளதாக கூறுகிறார் அரோரா. 1993-இல் ரோட்டரியில் சேர்ந்தார். தற்போதுள்ள AKS உறுப்பினர் அடுத்த நிலைக்குச் செல்ல தயாராக இருக்கிறார். ஒரு புதிய AKS உறுப்பினரை சேர்க்க முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார் அரோரா.■

**கன்ஷியாம் கன்சால்**
டெக்ஸ்டைல்ஸ், RC சுனாம், RID 3090

## பெண் ரோட்டேரியன்கள் மேம்பாட்டில் கவனம்

ரோட்டரியில் அதிக அளவில் பெண்களைச் சேர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்கிறார் கன்ஷியாம். திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்தி, சுதந்திரமாக செயல்பட அனுமதிப்பதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளிக்க முடியும். புதிதாக 500 உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள். அவர்களில் 150 பேர் பெண்களாக இருப்பார்கள். 20 புதிய சங்கங்கள் உருவாக்கப்படும். இவற்றில் 20 ஏற்கெனவே பட்டயப்படுத்தப்பட்டுள்ளன. நான்கு சங்கங்கள் முழுவதும் பெண்களை உறுப்பினர் களாக கொண்ட சங்கங்களாகும். தற்போது மொத்தம் 290 பெண் உறுப்பினர்கள் உள்ளனர். மொத்தம் 125 சங்கங்கள் உள்ளன. இவற்றில் 2,800 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

சுனாமில் கண் மருத்துவமனை 1,00,000 டாலர் சர்வதேச மானிய உதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனையில் மனஸா ராயல் ரோட்டரி சங்கம் சார்பில் 30,000 டாலர் சர்வதேச மானிய உதவி மூலம் எக்ஸ்ரே பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

அவரது ரோட்டரி சங்கம் டாக்டர் ககன்தீப் ரோட்டரி பப்ளிக் ஸ்கூலை நடத்தி வருகிறது. இங்கு ஆண்டு தோறும் சுமார் 200 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. TRF நிதியாக 2,80,000 திரட்ட கன்ஸால் திட்டமிட்டுள்ளார். 1989-ம் ஆண்டு இன்டராக்டராக இருந்த அவர், 1992-ல் ரோட்டராக்டில் சேர்ந்தார். 1999–2000-ம் ஆண்டில் அவர் DRR ஆக இருந்துள்ளார். 2002-ல் சுனாம் கோல்டன் ரோட்டரி சங்கத்தின் பட்டயத் தலைவராக இருந்துள்ளார். நட்புறவு, கூட்டுறவு மற்றும் நெட்வொர்கிங்கிற்கு சிறந்த தளமாக ரோட்டரி இருப்பதால் ரோட்டரியில் சேர்ந்ததாக கன்சால் கூறினார்.■

# கதிரவனை வணங்குவோம்

ப்ரீதி மேஹரா

*சூரிய சக்தி அமைப்பை நிறுவுவது 2024-ல்*
*புவி வெப்பமடைவதைத் தணிக்க ஒரு வழியாகும்.*

சூரிய ஆற்றலுக்கு யாரும் உரிமை கொண்டாட இயலாது என்பார்கள். அது உண்மைதான். சூரிய ஆற்றலுக்கு யாரும் வரி விதிக்கவும் முடியாது. அதிகாலை தொடங்கி மாலைவரை சூரியன் தன்னுடைய வெப்பத்தைப் பூமியுடன் பகிர்ந்துகொள்கிறது. நிலநடுக்கோட்டுக்கு அருகில் உள்ள இந்தியாவில் ஆண்டின் பெரும்பகுதியில் நிறையச் சூரிய ஒளி கிடைக்கிறது. நம்முடைய நல்ல நேரம், இந்தச் சூரிய ஆற்றல் இலவசமாகவும் கிடைக்கிறது, அதைக் கொண்டு நம் வாழ்க்கைக்கு ஒளியூட்டுகிற தொழில்நுட்பமும் நம்மிடம் இருக்கிறது. சூரிய ஆற்றல் என்பது மிகத் தூய்மையான, மிகப் பசுமையான, நாம் எளிதில் பெறக்கூடிய ஆற்றல் வளமாகும்.

அதனால், 2024-ஐ நீங்கள் சூரிய ஆண்டாக ஏற்றுக்கொண்டால் என்ன? சூரிய ஆற்றலை உங்கள் வீட்டில் பயன்படுத்துவதன்மூலம் வளங்குன்றாத ஒரு வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்கான முதல் படியை எடுத்துவைத்தால் என்ன?

இந்த மாற்றத்தை நாம் எங்கிருந்து தொடங்கலாம்? உங்கள் வீடு தனி வீடு என்றால், அதன் கூரையில் சூரிய ஆற்றல் அமைப்பு ஒன்றை அமைக்கலாம். பல வீடுகள் உள்ள வளாகத்தில் வசிக்கிறவர்கள் அங்குள்ள மற்ற உறுப்பினர்களிடம் இதுபற்றிப் பேசலாம். எல்லாரும் சேர்ந்து அந்த அடுக்ககத்தின் கூரையில் ஆற்றலைச் சேமிக்கும் அமைப்பு ஒன்றில் முதலீடு



செய்யலாம். இதில் நல்ல செய்தி என்னவென்றால், இந்த ஜனவரி மாதத்தில் அரசு நம் நாட்டில் புதுப்பிக்கக்கூடிய ஆற்றலைக் கூடுதலாக்குவதற்கென, வசிப்பிடங்களில் அமைக்கப்படும் சூரிய ஆற்றல் அலகுகளுக்கு மேம்பட்ட மானியம் ஒன்றை அறிவித்துள்ளது. இது ஒரு நல்ல புத்தாண்டுப் பரிசுதான். 2024-ல் நீங்கள் சூரிய ஒளியைப் பயன் படுத்திக்கொள்வதற்கு இது ஒரு கூடுதல் ஊக்கமாக அமையும்.

சூரிய ஆற்றலைப் பெற்றுப் பயன்படுத்துகிற தொழில்நுட்பம் பெரிய அளவில் முன்னேறியுள்ளது. இனி வரும் ஆண்டுகளிலும் அது மேலும் முன்னேறும். சூரிய ஆற்றல் எப்படி மின்னாற்றலாக மாற்றப்படுகிறது? எளிமையாகச் சொல்லவேண்டுமென்றால், சூரியனிலிருந்து வரும் ஃபோட்டான்கள் கூரையில் உள்ள சோலார் பேனல் எனப்படும் சூரிய ஒளிச் சட்டகத்தில் மோதும் போது, அவை நேர் மின்னாற்றல் (DC) கொண்ட எலக்ட்ரான்களாக மாற்றப்படுகின்றன. கூரையின்மீது உள்ள சூரிய ஒளிச் சட்டகங்களில் இன்வர்ட்டர் எனப்படும் மாற்றிகள் உள்ளன. இவை நேர் மின்னாற்றலை மாற்று மின்னாற்றலாக (AC) மாற்றுகின்றன. இதைப் பயன்படுத்தி மின்விளக்குகள், மின்விசிறிகள், குளிர் பதனப் பெட்டிகள், மடிக்கணினிகள் மற்றும் பிற வீட்டுக் கருவிகளை இயக்கலாம்.

நீங்கள் நிறுவும் சூரிய ஒளிச் சட்டகங்கள் கிட்டத்தட்ட 25 ஆண்டுகள்வரை உழைக்கின்றன. நீங்கள் அவற்றில் செய்யும் முதலீட்டைச் சுமார் நான்கு முதல் ஐந்து ஆண்டுகளில் திரும்பப் பெற்றுவிடலாம். சூரிய ஆற்றல் வல்லுநரான என் நண்பர் ஒருவரிடம் இதுபற்றிப் பேசினேன். ‘நீங்கள் உங்களுடைய கூரையில் சூரிய ஒளிச் சட்டகங் களுக்கான ஓர் இடத்தைக் கண்டு பிடித்து 1.5 கிலோவாட் கொள்ளளவு கொண்ட ஓர் அமைப்பை நிறுவினால் போதும்’ என்றார் அவர். இந்த அமைப்பு நான்கு அல்லது ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யப் போதுமான மின்னாற்றலை உருவாக்குமாம். இதன்மூலம் கிடைக்கிற கூடுதல் ஆற்றலால் நீங்கள் பொது மின்சாரத்தைச் சார்ந்திருப்பது குறையலாம், அதன்மூலம் உங்கள் மின்சாரக் கட்டணமும் நன்கு குறையலாம். கூரையில் அமைக்கும் சூரிய ஒளிச் சட்டக அமைப்புகளின் மிகச் சிறந்த நன்மை, அவற்றைப் பெரிய அளவில் பராமரிக்கவேண்டியதில்லை. அவற்றை மொத்த வீட்டுக்கும் அமைக்கலாம், அல்லது, குறிப்பிட்ட கருவிகளுக்குமட்டும் அமைக்கலாம். உங்கள் விருப்பப்படி இதை மாற்றிக்கொள்ளலாம்.

சூரிய ஒளிச்சட்டகத்தை நிறுவுவதற்கான முதலீட்டுச் செலவுகளும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்துவருகின்றன. இன்றைக்கு, சூரிய ஆற்றல் கலப்பு மாற்றிகள் கிடைக்கின்றன. இவற்றில் மின்கலன் (பேட்டரி) இணைப்புகள் அமைக்கப்பட்டுள்ளதால், இவை பின்னர் பயன்படுத்துவதற்கான ஆற்றலைச் சேமிக்கின்றன. மின்சாரம் இல்லாதபோது இவற்றை மாற்றாகப் பயன்படுத்தலாம். பல அமைப்புகளில் தொலைவிலிருந்து கட்டுப்படுத்துகிற மற்றும் கண்காணிக்கிற தொழில்நுட்பம் உள்ளது. இதன்மூலம், சூரிய ஆற்றல் அமைப்பின் உரிமையாளர்கள் அதன் செயல்திறனைக் கண்காணிக்கலாம், அது தங்களுக்குக் கொண்டுவரும் சேமிப்புகளைக் காணலாம்.

ஆனால், சூரிய ஆற்றலில் ஒரு குறையும் உள்ளது. சில நாட்களில் சூரிய ஒளி அவ்வளவாக வராமலிருக்கலாம். அப்போது, சட்டகங்கள் போதுமான ஆற்றலை உருவாக்காமல் இருக்கலாம். ஆனால், இது பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளின் பிரச்சனைதான். அங்கு பல நாட்கள் தொடர்ந்து சூரிய ஒளி குறைவாக இருக்கலாம். இந்தியா போன்ற வெப்ப மண்டல நாடுகளில், ஆண்டுமுழுவதும் நல்ல சூரிய ஒளி கிடைக்கிறது, மோசமான வானிலைச் சூழல்களின்போதும், குளிர் கால மாதங்களின்போதும் சூரிய ஒளி குறையலாம். அது போன்ற நேரங்களில், நாம் சேமிப்பு மின்கலன்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதாவது, சூரிய ஆற்றலைச் சேமித்துவைத்துப் பின்னர் பயன்படுத்துகிற வசதி இப்போது வந்துவிட்டது. அதனால், சூரிய ஒளி குறைவாக உள்ள நாட்களிலும் இதைப் பயன்படுத்தலாம்.

சூரிய ஆற்றலையும் ஹைட்ரஜனையும் எதிர்காலத்தின் எரிபொருட்கள் என்கிறார்கள். உலகம் புவி வெப்பமாதலுடனும் காலநிலை மாற்றத்துடனும் போராடிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், பொறுப்புள்ள குடிமக்கள் எல்லாரும் பூமியை இன்னும் பாதுகாப்பான மற்றும் இன்னும் பசுமையான இடமாக மாற்றுவதற்குத் தங்களுடைய முயற்சியைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.



எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

# ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

### காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்க, கார் பேரணி



*RC சென்னை மெராக்கி உறுப்பினர்கள் (இடமிருந்து) PRID A S வெங்கடேஷ், TRF அறங்காவலர் லாரி லன்ஸ்ஃபோர்ட், RID T N சுப்பிரமணியன், RI தலைவர் கோர்டன் மெக்கினலி, RIPN மரியோ டி காமர்கோ, PRIP K R ரவீந்திரன் மற்றும் TRF துணைத் தலைவர் பரத் பாண்டியா ஆகியோருடன் மண்டல மாநாட்டில்.*

RC சென்னை மெரகி, RID 3232, நடத்திய 6வது ஆண்டுக் கார் பேரணி 14 நாட்களில் 5,905 கிலோ மீட்டரைக் கடந்தது, காலநிலை செயல்பாடு, இயற்கைப் பாதுகாப்பை முன்னிறுத்தியது. நல்லி குப்புசாமி அவர்கள் தொடங்கிவைத்த இந்தப் பேரணி பெங்களூரு ரோட்டரி சந்திப்பிலும் பங்கேற்றது.■

### கொல்கத்தா அரசுப் பள்ளிகளுக்கு நீர் வடிகட்டிகள்



*புதிதாக வழங்கப்பட்ட தண்ணீர் வடிகட்டி முன் மாணவர்கள்.*

RC கல்கத்தா, RID 3291, பிராணதாரா திட்டத்தின் கீழ் கொல்கத்தாவில் உள்ள 75 அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு 150 நீர் வடிகட்டிகளை வழங்கியது. இந்தத் திட்டத்துக்கான மொத்தச் செலவு, ரூ.10 லட்சம்.■

### சிமோகா-வில் பால் வங்கி



*ஒரு தாய் அம்ருத பிந்து தாய் பால் வங்கியில் இருந்து வழங்கப்பட்ட பாலை தன் குழந்தைக்கு ஊட்டுகிறாள்.*

சர்ஜி மருத்துவமனை மற்றும் RC சென்ட்ரல் செஸ்டர் கவுன்டி (லயன்வில்லெ), RID 7450 உடன் இணைந்து, சிமோகா-வில் அம்ருத பிந்து என்ற மனிதப் பால் வங்கி ஒன்றை அமைத்துள்ளது RC சிமோகா சென்ட்ரல், RID 3182. ரூ.50 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட, 200 லிட்டர்களைச் கொள்ளளவு கொண்ட இந்த வளாகம், செயல்முறைப்படுத்தப்பட்ட பாலில் 40%ஐ அரசு மெக்கன் மருத்துவமனைக்குக் கொடையளிக்கும்.■

### குஜராத் கிராமத்திற்கு கண் பரிசோதனைக் கருவி



*சபர்கந்தா சமூக ரோட்டரி கண் பராமரிப்பு மையத்தில் ரோட்டரியர்கள்.*

RC வடலி ரவுண்ட்டவுன், RID 3055, மற்றும் RC செவ்ரோலெட் கனடா, RID 7090 இணைந்து, குஜராத்தில் உள்ள ஐந்து கண் பராமரிப்பு மையங்களுக்கு ரூ.25 லட்சம் செலவில் கண் பரிசோதனைக் கருவிகளைக் கொடையளித்தது.■

## 2022–23 Service Award for a polio-free world

TRF trustees established the Service Award for a polio-free world to honour members who have made outstanding contributions to Rotary's polio eradication efforts. Members can nominate individuals for regional or international service. The members listed here received the 2022–23 award.

**J Sridhar,** RID 3232

**Shivakumar J M,** RID 3190

**Narasinha Ramchandra Joshi,** RID 3170

**Sasanka Mahapatra,** RID 3262

**Rabinderjit Singh Panesar,** RID 3240

**Shyamashree Sen,** RID 3291

**Parameshwar Shiggaon** RID 3182

**N Subramanian,** RID 3011

**Lakshmanan Veerappan** RID 3000


FIND A CLUB

ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator


## District Wise TRF Contribution as on December 2023

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 18,676 | 875 | 1,000 | 0 | 20,551 |
| 2982 | 20,112 | 694 | 7,085 | 8,857 | 36,749 |
| 3000 | 60,832 | 290 | 0 | 26,171 | 87,293 |
| 3011 | 94,885 | 21,603 | 26,089 | 183,587 | 326,164 |
| 3012 | 10,630 | 50 | 0 | 65,588 | 76,269 |
| 3020 | 100,063 | 13,444 | 30,223 | 49,025 | 192,755 |
| 3030 | 50,145 | 27,248 | 4,275 | 187,574 | 269,242 |
| 3040 | 3,028 | 108 | 0 | 25 | 3,161 |
| 3053 | 18,314 | 0 | 0 | 12,439 | 30,753 |
| 3055 | 61,747 | 2,260 | 30 | 6,228 | 70,265 |
| 3056 | 16,246 | 125 | 0 | 0 | 16,371 |
| 3060 | 58,485 | 9,515 | 200 | 114,793 | 182,993 |
| 3070 | 3,985 | 20 | 0 | 0 | 4,005 |
| 3080 | 78,484 | 19,786 | 0 | 11,184 | 109,454 |
| 3090 | 37,477 | 1,113 | 8,000 | 5,121 | 51,711 |
| 3100 | 62,350 | 2,687 | 25,301 | 22,456 | 112,795 |
| 3110 | 10,476 | 30 | 0 | 79,348 | 89,854 |
| 3120 | 33,325 | 129 | 0 | 0 | 33,454 |
| 3131 | 333,808 | 7,535 | 85,098 | 422,875 | 849,315 |
| 3132 | 76,199 | 4,558 | 10,000 | 20,051 | 110,808 |
| 3141 | 233,474 | 11,082 | 59,012 | 439,873 | 743,442 |
| 3142 | 236,442 | 33,263 | 14,500 | 8,846 | 293,051 |
| 3150 | 30,768 | 30,478 | 160,411 | 73,365 | 295,022 |
| 3160 | 9,588 | 1,051 | 0 | 0 | 10,639 |
| 3170 | 58,758 | 26,577 | 12,700 | 70,534 | 168,568 |
| 3181 | 62,922 | 1,930 | 0 | 75 | 64,927 |
| 3182 | 28,317 | 4,606 | 0 | 0 | 32,922 |
| 3191 | 28,702 | 5,366 | 60,976 | 286,416 | 381,459 |
| 3192 | 44,213 | 8,767 | 0 | 46,198 | 99,177 |
| 3201 | 67,196 | 43,609 | 45,684 | 986,848 | 1,143,337 |
| 3203 | 13,872 | 14,858 | 1,220 | 15,550 | 45,500 |
| 3204 | 14,099 | 2,535 | 0 | 14,574 | 31,208 |
| 3211 | 34,454 | 4,236 | 27,325 | 94,924 | 160,940 |
| 3212 | 45,869 | 18,206 | 0 | 51,853 | 115,927 |
| 3231 | 3,232 | 2,135 | 0 | 0 | 5,367 |
| 3232 | 34,936 | 16,675 | 14,005 | 815,812 | 881,428 |
| 3240 | 60,226 | 8,158 | 0 | 86,571 | 154,955 |
| 3250 | 21,871 | 2,951 | 26 | 10,298 | 35,147 |
| 3261 | 11,313 | 968 | 0 | 28,978 | 41,259 |
| 3262 | 29,473 | 3,886 | 1,000 | 2,575 | 36,934 |
| 3291 | 87,735 | 2,242 | 41,646 | 1,050 | 132,673 |
| 3220 **Sri Lanka** | 27,110 | 3,154 | 0 | 873 | 31,137 |
| 3271 **Pakistan** | 15,150 | 72,053 | 0 | 20,402 | 107,606 |
| 3272 **Pakistan** | 4,342 | 385 | 0 | 25 | 4,752 |
| 3281 **Bangladesh** | 80,569 | 2,105 | 3,000 | 264,728 | 350,403 |
| 3282 **Bangladesh** | 91,336 | 4,472 | 1,000 | 9,116 | 105,924 |
| 3292 **Nepal** | 138,818 | 20,556 | 13,000 | 77,421 | 249,796 |

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation. **Source:** RISAO

# வார்த்தைகளின் பின்னல்கள்



சந்தியா ராவ்

நாம் இக்கட்டான காலங்களில் வாழ்கிறோம், மேலும் வருடங்கள் உருண்டோடும்போது விஷயங்கள் மேலும் சிக்கலாகிக் கொண்டே தான் போகும். வரலாறுகள், நாகரிகங்கள், நம்பிக்கைகள், அறிவு, ஏன் தகவல் கூட முடிவில்லாத சுழலில் மாற்றி சித்தரிக்கப்படும்; அதன் தொலைதூர வரலாறு மேலும் வளைக்கப்படும். எளிமையாகச் சொல்லவேண்டுமென்றால்: அவைகள் குழப்பமாகவே இருக்கும். இந்த வளைவுகளை புரிந்துகொள்வதற்கும், அதன் மர்ம முடிச்சிகளை அவிழ்ப்பதற்கும், தங்கள் வாழ்க்கையை மிகவும் புரிந்துகொள்ளக்கூடிய மற்றும் ஆறுதலான திரைச்சீலைகளாக நெசவு செய்வதற்காகவும் தான் மக்கள் நம்பிக்கை, தியானம், வேலை, விளையாடுதல், ஓய்வெடுத்தல் என பலவற்றின் பக்கம் திரும்புகிறார்கள். புத்தகங்கள் மற்றும் வாசிப்பு ஆகியவை இந்த திரைச்சீலைகளின் முக்கிய மூலப்பொருட்கள் என்று நான் கருதுகிறேன்: அவை முடிச்சுகளை அகற்றவும், ஆக்கப் பூர்வமான வடிவமைப்புகளை ஊக்குவிக்கவும் உதவுகின்றன. இருப்பினும், அடிப்படையில், அவைகள் நம்மை முதலில் மகிழ்விக்க தான் இருக்கிறது.

சமீப காலங்களில், அரசியல் தவறு என்று பின்னோக்கிக் குற்றம் சாட்டப்பட்ட சில எழுத்தாளர்களின் படைப்புகளை “ஒயிட்வாஷ்” செய்ய சிறுவர் புத்தக வெளியீட்டாளர்கள் தரப்பில் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஆங்கிலம் படிக்கும் இந்தியாவின் பாரிய வாசகர்கள் ரசித்த எனிட் பிளைட்டனின் புத்தகங்களில் இனவெறி இருப்பதாக சிலர் கருதுகிறார்கள். ஒரு காலத்தில், குழந்தைகள் படிக்க விரும்பும் பிரதான புத்தகங்களாக (பேமஸ் பைவ், நாடி, மேலரி டவர்ஸ்) அவை இருந்தன. இன்றைய பல பெரியவர்கள் பிளைட்டனின் புத்தகங்களை படித்து வளர்ந்தவர்கள். இந்த இயக்கத்தில் சீக்கியிருக்கும் மற்றொரு எழுத்தாளர் ரோல்ட் டால் (சார்லி அண்ட் சாக்லேட் ஃபாக்டெரி, மட்டில்டா).

மென் லிவிங்க் இணையத்தளத்தில் ஷான் எமர்சன் எழுதிய “ஒய் பாய்ஸ் ஸ்டாப் ரீடிங்?” என்ற தலைப்பில் ஒரு கட்டுரை உள்ளது, அதில் எழுத்தாளர் மாட் ஹெய்க் (தி மிட்நைட் லைப்ரரி) அவர்களின் இன்ஸ்டாகிராம் பதிவில் இருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது: ‘நீங்கள் சமீபத்திய ரோல்ட் டால் ரீ-எடிட் கேலிக்கூத்து முழுவதையும் பார்க்க வேண்டும். அது GenZ விழிப்புணர்வைப் பற்றிய கேலிக்கூத்து அல்ல, பெருநிறுவன பேராசை மற்றும் கூச்சம் பற்றிய கேலிக்கூத்து. ரோல்ட் டால் விநோதத்தை ரசித்த ஒரு எழுத்தாளர். இப்போது ரோல்ட் டால் புத்தகங்களின் உரிமையை வைத்திருக்கும் வயதானவர்கள் மத்தியில் ஒரு கவலை உள்ளது, தங்கள் GenZ சந்ததியினர் மோசமான விஷயங்களைப் படிக்க விரும்பவில்லை, ஏனென்றால் புத்தகங்கள் நமக்கு நல்லது கற்பிக்க மட்டுமே உள்ளது அல்லவா.’ கற்பித்தல்/கற்றல் கருவிகளாக அல்லாமல், திரைப்படங்கள், YouTube, வீடியோ கேம்கள் போன்றவை போல பொழுதுபோக்காக புத்தகங்களைப் பார்க்க வேண்டும் என்று ஹெய்க் வாதிடுகிறார். அதை அவருடைய சொந்த வரிகளில் சொல்லவேண்டுமென்றால்: “பொதுவாக இளைஞர்கள் ஆபத்தான விஷயங்களை விரும்புபவர்கள். அவர்களின் மூளையில் ப்ரீஃப்ரான்டல் கோர்டெக்ஸ் இன்னும் முழுமையாக வளர்ச்சியடையாததால் அவர்களுக்கு கற்பனை வளம் அதிகமாக இருக்கும், அதேசமயம் பாதுகாப்பு பற்றிய கவலை இருக்காது.”




பெரியவர்களுக்கான புத்தகங்களில் எதிர்பார்ப்புகள் எப்படியோ கற்பித்தல்/கற்றல் கோணத்தில் குறைவாகவே இருக்கிறது. பெரியவர்களான நமக்கும் “கற்பனை வளம்” அதிகமாகவே இருக்கிறது என்று நான் நம்புகிறேன், அதை நாம் அறியாமலேயே எச்சரிக்கை, பெண் வெறுப்பு, புகுத்தப்பட்ட கருத்துக்கள், சமூக அழுத்தம் போன்ற தவறான எண்ணங்களுக்கு அடியில் புதைத்து விடுகிறோம். படிப்பதனால் கிடைக்கும் பல வகையான பலன்களை ஒதுக்கி வைப்பதால் நீங்கள் இழக்கும் இன்பங்களை பற்றி நினைத்துப் பாருங்கள்! அதனால்தான், ஏமாற்றுபவர்களாலும், தந்திரக்காரர்களாலும், சுய-பாணியான கடவுள்-பிரதிநிதிகளாலும் மக்கள் சுற்றி வளைக்கப்படுவதைப் பார்க்கும்போது, ம்ம்ம், அவர்கள் அதிகம் படித்திருக்க மாட்டார்கள் என்ற எண்ணம் தோன்றுகிறது. உங்கள் மூக்கை பிடித்து வழிநடத்தப்படுவது உங்களுக்கு வேடிக்கையாகவா இருக்கும்?

மனிதர்கள் சிந்திப்பவர்கள், பேசுபவர்கள், ஆராய்பவர்கள். நமது அனுபவங்களையும் நம் கற்பனைகளையும் இணைப்பது மட்டுமல்லாமல் வாசிப்பு பல வழிகளில் நம் மனதை ஈடுபடுத்துகிறது. இவற்றிலிருந்தும் பிற தொடர்புகளிலிருந்தும் யோசனைகள் உருவாகுகின்றன, மேலும் பிரதிபலிக்கும் மற்றும் சிந்திக்கும் திறனை வளர்க்கின்றன . மந்தையிலிருந்து பிரித்து, கேட்கவும் கேட்கபடவும் செய்கிறது. இந்த சிந்தனைப் கோணம் இயற்கையாகவே புத்தகங்கள், புத்தகக் கடைகள் மற்றும் வாசிப்பு பற்றிய புத்தகங்களுக்கு நாமை அழைத்து செல்லும். அப்படிபட்ட புத்தகங்களின் சிறிய

தொகுப்பு இங்கே. இருப்பினும், எழுத்து உலகின் பரந்த மற்றும் மாறுபட்ட கடற்கரைகளில் இது சிறிய மணல் துகள் மட்டுமே என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஷௌனா ராபின்சன் எழுதிய "தி பேன்டு புக் ஷாப் ஆஃப் மேகி பாங்க்ஸ்"ஸில் தொடங்குவது பொருத்தம் என தோன்றுகிறது, இந்த கதையின் புத்தகக் கடையில் உள்ள அலமாரிகள் பெரும்பாலும் வழக்கமான கிளாசிக்ஸ் புத்தகங்களால் நிரம்பியிருக்கும், அந்த இடத்தை பிரபலப்படுத்த மாற்று சிந்தனை தேவைப்பட்டது. அதற்கு தடை செய்யப்பட்ட புத்தகங்களை மக்கள் படிக்கும் ரகசிய புத்தகக் கழகத்தை அவர்கள் தொடங்குகிறார்கள். இது எனது ஆர்வத்தைத் தூண்டியது! இரண்டாவது புத்தகம் ஒரு நண்பரின் கைகளில் முதன்முதலில் பார்த்த தில் இருந்து நான் நீண்ட காலமாக வாங்க நினைத்தது – 'புக் தீஃப்'. நான் அதன் இரண்டு பிரதிகளை வாங்கியுள்ளேன், ஒன்றில் எழுத்தாளர் மார்கஸ் ஜூசாக் கையெழுத்திட்டுள்ளார். இரண்டாம் உலகப் போரின் போது ஜெர்மனியை மையமாக கொண்ட இப்புத்தகத்தில், ஒரு இளம் பெண் புத்தகங்களைத் திருடி, மெதுவாக அவற்றைப் படிக்கக் கற்றுக்கொள்கிறாள். இப்புத்தகத்தில் மரணம் கதை சொல்பவராக எழுதப்பட்டுள்ளது! அலிசன் ஹூவர் பார்ட்லெட் எழுதிய "தி மேன் ஹூ லவ்டு புக்ஸ் டூ மச்: தி ட்ரூ ஸ்டோரி ஆஃப் எ தீஃப், எ டிடெக்டிவ் அண்ட் எ வேர்ல்ட் ஆஃப் லிட்டரரி அப்செஷனின்" கருப்பொருளும் திருடுவது தான். ஜான் சார்லஸ் கில்கி புத்தகங்களை மிகவும் நேசிப்பவர், அவர் அவற்றை எல்லா பக்கத்திலுமிருந்து திருடுகிறார். புத்தக விற்பனை யாளரால் அவர் துரத்தப்படுகிறார், பின்னர் அவர்களே அந்த புத்தகங்களையே காதலிக்கிறார்கள்!

சாரா நிஷா ஆடம்ஸ் எழுதிய தி ரீடிங் லிஸ்டில், ஹார்பர் லீயின் டு கில் எ மாக்கிங் பேர்டின் பிரதியில் தான் இதுவரை படிக்காத புத்தகங்களின் பட்டியலை கதாநாயகி கண்டுபிடிப்பார். அந்த பட்டியலில் உள்ள அனைத்து புத்தகங்களையும் படிக்கும் அவரது திட்டம் அவருக்கு ஒரு அற்புத பயணமாக அமைகிறது. தி கேர்ள் ஹூ ஏட் புக்ஸ் என்ற கட்டுரைத் தொகுப்பை நிலஞ்சனா ராய் எழுதியுள்ளார். தில்லியின் தெரு பூனைகளை மையமாக கொண்ட இதயத்தை நிறுத்தும் த்ரில்லர் புத்தகமான தி வைல்டிங்ஸின் ஆசிரியர் இவர். புத்தகங்களைச் சேகரிப்பது பற்றி அவர் சொல்வதைப் படியுங்கள்: "புத்தகங்களைச் சேகரிப்பது என்பது நட்சத்திரங்களை நிமிர்ந்து பார்ப்பதற்குச் சமம்: நீங்கள் எப்படி நட்சத்திரங்களைச் சொந்தமாக்க விரும்புவதில்லையோ அதேபோல் புத்தகங்களை மற்றும் அவற்றில் உள்ள அறிவை சொந்தமாக்கவும் விரும்ப மாட்டீர்கள். நீங்கள் செய்ய விரும்புவதெல்லாம் ஆச்சரியத்தின் மேற்பரப்பை உரதுவதும், பெரியவரானாலும், உங்கள் மனதுக்குள் சில பகுதிகள் எப்போதும் உலகம் மற்றும் வார்த்தையின் மீது இருக்கும் பிரமிப்பு மற்றும் அன்பை ஏற்றுக்கொள்வதும் ஆகும்.'




அரசாங்கங்கள்/தலைவர்கள் சில சமயங்களில் புத்தகங்களை ஏன் தடை செய்கிறார்கள்? ரீடிங் லொலிடா இன் டெஹ்ரான் என்ற புத்தகம் மூலம் பிரபலமான அசார் நஃபிசியின் ரீட் டேஞ்சரஸ்லியில் இதன் அர்த்தம் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வாய்ப்புள்ளது. அவர் மார்கரெட் அட்வுட், ஜேம்ஸ் பால்ட்வின், டோனி மோரிசன் மற்றும் சல்மான் ருஷ்டி போன்ற எழுத்தாளர்களின் எழுத்துக்களின் விவாதத்தின் மூலம் வாசிப்பை ஒரு அரசியல் கருவியாக ஆராய்கிறார்.

சில எழுத்தாளர்கள் தங்கள் புத்தகத்தின் உள்ளடக்கத்திற்காக உலகம் முழுவதும் தீவிரமாகத் தேடுகின்றனர். அரவுன்டு இந்தியா இன் 80 ரயில்ஸ் மற்றும் அரவுன்டு தி வேர்ல்ட் இன் 80 ரயில்ஸ் ஆகிய புத்தகங்களை எழுதிய மோனிஷா ராஜேஷை எடுத்துக்கொள்ளுங்கள். மோனிஷாவின் அப்பயணம் எப்படி ஆரம்பித்தது என்பதைப் பார்ப்போம். டிசம்பர் 5, 2020 இன் தி கார்டியனில் இந்தியா பயண புத்தகத்தின் ஒரு பகுதி பின்வருமாறு: '... ஒரு தூறல் மழையுடன் கூடிய நவம்பர் காலை, இந்தியாவின் உள்நாட்டு விமான நிறுவனங்கள் இப்போது 80 நகரங்களை இணைத்துள்ளனர் என்பதைக் கொண்டாடும் ஒரு கட்டுரையைப் படித்தேன்... இருப்பினும், அதன் விலை என்னை பெரிதாக ஈர்க்கவில்லை... அப்போது நான் கவனித்த வரைபடம் ஒன்று முழுவதிலும் இழைகளின் வலையமைப்பு ஓடியது, அவை ஒவ்வொரு மூலை முடுக்கையும் அடைந்தன, மலையுடன் வளைந்து, கடற்கரையில் தழுவி ஓடி, நகரங்களையும் மாநிலங்களையும் ஒன்றாக இணைத்தன. அது நாட்டின் இதயத்தை துடிக்க வைக்கும் உயிர்நாடியான இந்திய ரயில்வேயின் வரைபடம்.'

பிரிட்டிஷ் எழுத்தாளர் ஆன் மோர்கன் ஒரு வருடத்திற்குள் உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஒரு புத்தகத்தை யாவது படிக்க முடிவு செய்தார். தி வேர்ல்ட் பிட்வீன் டூ கவர்ஸ்: ரீடிங் த க்ளோப் என்பது நம்மை போன்ற புத்தகப் பிரியர்களுக்கு அவர் வழங்கியிருக்கும் விருந்து! அப்புத்தகங்கள் எல்லாவற்றையும் முடிக்கும் வரை ஒரு வருடம் முழுவதும் ஒரு புத்தகம் கூட வாங்கமாட்டேன் என்று அவர் முடிவு செய்கிறார்.

சொல்லுங்கள், உங்கள் முடிவு என்ன?

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# TRF விருதுகள் (2022–23)

| Trophy | Zone 4 | Zone 5 |
|---|---|---|
| Highest Contribution to TRF Annual Fund | Sandip Agarwalla, RID 3141 | V R Muthu, RID 3212 |
| Highest Contribution to TRF Endowment Fund | Dr Lalit Khanna, RID 3012 | Dr N Nandakumar, RID 3232 |
| Highest Contribution to TRF Polio Fund | Sandip Agarwalla, RID 3141 | V R Muthu, RID 3212 |
| Highest per capita APF Contribution to TRF | Sandip Agarwalla, RID 3141 | V R Muthu, RID 3212 |
| Highest Total Contribution to TRF | Sandip Agarwalla, RID 3141 | Dr N Nandakumar, RID 3232 |
| Highest Donor Participation (% wise) | Sandip Agarwalla, RID 3141 | V R Muthu, RID 3212 |
| 100% Club Participation for TRF Giving | Sandip Agarwalla, RID 3141<br>Kailash Jethani, RID 3142<br>Shrikant Indani, RID 3060 | S Rajmohan Nair, RID 3201<br>Pubudu De Zoysa, RID 3220 |



IPDG சந்தீப் அகர்வாலா RI தலைவர் கோர்டன் மெக்கினலி மற்றும் RIPN மரியோ டி காமர்கோ ஆகியோரிடமிருந்து கோப்பைகளைப் பெறுகிறார். மேலும் (இடமிருந்து) PDG ஷஷி சர்மா, RID ராஜு சுப்ரமணியன், TRF துணைத் தலைவர் பரத் பாண்டியா, மாலினி அகர்வாலா, TRF அறங்காவலர் லாரி லன்ஸ்ஃபோர்ட், வித்யா சுப்ரமணியன், PDGக்கள் ஹர்ஜித் சிங் தல்வார் மற்றும் பாலகிருஷ்ணா இனாம்தார், மற்றும் PRID அசோக் மகாஜன் ஆகியோரும் உள்ளனர்.



IPDG அனில் பர்மர், RI தலைவர் மெக்கினலியிடமிருந்து ஒரு விருதைப் பெறுகிறார். மேலும் (வலமிருந்து) PDG தீபக் புரோஹித், RID சுப்ரமணியன் மற்றும் ஹேமா பர்மர் ஆகியோரும் உள்ளனர்.



IPDG V பாஸ்கர் ராம் RI தலைவர் மெக்கினலியிடமிருந்து ஒரு விருதைப் பெறுகிறார். மேலும் (இடமிருந்து) PDGs டோட்லா பரத் ரெட்டி, G V மோகன் பிரசாத், TRF துணைத் தலைவர் பாண்டியா மற்றும் அறங்காவலர் அஜீஸ் மேமன் ஆகியோரும் உள்ளனர்.

# மண்டலங்கள் 4, 5, 6 மற்றும் 7

| Trophy | Zone 6 | Zone 7 |
|---|---|---|
| Highest Contribution to TRF Annual Fund | Jitendra Rajbhandary, RID 3292 | Dr Anil Parmar, RID 3131 |
| Highest Contribution to TRF Endowment Fund | Jitendra Rajbhandary, RID 3292 | Jeetendra Aneja RID 3190 |
| Highest Contribution to TRF Polio Fund | Dr Anand Jhunjhunuwala, RID 3030 | V Bhaskar Ram, RID 3020 |
| Highest per capita APF Contribution to TRF | Dinesh Sharma, RID 3100 | Dr Anil Parmar, RID 3131 |
| Highest Total Contribution to TRF | Pawan Agarwal, RID 3110 | Dr Anil Parmar, RID 3131 |
| Highest Donor Participation (% wise) | Dr Anand Jhunjhunuwala, RID 3030 | Venkatesh Deshpande, RID 3170 |
| 100% Club Participation for TRF Giving | Dr Anand Jhunjhunuwala, RID 3030<br>Dinesh Sharma, RID 3100 | V Bhaskar Ram, RID 3020<br>Dr Anil Parmar, RID 3131<br>Venkatesh Deshpande, RID 3170 |

| Zone 4, 5, 6 & 7 (India, Nepal and Sri Lanka) | RI District |
|---|---|
| Nitish Laharry Trophy for Highest Total Contribution to TRF | 3141 |
| Binota and Kalyan Banerjee Trophy for Highest Endowment Fund Contribution | 3012 |
| Usha and Raja Saboo Trophy for Highest Annual Fund Contribution to TRF | 3141 |
| Highest Polio Fund Contribution to TRF | 3212 |
| District with highest new AKS members | 3141 |




*RI தலைவர் மெக்கினலி IPDG ஆனந்த் ஜுன்ஜுனுவாலாவுக்கு ஒரு விருதை வழங்குகிறார். (இடமிருந்து) TRF துணைத் தலைவர் பரத் பாண்டியா, PRID மனோஜ் தேசாய், RI இயக்குநர்கள் சுப்ரமணியன் மற்றும் அனிருதா ராய்சௌத்ரி ஆகியோரும் காணப்படுகின்றனர்.*

உறுப்பினர் மற்றும் பொதுப் பட விருதுகள் அடுத்த இதழில்

படங்கள்: K விஸ்வநாதன்.

# எல்லைக்கு அப்பாற்பட்ட நட்புறவு

**H ராஜேந்திர ராய்**



PDG *ராஜேந்திர ராய் (இடமிருந்து இரண்டாவது) லாகூரில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுக்கான பாகிஸ்தான் சங்கத்தின் செயற்கை மூட்டு பிரிவில்.*

1947-ம் ஆண்டுக்கு முன்னர் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த பாகிஸ்தான் மற்றும் வங்கதேசம் ஆகிய இரு நாடுகளுக்கும் சென்றுவர வேண்டும் என்பது எனது கனவாக இருந்தது. 2019 ஆம் ஆண்டில் வர்த்தகப் பயணமாக இரண்டு முறை வங்கதேசம் செல்ல வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், என் நண்பரான TRF அறங்காவலர் அஜீஸ் மேமன், கராச்சியில் நடைபெறும் மகன் சினானின் திருமணத்துக்கு அழைப்பு விடுக்கும் வரை பாகிஸ்தான் செல்ல வேண்டும் என்பது கனவாகவே இருந்தது.

நான் கடந்த ஆண்டு நவம்பர் 18-ம் தேதி கராச்சி சென்றேன். 1886-ல் நிறுவப்பட்ட கராச்சி ஜிம்கானாவில் எனக்கு அஜீஸ் விருந்தளித்தார். கராச்சியில் மூன்று நாட்கள் தங்கியிருந்த போது, சினானின் திருமண வரவேற்பில் நான் கலந்து கொண்டதைத் தவிர, ரோட்டேரியன் நோமன் அப்துல் மஜீத் என்னை மொஹட்டா அரண்மனை, மஸார்-இ-குவைத்-இ-ஆஸம், ஹஸ்ரத் செயல் அப்துல்லா ஷாஹா காஜி ஆலயம், புனித பாட்ரிக் தேவாலயம், ஃபரார்ஸ் ஹால், எம்ப்ரஸ் மார்க்கெட் உள்ளிட்ட இடங்களுக்கு அழைத்துச் சென்றார்.



PDG *ராய் குனூத் மற்றும் அவரது தந்தை மிர்சா அப்சல் பெய்க்கை சமீபத்தில் பாகிஸ்தான் சென்ற போது சந்தித்தார்.*

12 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு குனூத் மற்றும் அவரது தந்தை மிர்ஸா அஃப்ஸல் பைக்கை சந்தித்தது எனது பயணத்தின் முக்கிய அம்சமாகும். 2011-ல் குனூத், ஒரு சிக்கலான இதய அறுவைச்சிகிச்சைகாக இந்தியா வந்தபோது ரோட்டரி உதவியுடன் பெங்களூரில் உள்ள ஜெயதேவா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். மணிப்பாலைச் சேர்ந்த இதயநோய் அறுவைச்சிகிச்சை நிபுணரான டாக்டர் தேவானந்த், (ரோட்டரியில் 2000-ம் ஆண்டு முதல் GSE-ஆக இருந்தவர்.) அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக நடத்தினார்.

எனது பயணத்துக்கு சில நாட்கள் முன்னதாக ஒரு முகநூல் பதிவு மூலம் என்னை தொடர்பு கொண்டு, பாகிஸ்தானில் உள்ள ஹைதராபாதில் இருந்த குனூத் மற்றும் அவளது தந்தை இருவரும் மூன்று மணி நேர பஸ் பயணம் மூலம் கராச்சி வந்து என்னை சந்தித்தார். அவள் இப்போது நன்றாக இருப்பதை அறிந்து இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தேன். பட்டப்படிப்பு முடித்த அவள், இப்போது பட்டமேற்படிப்புக்காக காத்திருக்கிறாள். ஆசிரியையாக வேண்டும் என்பது அவளது விருப்பம். நான் உடனே அவர்களை, டாக்டர் தேவானந்துடன் தொடர்பு கொண்டு பேசவைத்தேன்.

குனூத் அவருக்கு நன்றி தெரிவித்ததுடன், அவரிடம் சில மருத்துவ ஆலோசனைகளையும் கேட்டறிந்தார். கராச்சியில் என்னை சந்தித்த பின் அவள் எனக்கு அனுப்பியிருந்து குறிப்பு என் மனதை தொட்டது. 12 ஆண்டுகளுக்குப்

பிறகு உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி. ரோட்டரி சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். எனது பெற்றோரின் பிரார்த்தனையாலும், உங்கள் அனைவரின் கடுமையான உழைப்பினாலும் நான் இன்று உயிரோடு இருக்கிறேன். நமக்கு உயிர் கொடுப்பவர் கடவுள்தான் என்றாலும், இந்த சமயத்தில் டாக்டர் தேவானந்துக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்தான் எனக்கு புதுவாழ்வு அளித்தவர். அவர் இதை ஒருசவாலாக ஏற்றுக்கொண்டிருக்காவிட்டால் நான் இன்று உங்களுடன் இருக்க முடியாது. உங்கள் அனைவரின் அன்புக்கும் நன்றி. என்று குறிப்பிட்டிருந்தார். இந்த குறிப்பை நான் மதிப்பு மிக்கதாக கருதுகிறேன்.


பெங்களூரு ஜெயதேவா மருத்துவமனையில் பாகிஸ்தானைச் சேர்ந்த குனூத் மற்றும் ஹசீப் 2011 ஜனவரியில் இதயக் கோளாறுக்காக சிகிச்சை பெற்றனர்.

எனது அடுத்த நிறுத்தம் 13 மில்லியன் மக்கள்தொகை கொண்ட பாகிஸ்தானின் இரண்டாவது பெரிய நகரமான லாகூர். மொகலாயர் ஆட்சிக்குப் பிறகு தோட்டங்கள் நிறைந்த நகரம் என்று அழைக்கப்படுகிறது லாகூர். இங்கு பல சிறந்த பல்கலைக்கழகங்கள் உள்ளன. கற்றலின் இருப்பிடம் என்றுகூட சொல்லலாம். லாகூர் புதிய நகரம், பழைய நகரம் இரண்டையும் பார்த்தேன். புதிய பாகிஸ்தானி ரோட்டரி நண்பர்கள் டாக்டர் அலி அர்ஷத் மற்றும் உஸ்மான் இருவரும் உதவினார்கள். பாட்ஷாஹி மசூதி (1671–1676 இல் கட்டப்பட்டது), மினார்-இ-பாகிஸ்தான், (1960 மற்றும் 1968-ல் கட்டப்பட்டது) இங்குதான் அகில இந்திய முஸ்லிம் லீக் லாகூர் தீர்மானத்தை நிறைவேற்றியது. ஷாஹி ஹம்மம், ஷாஜகான் காலத்தில் கட்டப்பட்ட துருக்கிய குளியல் அறை, பழைய லாகூரில் உள்ள குறுகிய சந்து (2.5 அடி அகலம் உடையது), வாசனைப் பொருள்கள் விற்பனை சந்தை ஆகியவற்றை பார்வையிட்டோம்.


RC கராச்சியால் ஆதரிக்கப்பட்டு ஹிஜாஸ் அறக்கட்டளை நடத்தும் குல்சூம் பள்ளியில் மாணவர்களுடன்.

நான் பாகிஸ்தானில் ஒருவாரம் தங்கியிருந்தபோது பழமை வாய்ந்த ரோட்டரி சங்கங்களான கராச்சி ரோட்டரி சங்கம்-1933-ல் நிறுவப்பட்டது, லாகூர் ரோட்டரி சங்கம்-1927-ல் நிறுவப்பட்டது ஆகிய இரண்டின் கூட்டங்களிலும் கலந்து கொண்டேன். கராச்சி ரோட்டரி சங்கம் ஆதரவில் செயல்படும் குல்ஸும் பள்ளி மற்றும் லாகூர் காரிஸன் ரோட்டரி சங்கம் ஆதரவில் செயல்படும் ஆப்ரூ பள்ளிகளுக்கும் சென்று பார்வையிட்டேன்.

இந்த பயணம் எனது கனவை நிறைவேற்றியது மட்டுமல்லாமல், பாகிஸ்தான் ரோட்டரி நண்பர்களின் அன்பையும் நட்புறவையும் பெற முடிந்தது. இரு நாட்டு அரசாங்கங்களும் செய்ய முடியாத காரியங்களை ரோட்டரி செய்து வருவது மனதிற்கு ஆறுதல் அளித்தது. நமது நற்செயல்கள் மூலம் அமைதியையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவோம்.■

## RC சிதம்பரம் சென்ட்ரல் — RID 2981



ரூ.40,000 மதிப்புள்ள ஒரு தையல் இயந்திரம், 3 குப்பைத் தொட்டிகள் அரசு மகளிர் HS பள்ளிக்குக் கொடை அளிக்கப் பட்டன.

## RC குர்காவ்ன் — RID 3011



நீவ் அறக்கட்டளை ஆதரவுடன் நடந்த கருப்பை வாய்ப் புற்றுநோய் விழிப்புணர்வு முகாமில், 100க்கும் மேற்பட்ட பெண்கள், அவர்களுடைய பெற்றோர் பயனடைந்தனர்.

## RC சங்ககிரி — RID 2982




கொங்கணாபுரம் AGN மெட்ரிக் HS பள்ளி மாணவர்களுக்கு ரூ.5,000 நிதி உதவி அளித்தார் சங்கத் தலைவர் K செந்தில்குமார்.

## RC பில்குவா சிட்டி — RID 3012



பொதுமக்களிடையில் தூய்மையைப்பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க, DAV பொதுப் பள்ளி, நகராட்சியுடன் சேர்ந்து தூய்மை இந்தியா நிகழ்ச்சி ஒன்று நடத்தப் பட்டது.

## RC கரூர் யங் ஜென் — RID 3000



சோமூர், வங்கபாளையம் கிராமங்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளின் மாணவர்கள் 235 பேருக்கு இலக்கு அமைத்தல் நிகழ்வு ஒன்று நடத்தப்பட்டது.

## RC சோப்டா — RID 3030



பிரேர்னா மாத்ரிமன்ட் வித்யாயலா-வில் ரோட்டா கிட்ஸ் நடத்திய, மாற்றுத் திறனாளி களுக்கான நல முகாமில் டாக்டர் நீதா ஜெய்ஸ்வால் குழந்தைகளைப் பரிசோதித்து மருந்துகளை அளித்தார்.

# செய்திகள்

## RC ஜெய்ப்பூர் கோஹினூர் — RID 3056



மானசரோவரில் உள்ள ஆஷா தீப் சன்ஸ்தான் நடத்தும் முதியோர் இல்லத்துக்கு மளிகைப் பொருள் பைகள் கொடை அளிக்கப் பட்டன. இந்த இல்லத்தின் பொறுப்பாளர் இந்தச் சங்கத்துக்கு நன்றி தெரிவித்தார்.

## RC புணே சென்ட்ரல் — RID 3131

மகாராஷ்டிரச் சக்கர நாற்காலிக் கிரிக்கெட் குழுவுக்கு விளையாட்டுச் சக்கர நாற்காலிகளைக் கொடை அளிப்பதற்கு 12 உறுப்பினர்கள் தலா ரூ.40,000 பங்களித்தார்கள். இது இந்தச் சங்கத்தின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தியது.




## RC மொராடாபாத் — RID 3100




கண் தானம்பற்றிய விழிப்புணர்வைப் பரப்பும் நோக்கத்துடன் மொராடாபாத் தொழில்நுட்பக் கல்வி அமைப்பு, நலத் துறையின் ஆதரவுடன் பார்வையற்றோர் நடைப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

## RC சோலாப்பூர் நார்த் — RID 3132

பன்டாரக்வாதெ கிராமத்தில் நடைபெற்ற கண் முகாமில் டாக்டர் சுகாஸ் குல்கர்னியும் அவருடைய குழுவினரும் 100க்கும் மேற்பட்ட நோயாளி களைப் பரிசோதித்தார்கள்.



## RC பரெய்ல்லி மெட்ரோ — RID 3110



20 ஆண்டுகளுக்கு மேலாக மாதந்தோறும் நடத்தப்படும் மருத்துவ முகாமில், ரோட்டரியனான டாக்டர் ராஜேஷ் குப்தா சுமார் 90 நோயாளிகளைப் பரிசோதித்தார்.

## RC விரார் — RID 3141

இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் சிறிதளவு பயன்படுத்தப் பட்ட உடைகள், காலணிகள், பொம்மை களைத் திரட்டி, நலிந்த குடும்பங் களுக்குக் கொடை அளித்தார்கள்.



## RC ஸ்மார்ட் சிட்டி நவி மும்பை — RID 3142



நகராட்சியுடன் இணைந்து நடத்தப்பட்ட சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சுமார் 120 கிலோ மின் குப்பை திரட்டப் பட்டது.

## RC தீர்த்தஹள்ளி — RID 3182



தீர்த்தஹள்ளி வட்டத்தில் உள்ள கிராமப்புறப் பள்ளிகளின் மாணவர்களுக்கு இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் பள்ளிப் பைகள், குறிப்பேடுகள், சீருடைகளை வழங்கினார்கள்.

## RC ஹம்பி பேர்ல்ஸ் — RID 3160



ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் DG மணிக்பவார், PDG திருப்பதி நாயுடு 30 பேருக்குப் போர்வை களை வழங்கி னார்கள்.

## RC கோயம்பத்தூர் ஈஸ்ட் — RID 3201



கருப்பராயன் பாளையத்தில் உள்ள முதல்நிலைப் பள்ளி ஒன்றில், மேசைகள் வழங்குதல், நீர் தூய்மைப் படுத்தியை நிறுவுதல், மரம் நடுதல் போன்ற, ரூ.60,000 மதிப்புள்ள சேவைத் திட்டங்கள் வழங்கப்பட்டன.

## RC பனாஜி — RID 3170



உலக இளம்பிள்ளை வாத நாளன்று, மான்டோவி ஆற்றின் மீதுள்ள அடல் சேது பாலத்தில் End Polio Now என்ற பரப்புரை வலியுறுத்தப் பட்டது.

## RC அம்மாப்பேட்டை காவேரி — RID 3203



டெங்குவைத் தடுப்பதற்கென, 800 அரசுப் பள்ளி மாணவர் களுக்கு நிலவேம்புக் குடிநீர் என்ற வழங்கப்பட்டது.

# செய்திகள்

## RC கொல்லம் ராயல் சிட்டி — RID 3211



ரோட்டரி ஹோம் அபயம் என்ற திட்டத்தின்கீழ் புதிதாகக் கட்டப் பட்ட வீடு ஒன்றின் (ரூ.7.5 லட்சம்) சாவிகள் பிரைஸ் ஜோசஃப் என்ற ஆட்டோ ஓட்டுநருக்கு வழங்கப்பட்டன.

## RC சிலிகுரி மிட்-டவுன் — RID 3240

சேது திட்ட அறக்கட்டளை, BSF படை வீரர்கள் உதவியுடன், ஜோவர்பௌ கரையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில், குப்பைத் தொட்டிகள் நிறுவப்பட்டன.



## RC ஈஸ்ட் கோஸ்ட் ராம்னாட் — RID 3212




மறுசுழற்சி செய்யக் கூடிய பிளாஸ்டிக் பாட்டில்களைத் திரட்டுவதற்கான ஆறு குப்பைத் தொட்டிகள் பொகளூர் கட்டண மையத்தில் நிறுவப்பட்டன.

## RC ராய்ப்பூர் — RID 3261

அர்பண் திவ்யாங் பொதுப் பள்ளியில் பயில்கிற, காது கேட்காத, பேச இயலாத குழந்தை களுடன் தீபாவளி கொண்டாடப் பட்டது. இனிப்புகள், பட்டாசுகள், மற்றும் பல பொருட்கள் வழங்கப்பட்டன.



## RC சென்னை திருவான்மியூர் — RID 3232



சின்ன இடையாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த 32 இருளர் குடும்பங் களுக்கு தார்ப்பாலின் தாள்கள் வழங்கப்பட்டன.

## RC கல்கத்தா சவுத் சிட்டி — RID 3291

DGN ராமேந்து ஹோம் சௌத்ரி, PDG உத்பல் மஜும்தர் முன்னிலையில், ஒரு நோயியல் ஆய்வகத் துக்குத் தானியங்கிப் பகுப்பாய்வான் (ரூ.10 லட்சம்) ஒன்று நன்கொடை அளிக்கப்பட்டது.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்



# பழையனவற்றை கழிவதா வேண்டாமா

TCA ஸ்ரீனிவாச ராகவன்

எங்கள் வீட்டில் நாங்கள் ஒரு படுக்கை அறையை மட்டுமே பயன்படுத்துகிறோம். மீதமுள்ள நான்கு அறைகளும் பொருள்களை வைத்திருக்கும் ஸ்டோர் ரூம்களாக பயன்படுத்தப்படுகின்றன. ஏனென்றால் நிறைய சாமான்கள் உள்ளன. ஆனால், அவ்வப்போது சுத்தம் செய்ய வேண்டும் என்று நினைப்பு வரும். பருவநிலை நன்றாக இருக்கும்போது தேவையற்ற பொருள்கள் சிலவற்றை தூக்கிப் போட்டுவிடலாம் அல்லது விற்றுவிடலாம் என்று நினைக்கத் தோன்றும். ஆனால், கடைசியில் எதுவும் நடக்காது. இருக்கிற பொருள்களை இடம்மாற்றி வைப்போம் அவ்வளவுதான். பிடிவாதத்தால் சில காரியங்களைச் செய்யும்போது சண்டை வரும். எரிச்சல்தான் மிஞ்சும்.

உதாரணமாக, எங்களின் இருமகன்கள் 1-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை படித்த போது பயன்படுத்திய நோட்டுப் புத்தகங்களை மூன்று அட்டைப்பெட்டிகளில் வைத் திருக்கிறோம். அவர்களுக்கு இப்போது 30 வயதுக்கு மேல் ஆகிறது. ஆனால், புத்திசாலித்தனமாக அவர்களின் பாட புத்தகங்களை மற்றவர்களுக்கு பயன்படட்டுமே என்று என் மனைவி கொடுத்து விட்டாள். இந்த நோட்டுப் புத்தகங்களை இன்னமும் வைத் திருப்பதில் எந்த பயனும் இல்லை. இவற்றை தூக்கி எறிந்துவிடலாம் என்று நான் அவளிடம் பலமுறை கூறினேன். ஆனால், அந்த யோச னையை கோபத்தின் மூலம் அடக்கிவிட்டாள் என் மனைவி. அதிலிருந்தே முட்டுக்கட்டை நீடிக்கிறது. என்னிடம் சில உடைந்து போன கிடார் இசைக் கருவிகளும் கிரிக்கெட் மட்டையும் இருந்தது. அவற்றையும் வைத்திருப்பதில் பயனில்லை என்று கூறினேன். ஆனால், யாரும் ஒத்துழைக்கவில்லை. மூன்று ஆண்டுக்கு ஒருமுறை இது நடக்கும். வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது.

ஒருமுறை எனது இரு மகன்களும் வந்திருந்தபோது, உங்களுடைய பொருள்களை எடுத்துச் செல்லுங்கள் என்று கண்டிப்புடன் கூறினேன். ஆனால், அவர்கள் உறுதியாக மறுத்துவிட்டார்கள். நான் எரிச்சலுடன், இதை ஏன் இங்கே வைக்கிறீர்கள் என்று கேட்டேன். உடனே அவர்கள், இங்கு இருக்கும் அறைகள் எல்லாம் உங்களுடையது தான். எங்களுடையது அல்ல என்று பதில் கூறினர். பொருளாதாரத்தில் இதை சப்ளைதான் தேவையை ஏற்படுத்துகிறது என்பார்கள். ஆனால், அதற்கு நான் வேறு ஒரு விளக்கம் வைத்திருக்கிறேன். எது வீட்டில் இருக்க வேண்டும், எது கூடாது என்பதை அவர்களின் மனைவிதான் தீர்மானிக்கிறார்கள் என்று நினைக்கிறேன்!

இதற்கிடையே, சுமார் 400 புத்தகங்களை நான் படித்த கல்லூரிக்கு கொடுத்துவிட்டேன். இந்த ஆண்டு அந்த கல்லூரி தனது 125-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது. ஆனால் பிரச்னை என்னவென்று பார்த்தால், நான் இடமில்லாத காரணத்தால் எனக்குத் தேவையான பொருள்களை வெளியில் கொடுத்துவிட்டு, தேவையில்லாதவற்றை வீட்டில் வைத்திருக்கிறேன்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் வீட்டை ஒழித்தபோது ஒரு அழகான வேலைப்பாடுடன் கூடிய மரப்பெட்டியை கண்டோம். அது எப்படி இங்கு வந்தது என்பதும் தெரியவில்லை. ஆனால், எப்படியோ எங்கள் வீட்டுக்கு அது வந்துவிட்டது. அதில் சில பழைய பொருள்களை வைத்து பூட்டி வைத்திருந்தோம். அதில் எப்போது என்ன பொருள்களை வைத்தோம் என்பதுகூட நினைவில்லை. குறைந்தது 22 ஆண்டுகளுக்கு முன்பு இருந்திருக்கலாம். இதனிடையே அந்த பெட்டியின் சாவியை நாங்கள் தொலைத்துவிட்டோம்.

இப்போது பிரச்னை என்ன வென்றால், பித்தளை கைப்பிடிகள் மற்றும் பூட்டின் தாழ்ப்பாள் உடையாமல் அந்த பெட்டியை எப்படி திறப்பது என்பதுதான். அவை மிகவும் பழையது, எளிதில் உடையக்கூடியவை. எனவே பூட்டை திறக்கும் தொழிலாளியிடம் சென்றோம். அவரால் திறக்க முடிய வில்லை. அடுத்து மரவேலை செய்பவர் (தச்சர்) ஒருவரிடம் சென்றோம். அவராலும் முடிய வில்லை. கடைசியில் முயற்சியை கைவிட்டு அப்படியே அறையில் வைத்திருந்தோம். இது நடந்தது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு.

கடந்த வாரம், சாமான்கள் வைத்திருந்த அறையில் ஹீட்டரை தேடியபோது மீண்டும் அந்த மரப்பெட்டி எங்கள் கண்ணில் பட்டது. தூசி படிந்த பிளாஸ்டிக் கவர்களுக்கு அடியில் அவை இருந்தது. இந்த முறை அந்த மரப்பெட்டியை பழங்கால பொருள்கள் விற்பனையாளரிடம் கொண்டு சென்றோம். அவர் ஒரு சில நிமிடங்களில் பெட்டியை திறந்துவிட்டார். அதில் ஒரு டஜனுக்கும் மேலான விருதுகள் இருந்தன. அவற்றில் ஒன்றிரண்டுதான் என்னுடையது. மீதமுள்ளவை எனது மகன்கள் மற்றும் மனைவியினுடையது.■

ADVT.





So Far 33 Batches Completed...

1027 Certified... 170 Starters...& Counting...

Rotary Club of VIRUDHUNAGAR | PG | IDHAYAM SAY IDHAYAM • SPELL HEALTH

Joint Initiative



# RYLA

**Be an Entrepreneur**

# BECOME AN ENTREPRENEUR

## IN 3500 MINUTES

**ROTRACTORS** | **3rd / 4th** YEAR **UG STUDENTS** | **1st / 2nd** YEAR **PG STUDENTS**
Course Completed **GRADUATES & POST GRADUATES** between the age of 18 and 28

STOP WORRYING ABOUT JOB(S); **START PRODUCING JOB(S);**

*Your Takeaways...*

- **12** DEVELOP YOUR BUSINESS in 12 EASY STEPS
- **12** PROCURE YOUR INVESTMENTS in 12 DIFFERENT SOURCES
- **20** CREATE VISIBILITY to YOUR BIZ using 20 MARKETING TOOLS
- **06** CLOSE SALES DEALS in 06 EASY STEPS
- **05** FINE TUNE YOUR MOST IMPORTANT 05 SKILLS for an ENTREPRENEUR

## UPCOMING BATCH DATES

ONLY 32 SEATS PER BATCH

**34.0 : 16th, 17th & 18th FEB 2024**

**35.0** : 15th, 16th & 17th MAR 2024

**36.0** : 19th, 20th & 21st APR 2024

- FREE SINGAPORE TRIP*
- BUSINESS PLAN (BIZCONNECT)
- 200+ PAGES E-BOOK
- INVESTMENT SUPPORT* (INVEST mentoring)
- FREE ONLINE SESSIONS (CREA)

# FLY TO SINGAPORE*

## ENROLL TODAY

*Win a Surprise...*



**VENUE**
Hotel St.Antony's Residency
Sipcot Industrial Growth Center
Gangaikondan, Tirunelveli

**INVESTMENT**
Rs.2500 Only
(Incl. Accommodation / Food / T-Shirt / Certification / E-Book / CREA Programs)
*Terms & Conditions Apply

**CONTACT**
94431 66650
94433 67248

Powered by Srinidhi Building Sustainable Relationship | K.V. Ramaswamy MEMORIAL TRUST

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24 | issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

ADVT.

